உ

சிவமயம்.

ஸ்ரீ மாணிக்கவாசகர் என்னும்

# திருவாதவூரடிகள்புராணம்.

## கடவுண்மாமுனிவர்

அருளிச்செய்தது

இது

பிரசங்கபாநு

## ஸ்ரீ. இராஜாராம் பிள்ளையால்

பரிசோதிக்கப்பட்டு,


கணேச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

சென்னை

1923


இதன் விலை அணா ௮

சிவமயம்.

# திருவாதவூரடிகள்சரித்திரச்சுருக்கம்.

திருவாதவூரடிகளாவார் அருட்பெருங்கவிகள் பாடியும், அற்புதங்கள் செய்தும், திருநீறு முதலிய சிவ சின்னங்களை விளக்கியும், பரசமயங்களைக் கண்டித்தும் சைவசமயத்தை நிலைபெறுத்திய சமயகுரவர் நால்வருள்ளே ஒருவர் இவர் மாணிக்கவாசகர் எனவும் சொல்லப்படுவர் மாணிக்கவாசகர் என்பது சிவபிரானால் இடப்பட்ட காரணத்திருநாமம். திருவாதவூரர் என்பதே பிள்ளைத்திருநாமம். இவருடைய ஊர் பாண்டிமண்டலத்துள்ள திருவாதவூர்; குலம் அமாத்தியப்பிராமணகுலம்; தந்தையார் பெயர் சம்புபாதாசிருதர்; தாயார் பெயர் சிவஞானவதியார் அரிமர்த்தன பாண்டியராசன் காலத்திலே தலையெடுத்துப் பரம்பிய பௌத்த சமயத்தைப் பரிகரித்துச் சைவசமயத்தைத் தாபிக்கும் பொருட்டுச் சிவாஞ்ஞையினால் நந்தியந்தேவரே அங்கேவந்தவதரித்துத் திருவாதவூரடிகள் என வழங்கப்பட்டனர்

திருவாதவூரடிகள் பதினாறு வயசினுள்ளே எக்கலையுங் கற்றுணர்ந்து மிக்க சாமர்த்தியமுடையராய் விளங்கினார். அரிமர்த்தனபாண்டியன் அவரது தகுதியைத் தக்கோர்சொல்லக்கேட்டு அவரை அழைத்துத் தனக்கு முதன்மந்திரியாக்

கித் தென்னவன் பிரமராயன் என்னும் சிறப்புத்திருநாமமுங் கொடுத்து தன்னரசியலையும் நடத்தி வரும்படி செய்தனன். அரசியலை நடாத்து மதிகாரமுடையரேனும் சிவபிரானுடைய திருவடிக்கே பற்றுடையவராயினர் அப்போது சோழமண்டலக் கடற்கரையிலே குதிரைகள் வந்திருக்கின்றன என்றறிந்த பாண்டியனை அவரை அழைத்துத திரவியங் கொடுத்துக் குதிரை வாங்கிவரும்படி அனுப்பினான்

குதிரைவாங்கச் சென்ற திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையிலே ஒரு குருந்தமரநீழலிலே வீற்றிருந்த சிவபிரானாகிய ஞானதேசிகரைக்கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு அன்போடும் வணங்கி "அடியேனை அடிமைகொண்டருள்க" என்று பிரார்த்தித்து. அவர்பால் ஞானோபதேசமும் பெற்றுக் குதிரை வாங்கக் கொண்டுபோன திரவியத்தையுஞ் சிவனடியார் கையிற் சமர்ப்பித்துச 'சிவானந்தப்பேறுடையாராய்ப "பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கையராயினர்"

இச்செய்தியைக் கேள்வியுற்ற பாண்டியன் பெரிதுங் கோபங்கொண்டு "இவரோடுங் கடிது வருக" என்று ஒரு திருமுகம் அனுபபினான் திருவாதவூரடிகள் அதனைச சிவபிரானுக்கு முறையிடு செய்து அவர் கொடுத்த உயர்நத இரத்தினத்தையும் பெற்றுக்கொண்டு பாண்டியன்பாற் சென்று அதனைக்கொடுத்து மகிழ்வித்துக குதிரைகள் ஆவணிமாசத்திலே மூலநாளில் வரும் என்று சொலலியிருநதார் பாண்டியன் திருவாதவூரடிகள் சொன்னது பொய்யென்று தூதுவரால் அறிந்து அவரைச சிறைச்சாலையில் வைத்து வருத்தி

ஞன் அப்போது சிவபிரான் நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியனுக்குக் காண்பித்துத் திருவாதவூரடிகளைச் சிறைச்சாலையினின்று விடுவித்துப் பின்னும் அவைகளை நரிகளாக்கினார்.

பரிகளெல்லாம் நரிகளாய்ப்போனதை அறிந்தபாண்டியன் திருவாதவூரடிகளை வெய்யிலினிறுத்திப் பின்னும் வருத்தினான். அப்போது சிவபிரான் வைகையாற்றினை மதுரையை அழிப்பதுபோலப் பெருகச்செய்தும், ஒரு பிட்டுவாணிச்சிக்குக் கூலியாளாய் வந்து வைகைக்கரையடைத்தற்கு மண்சுமந்தும், அடிபட்டும் திருவாதவூரடிகள் பெருமையைப் பாண்டியறகு நன்கு புலப்படுத்தி அவரை விடுவித்தார்.

அவரும் பாண்டியனை நீங்கித் திருப்பெருந்துறையிற் சென்று சிலநாள் வைகிச் சிவாஞ்ஞையினால் உத்தரகோசமங்கை முதலிய பற்பல சிவஸ்தலங்களுக்குப் போய் அருட்கவிகளும் பாடிச் சிவபிரானைத் துதித்துக்கொண்டு சிதம்பரத்தை யடைந்தார் சிதம்பரத்திலே பௌத்தர்களோடு வாதஞ்செய்து வென்றபின் அவர்கள் யாவரையுஞ் சைவராக்கிச் சிவசமயத்தை நிறுத்தி ஊமைப்பெண்ணைப் பேசுவித்துச் "சிதம்பரமே சிவலோகமெனக் கண்டு"வீற்றிருந்தருளினார்.

அங்கே சிவபிரான் ஒரு வேதியராய்ச் சென்று திருவாதவூரடிகளை அடைந்து திருவாசகத்தை எழுதிக்கொண்டு அகப்பொருட்கோவையும் பாடுவித்து அதனையும்எழுதித் தமது கைச்சாத்துமிட்டுப் புத்தகத்தைச் சேமித்துக்கொண்டு மறைந்துசென்று பொன்னம்பலத்து வாயிற்படியில் வைத்தருளினார். அதனைக் கண்ணுற்ற அடியார்கள் திருவாதவூரடிகளை

அடைந்து பொருள் வினவினர் திருவாதவூரடிகள் கனக சபையிலே போய்த் தம் நூற்பொருள் இவரே என்று நடராசமூர்த்தியைச் சுட்டிக் காட்டிவிட்டு உள்ளே புகுந்து அவரோடும் இரண்டறக்கலந்தருளினார்.

திருவுத்தரகோசமங்கைப் புராணம் திருவாதவூரடிகள் முற்பிறப்பை இங்கே கூறியதற்கு வேறுபடக்கூறும்.

திருவாதவூரடிகள் சரித்திரச்சுருக்கம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# திருவாதவூரடிகள்புராணம்.

## சிறப்புப்பாயிரம்:

### விநாயகர் துதி.

எழுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா* முகத்தின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம். (க)

### நடராசர் துதி.

கலிவிருத்தம்.

இதந்தரு மடந்தையொ டியைந்துயி ருடம்புபோல்
விதம்படு லகங்களில் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொ டுதுந்துபி ளெங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம். (உ)

---

* கவளமா - யானை. கவளமா களிற்றின் என்னும் பாடம்.

## சிவகாமியம்மையார் துதி.

ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா*
நாடக னனந்தசு நன்குபுனை பங்கினள்
ஏடக மணம்பொருவ வெங்கணு மியைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம். (௫)

## சுப்பிரமணியக்கடவுள் துதி.

துங்கமத கும்பவுயர் தும்பிமுக னெம்பி†சீர்
தங்குஞெகி ழுஞ்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதா
ளங்கைமலர் கொண்டுமிகு மன்புட னிறைஞ்சுவாம். (௬)

## நூல்வரலாறு.

தென்பொதிய மாமுனி சிறக்கவரு ளெண்ணெண
இன்பவிளை யாடல தெனுங்கடலு ளுயேன்
மின்பயிலு மாமதுரை மேவுதமிழ் மாறன்
துன்பமற நல்குகதை சொல்லலுறு கின்றேன். (௭)

## நூல்நுதலியபொருள்.

அற்புத னிருந்தருள் பெருந்துறை யடைந்தே
சிற்பர முணர்ந்துதிரு வாசக முறைப்பார்
முற்பக லருந்தவ முயன்றுபெறு மன்பால்
உற்பவ மொழிந்தமை மொழிந்திட ரொழிப்பாம். (௮)

---

* அணங்கிலா என்பதனை "முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாம்" என்றுற்போற்கொள்க. † எம்பி இளையோன் அது "எம்பியுமனுசனுமிளையோன்பெயரே" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தாலறிக.

## அவையடக்கம்.

கொண்டலன கண்டனருள் கொண்டு தமிழ்பாடித்
தொண்டுபடு மன்பர்செயல் சொன்னநெறி தன்னால்
வண்டமிழ் தெரிந்தவர்கண் மற்றெனுரை குற்றம்
உண்டெனினு நன்கிதென வுள்ளுவர்க ளெள்ளார் (எ)

## நூற்பயன்.

இந்தவள நற்கதை யியம்பினர் நயந்தே
சிந்தையி னினைப்பவர் செவிப்புல னிறைப்போர்
புந்திமகி ழப்புவி புரப்பருடல் விட்டால்
அந்தவுல கந்தனி *லரன்சபையில் வாழ்வார். (அ)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று

ஆ. திருவிருத்தம் - அ.

# மந்திரிச்சருக்கம்.

கலிவிருத்தம்.

முக்கணொரு நான்குபுய வைந்துமுக முன்னோன்
சொக்கனரு ணன்மைபெறு தொன்மைதிகழ் நன்றா
டக்கடவி டத்தையர னுக்கருள்வ தென்றே
மைக்கடலில் வைகலொழி வைகைவள நாடு. (க)

நீண்டகயி லைக்கிறை நிகழ்த்தவரு ளாலே
பூண்டமுனி மெய்த்தமிழ் புகன்றதிரு நாடு
மூண்டபகை செற்றுலக முற்றுமர சாளும்
பாண்டிய னலங்குலவு பாண்டிவள நாடு. (உ)

* அந்தவுல கத்தினில் என்றும் பாடம். † முக்கணனொர் நான்குபுய னைந்துமுகன் முன்னோன் என்றும் பாடம்.

வேறு,

மேவுமூர் வளம்பலவு மிருந்துளநா டதனினலம்
பாவுமூர் பழமறைதே ரந்தணர்கள் பயின்றுளவூர்
தாவுமூர் * விடையேறி தங்கியவூ ரதுகுறையுந்
தேவரூ ரினுமேன்மை சிறந்ததிரு வாதவூர். (ங)

அந்நகரின் மறையோரி லருள்புனைமாத் தியர்†குலத்திற்
றன்னிகரில் சைவநெறித தலைவனவன் றனிதேவி
மின்னனையா டிருவயிற்றின் மென்கொடிபங் கினனருளாற்
றென்னவன்செங் கோன்முதல்வர் திருவவதா ரஞ்செய்தார். (ச)

வேறு.

பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிரு ளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற் றள்ளுஞ் சமயதா ரகைம (ங்)க
எம்மையா ளுடையா னன்ப ரிதயதா மரைக ளெல்லாஞ்
செம்மையாய் மலர ஞான தினகர ருதயஞ் செய்தார் (ரு)

## நாமகரணம்.

வேறு.

மருவாத நெறிபூண்ட மத்தனெனும் புத்தனுடன்
பெருவாது வென்றசிவன் பெருநாம மிகவளர
ஒருவாத பிறவியிற்சென் றொருநாம முறுதவர்க்குத்
திருவாத வூரரெனுந் திருநாமந் தரித்தார்கள். (சு)

வேறு.

தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்கு ரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண் டாகி
அவமெனுங் களைக ணீங்கி யாக்குவோ னருளா லுண்மைச்
சிவமெனும் விளைவுண் டாக வளர்ந்தது தெய்வச் சாலி. (எ)

---

*தாவுமூர் = அனபர்களாற் பறறப்படுமூர் என்பதுமாம்,
† அமாத்தியர் = அரசனுக்கு அருகாமையிலிருப்பவர்,

## அன்னப்பிராசனம்.

வேறு

தேனினொடு கரும்பினொழுஞ் செழும்பாகு முக்கனியும்
ஆனினறும் பாலுமுட னளவியுளங் களிகூர
ஈனமிகும் பலயோனிப் பிறவியெனும் பசிதீர
ஞானவமு துண்பார்க்கு நயந்தமுது நுகர்வித்தார். (அ)

## சௌளம்.

காயமுட னுயிர்முயலுங் கருமமெலாம் பரனருளாற்
றாயமனத் துணர்ந்துவினைத் தொகையெழுதி நாடோறும்
ஆயதுயர் சுகமளிக்கும் யமன்கணக்கி லரும்பாவத்
தீயசிகை யில்லார்சகுச சிறந்தசிகை வருவித்தார். (கூ)

## வித்தியாரம்பம்.

குவலயமங் கையைநீடு கோலஞ்செய் தரும்பொன்னும்
நவமணியுங் குவைசெய்து நன்குடன்மங் கலநாளிற்
றவமணமுந் திருநீற்றின் றன்மணமுந் தவழுந
சிவமணமும் பெறக்கல்விச செல்விமணம் புணர்வித்தார். (க0)

## உபநயனம்.

இதுநூன்மற் றல்லதுநூ லில்லையெனு மறுசமய
விதநூலுந் தலநூலும் விரிந்தபுரா தனநூலும்
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறைநூ லுஞ்சைவ
முதநூலுந் தரிப்பார்க்கு முந்நூலுந் தரித்தார்கள். (கக)

மிக்கலையுஞ் செழுநீரு மதிக்கலையு மிலைக்குமவர்
\$அக்கலையுந் தோளர்புலி யதட்கலையர் நல்லருளால்
ஒக்கலையும் ‡ பிறக்கலையு மொழித்திடுமா கமகலையும்
எக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டாண் டெல்லையினில். (கஉ)

‡ பிறக்கல் — பிறவி

\$ அக்கு - என்பு; உருத்திராக்கம்,

உழைக்கரனுக் கன்பாகி யுண்மையறிந் துலகமெலாம்
பிழைக்கவருட் கவிபாடும் பெரியவர்தஞ் செயலெல்லாந்
தழைத்தகலைத் தமிழ்மாறன் றக்கோர்க ளுரைப்பவறிந்
தழைத்துரிமைத் திறநல்கி யகலாதன் பாயினன். (கங)

சங்கோல மிடும்பழனத் தடம்புடைசூழ் வாதவூர்
எங்கோவின் செய்கையறிந் தியல் * புடையோ ரெனநாடிப்
பொங்கோத வேலைநிலம் புரந்துபெரும் பகைதுரந்து
செங்கோன்மை முறைநடத்துஞ் செழுந்தலைமைத் திறநல்கி. (கச)

வேறு

தென்னவன் பிரம ராய னென்றருள் சிறந்த நாம
மன்னவர் மதிக்க நல்கி வையக முய்வதாக
மின்னவ மணிப்பூ ணுடை வெண்மதிக் கவிகை தண்டு
பொன்னவிர் கவரி வேழ மளித்தனன் பொருநை நாடன். (கரு)

இந்திரச் செல்வம்போல விசைந்துள வின்பமெய்தி
மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாத வூரர்
தந்திரத் தொகுதி சூழத்தாரகை கணங்க ளோடும்
அந்தரத் திழிந்து மண்மே லமர்ந்தவெண் மதிய மொத்தார். (கசு)

பெருங்கட லுக நீதி பெருக்கியே தருக்கு நல்கி
இருங்கட கத்தோண் மேல்வைத் தினைடருள் பூண்ட கோவுங்
கருங்கட நாக மெட்டுங் காளமா நாக § மெட்டும்
பரங்கெட வுலக பாரம் பரித்தனர் திருத்த மிக்கார். (கஎ)

காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமுங் கண்ணு மாகி
எதிலர்க் கிடும்பை யாகி யிறைஞ்சினர்க் கின்ப மாகி
ஆதுலர்க் கன்னை யாகி யரனடிக் கன்பு மிக்கார்
பூதலத் திறைவ னுணை பொதுவற நடத்து நாளில். (கஅ)

---

* இயல்பு - கல்வியறிவொழுககமுதலியவற்றின்றகுதி.

§ நாகம்=யானை § நாகம் = பாம்பு

பற்பல பொருளா யுள்ள பாசமு மதனை மேவி
உற்பவ பேத மான வுடம்புயி † ரடுக்கு மாறும்
அற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாந்
தற்பர னடத்து மாறு முணர்ந்தனர் சைவ நூலின்.* (க௯)

அவ்விய மனத்தி னாலே யனைத்துரு வகைகள் கூடி
இவ்வுயிர் பிறந்து மீள விறந்திடு மென்றி ரங்கி
வெவ்வெயில் வருத்த முற்றார் மென்னிழல் விரும்பு மாபோல்
நவ்வியு மழுவு மேந்து நம்பனுக் கன்பு மிக்கார். (உ0)

தீத்திற வினையினாலே சிறைப்படு முயிரை யெல்லாம்
பார்த்தன ருலக வாழ்விற் பயனிலை யென்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகு மாபோல்
நீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதி நீதி. (உக)

வரமுடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவ ருண்மை
தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாத மெய்திப்
பரமவ னெழுந்து மொன்றும் பராபர முணர்த்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்று கூடுதல் வேண்டு மென்று. (உஉ)

மறகட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச்
சற்குரு வுளனே யென்று நாடுவார் தர்க்க மெல்லாஞ்
சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்ல லுற்றார். (உ௩)

வளங்கெழு புவியி லுள்ள வாவியுங் காவு மோடி
விளங்கிசை வண்டு தண்டேன் மிகுமலர் தேடு மாபோல்
உளங்கொள நிமல னன்னூ லோதின ருண்மை யெல்லாம்
அளந்தறி வுணர்ந்த நீரர் யாவரென் றாயு நாளில். (உ௪)

---

† ஒருங்குமாறும் என்றும் பாடம்

* திரிபதார்த்தங்களாயுள்ள பதி பசு பாசங்களைச் சைவாகமத்தின் ஞானகாண்டம்பற்றி உணர்ந்தார் என்பது இதன்றாற்பரியம். இன்னும் இதனை திறம் இன்றி விரிப்பிற்பெருகும்; "சனமார்க்கஞ் சகலகலை" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்துட்காண்க.

வேறு.

மேதகு வனிதைய ரெங்கணும் வீசிய கவரி யசைந்தெழ
மாதவ முனிவர்க ளந்தணர் மாசறு கவிஞர் செறிந்திட
ஏதமின் மதிகுல புங்கவ னேர்கெழு மணிமுடி யின்றிரள்*
ஆதவன் மிசையெழ வந்தரி யாசன மதனி லிருந்தனன். (உரு)

தாதகி மார்ப னெடும்புவி சார்தரு மாழ்கட லின்கரை
தீதில மாதுர கங்கொடு சீர்கெழு மாரியர் வந்தனர்
ஏதமி லாயது கணடனமி யாமென வேதொழு தன்பொடு
மேதினி காவலன் முன்சில மேதகு தூதர்வி ளம்பினர். (உசு)

ஏவல்செய் வார்களி லிங்கிவ ரேபரி வானவ ரென்றிகன்
மேவிய தூதரை வன்றிறன் மீனவர் கோனு மகிழ்ந்துபின்
வாவுநன் மாதுர கங்கொடு வாருமெ னுவுட லூர்தன
தாவியு மாயர னன்புடை யார்முக நாடி மொழிந்தனன். (உஎ)

மீனவர் கோன்மொழி யின்படி வேணிய னேச ரிசைந்தபின்
ஆனன சோதியு டன்புவி யாள்பவன் வாசிகொ ளும்படி
வானவி மானமெ னுந்திரு வாழ்வுள கோயில் புகுநதுதன்
ஈனமி லாநெறி வந்தபொன் னேழெழு கோடி வழங்கினன். (உஅ)

விற்படை வெற்றி மடந்தையு மிகக மலர்த்திரு வும்பயின்
மற்புய வெற்பின னங்கயல் வைதத வலத்தன் வழங்கிய
பொற்புமி குததத னங்கொடு பொற்கவ னப்பரி கொணடிட
நற்பய ணத்தை முயன்றனர் நககனை நெக்குணர் கின்றவர். (உகூ)

மெய்த்தவ ருற்ற பெருந்துறை விததக ரைக்குறு கும்படி
இத்தகு நற்பொருள் கொண்டு¶நி ரிப்படி யிற்செலு மென்றலின்
அத்தகு புத்தி யொழிந்துயி ரற்புத முத்தி பெறும்படி
உய்த்துள சத்தி யுடன்பொரு வொத்தன னுத்தம பஞ்சவன். (உகூ)

* முடியின்றிரள - முடியுறுப்பைாதன்கூட்டம்.
¶ நிர், நீர் எனபதன குறுக்கம்,

பற்றிலர் பெற்ற சிவன்*கழல் பற்றின ரைக்கலை வண்டமிழ்
உற்ற மலைக்கிறை வன்றனை யொக்க மதித்தருள் கொண்டலை
¶விற்றுவ சத்த னெடும்படை மிக்க புலிக்கொடி யன்படை
மற்றுள கொற்றவர் தம்படை வர்க்கமு முற்கொ டெழுந்தன. (௫௧)

உக்கிர நசசுர கங்களி னுச்சி பணிப்ப வசைந்தடி
வைக்கு முரத்தன வெங்கய மைக்கிரி யொக்க மலிந்தன
பக்கமு முற்பிற குந்துடி பற்பல கொட்ட வியங்குவ
தக்கம னத்தில் விரைந்துள தத்து பரித்திரள் வந்தன. (௫௨)

வேறு.

கொங்கணர் கலிங்கரொடு கொங்கர்துளு நாடா
சிங்களர்க ளொட்டியர் தெலுங்கரொடு சீனா
தங்குதிறன் மாளவா மலாடர்தமி லொன்றாய்
எங்கணு மிடைந்தவர்க ளெண்ணமுடி விலலா. (௫௩)

இத்திற மெழுந்தபடை யெங்கணுநெ ருங்கத்
தத்துபரி மீதுள தமிழ்க்கவிஞா சூழச்
சித்திர மடந்தையர் திரண்டிரும ருங்கு
மொய்த்துவர வீணைகுழன் முன்னரிசை கொள்ள (௫௪)

கட்டுமள கத்தினர் கனத்துளத னத்தார்
பட்டுடை மருங்கினர் பணிக்கவரி வீச
வட்டமதி வெண்குடை வயங்கமுர செங்கும்
கொட்டவுயர் காளமொடு கோடுகள் கறங்க. (௫௫)

மிண்டியுள பாடகர் வியந்துகர வாரங்
கொண்டுபுடை சூழவெழில சோகுழலர் பாடத்
தண்டரள மல்கிய தனிச்சிவிகை மேல்கொண்
டெண்டிசை மிகப்புகழ் கயற்கொடியி லங்க. (௫௬)

---

* பற்றிலர் பெற்ற சிவன் - இருவகைப்பற்று மற்றமெய்ஞ்ஞானிகள் அத்துவிதமாய்க்கலந்த சிவன். "அற்றவர்க்கற்ற சிவன்" என்பது மது. ¶ வில்துவசத்தன் = சேரன்,

மங்கல தினத்திலெடு மாளிகைய கன்றே
துங்கமணி யக்கையணி சொக்கரைவ ணங்கி
அங்குவிடை பெற்றுமறை யந்தணரின் மிக்கார்
திங்கண்மர பிற்குருசில் கோயிலுழை சென்றார். (௫௭)

சென்றுதமிழ் மாறனருள் பெற்றெழில்சி றக்கும்
வென்றிவள வன்புவியின் மேன்மையொடு செல்வார்
குன்றனைய மாடமொடு கோபுரநெ ருங்கும்
நன்றிமது ரைப்பதியை நன்*கொடுக டந்தார். (௫௮)

நெடுங்குட திசைக்கட னிறைந்தொலிசி றந்தே
உடைந்துதய நற்றிசையி லுற்றுவரு † மாபோன்
மிடைந்தபதி யுங்கடமும் வெற்புமிவை யெல்லாங்
கடந்துவதி ‡ சென்றுபல காவதம கன்றார். (௫௯)

என்றுமுள பொன்றுமுட ¶ லென்னுநகர் தோறுஞ்
சென்றவழி மாறியொரு தெய்வவழி செல்வார்
நன்றியுள முத்திபெற நம்பர்தம தன்பால்
அன்றுயர் பெருந்துறை யடைந்தபடி சொல்வாம். (௬௰)

மந்திரிச்சருக்கம் முற்றிற்று

ஆக திருவிருத்தம் - ௬௮.

---

* நன்கு - நற்சகுனம். † உற்றுவருதல் - பெருகிவருதல்; உற வென்னும் எச்சத்திரிபுமாம். ‡ வதி - வழி. ¶ என்றுமுள பொன்றுமுடல் - எந்நாளும் காரணத்திலுள்ளனவாய்க் காரியமாய்த்தோன்றித் தோன்றி அழியுமுடம்புகள். உள வினையெச்சமுற்று.

# திருப்பெருந்துறைச் சருக்கம்.

[illegible]

வேறு.

பழமறை முழுதுண ரந்தணர் பலர்தொழ நடமுயல் கின்றவர்
மழுவுழை கரமிசை கொணடிட †மருவிய கவுரி மகிழ்ந்திட
விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலில்
அழகுறு தபனிய மண்டப மதனிடை யருள்கொ டிருந்தனர். (க)

மதுமலர் கரமிசை கொணடுநின் வழிவழி யடியவ ரென்றுதம்
முதுமறை தெரிய மொழிந்தெதிர் முறைமுறை முனிவர் வணங்கி
இதுபர னருளை வழங்குவ தெனவரி பிரம ரெழுந்துநம் [னர்
பதநிலை பெறவரு ளென்றிரு பரிபுர கழல்கள் பணிந்தனர். (உ)

பரவரு மணிகள் விளங்கிய பணவர வணியர னங்கமு
மருவிய தரள வடந்திகழ் மதிநுதன் மலைமக ளங்கமும்
இரவியு மதியு மிருந்தென வெதிரெதி ரிலகுதல் கண்டனர்
அரகர சிவசிவ வென்றுள மயாவுற வழுதன ரன்பினர். (௩)

அடியொழி மரமென நொந்துபி னவனியில் விழுவதொழிந்து
நின், உடனுறை பெருமை வழங்குவ துளதுகொ லெனநினை நெஞ்
சொடு, மடலவிழ் கடிகம ழைந்தரு மலர்பல முறைமுறை சிந்தி
முன், இடமிஃ தெனமகி ழிந்திர னிமையவ ரெவரு மிறைஞ்சினர்.()

வேறு.

திண்டிறன் மிகுஞ்சுரிகை யுந்திகழ் பிரம்புங்
கொண்டருகு நின்றகுரு நந்தி*யருள் கூரப்
புண்டரிக மாதுபுவி மங்கையெழில சிங்கா‡
அண்டர்மட வார்களுல கன்னைபுற மன்ன. (ரு)

---

இடம=வாமபாகம்,
* அகசந்தானத்துள் முதற்குரவராகலின் குரு நந்தியென்றார்
‡ சிங்கா=குறையாத

துன்னுபல பூதகண நாதர்புடை சூழக்
கின்னரர்கள் கந்தருவர் கீதவிசை பாட
மின்னுமுடி மன்னுரதி வீசுதிரை நன்னீ
என்னவொளிர் சாமரை யெழுந்தழகு செய்ய. (சு)

இந்தவள மல்குசபை யின்னல்கெட மன்னுந்
தந்தைமணி மன்றிலுறை தாண்டவ பதத்தோன்
செந்தமிழின் வந்தசிவ ஞானவமு துண்டாம்
அந்தமி லருட்கடலை யாண்டருள வேணடி. (எ)

மைத்தகடன் மண்ணவர்க டம்முருவில் வம்மென்
றத்தகைய பத்தர்கண நாதரை யழைத்தே
சித்திதரு தேசிகர் சிறந்தவடி வங்கொண்
டுத்தம நெடுங்கயிலை யோங்கலது நீங்கி. (அ)

கொன்னெறுழி †தன்னுருவு கொணடொருவர் தேடும்
பொன்னடி யெனுஞ்சலச மண்மிசை பொருந்தப்
பன்னுமறை வல்லவர் பரிந்தழல் வளர்ப்பா
மன்னுமொரு தெய்விக வளம்பதியில் வந்தா. (கூ)

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தால்
எம்பர னருட்கரையி லேறுதுறை யாமால் *
அம்புவி‡மொழிந்துள பெருந்துறை யதன்பா. (க0)

ஈனமில் பெருந்துறை யெனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தந்
தேனின மூரன்றெழு செருந்திகள் பொருந்தி. (கக)

---

* ஆல் — அக்காரணத்தால்.
† எறுழி — பன்றி

கோடுகவி னும்பெரிய கோங்குமிக வோங்கும்
பாடல நெடும்பலவு பைங்கமுகு தெங்கு
நீடளி யிரைத்தெழு நிரைக்குரவு சூதம்
ஏடவிழ் செழுங்கவி ரிலஞ்சிகண் மலிந்து. (கஉ)

மாக்கவின் மிகுங்கலப மஞ்ஞைஞசிறை யன்னங்
கூக்குரல் செயுங்கரிய கோகில நெருங்க
மீக்குலவு மந்தியின மூந்துதொறு மென்மேல்
ஆர்கருஞிமி றெங்கணு மடாந்திசை தொடங்க. (கங)

வீழ்ந்தநற வதருளி விழிப்புனல தாகச
சூழ்ந்துமுரல் வண்டினிசை தோத்திரம தாகத்
தாழ்ந்துமல ரேந்தியிறை தன்றிருமு னின்றே
வாழ்ந்தருகு மன்பரென மன்னுமொரு பூங்கா. (கச)

வாய்ந்தவளை மிவ்வகை வயங்குமத னுப்பண்
ஏ*ந்தரு தவசினை தளங்கணு நெருங்க
ஈத்திக ழுறக்குழை தழைந்ததுமினிர•மெய்ம்மை
பூத்தறிஞா போனநெறியில் பொருந்துமொர் குருந்தம். (கரு)

ஆர்வமுடன் வந்தின மகபபட வனேக்கும்
†பார்வையென மாந்தர்படி வங்கொடு நடந்தா
ஏாவரு குருந்தமொ டிலங்குமுயா காவிற்
சேர்குவ மெனத்திரு வுளத்தருள் சிறந்து. (கசு)

வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக
கொந்தலா மலாப்பொலி குருந்தடி பொருந்தி
அந்தமுத லில்லவ ருட்டமி ழுரைப்பாா
பந்தமறு மெல்லையது பாாதனி திருந்தா. (கஎ)

---

* ஏ=உயர்ச்சி.

† பாாவை=பார்வைமிருகம்,

பொங்குபுனல் யாறுபல போய்விழு கடற்போல்
எங்குமுள நல்லுயிர்க ளெய்துமொளி யாகுந்
திங்கள்அணி வேணிய ரிருப்பவடி சேருந்
துங்கமறை யாளாபலர் துன்றுநெறி சென்றூர். (கஅ)

வேறு.

செம்மனத்து வாதவூர்ச் செல்வர்தமைப் புல்லாத
பொய்ம்மயக்கந் § தரும்பாசம் போலமலர்ந் தனபூவை
எம்மயக்கு மொழிப்பாருக் கினிப்பிறவி யில்லையெனக
கைம்மறிக்கு மவாபோல மலர்ந்தனவங் குளகாந்தள். (கக)

விற்காட்டுங் கரத்துமத னம்பாகி வெம்பிறவி
யிறகாட்டி யாவரையு மாகுலஞ்செ யெம்பாவம்
நிற்காட்டி லொழிப்பவர்யார் நீயருள்க வெமக்கென்று
பற்காட்டி நிற்பவர்போன் மலர்ந்தனமென் பனிமுல்லை. (உ0)

பொற்புடைய தமிழ்பாடும் புணணியரெப் பொருளினுமாஞ்
சிற்பரனுண மையில்விழிக்குந் திருநயனஞ் சோதலினுல்
நிற்பதுவாம் பிறவியிது வென்றிரங்கி நீணமரஙகள்
கற்பனையை யுணர்ந்துமலாக் கணணீாகள் பொழிநதனவால். (உக)

முன்னைவினைப் பெருஙகாடு மூடுறவைம புலவேடா
துன்னியலைத திடர்செய்யுந் துன்பவழிச செல்லாமல்
உன்னருநற் சிவஞான வுபதேசந் தமிழ்செய்வார்
இன்னவகைத் துளகான மெய்தியவர் நெறிநீஙகி. (உஉ)

வேறு.

விரிந்தகட லுக்கிடை விழுந்திட ருழந்தே
திரிந்தவர் நயந்துகரை சென்றணுகு மாபோல்
வருந்தவுழல் விததவினை யொததருள் வசத்தால்
அருந்தவர் பெருந்துறை மருஙகினி லணைந்தார. (உங)

---

* புல்லாத - இனிப்புல்லாத. § பொய்ம்மயக்கம்-ஆனமாவின அறிவை இல்லையென்னும்படி மயக்கும் மயககம்; பொய்யை மெயயாகக காட்டி மய க்கும் மயக்கமுமாம்'

இந்தவுல கஞ்சிவ னிருக்குமுல காகச
சிந்தையருள் கொண்டுதிரு வாசக முரைப்பார்
பந்தமற வந்தமில் பரமகுருக வென்றே
வந்துள பெருந்துறையின் வண்மையுரை செய்வாம். (உ௪)

மாத்தியர் குலததலைவர் வன்பிறவி யெவ்வந்
தீர்த்துலக வையய ரருள் செய்யுமிட மென்றே
தோத்திர முரைத்துமிசை வந்துசுரர் சிந்தும்
பூத்திர ளுயர்ந்தவகை போன்றதலர் பூவகா. † (உ௫)

வேறு.

பேறறிந்து தவமுயல்வோ மென்றுபெருந் துறைநாடி
ஆறியங்கி யிளைக்குமவர்க் களிக்கவெதிர் நிற்பவர்போற்
கூறுமின்ப நிழல்செய்து குறையாத பத்தியுடன்
நீறணிந்து சோறேந்தி நின்றனதுன் றியகைதை. (உ௬)

நிலந்தனில்வந் தொருகுருந்த நீழலிலே யெவ்வுலகுங்
கலந்தபொரு ளிருந்தபடி கண்டுமனங் களிப்பெய்தித்
துலங்கியதங் கண்ணீருஞ் சொரிந்துகரங் குவித்துமுகம்
மலர்ந்தபெருந் தவர்போல மலர்ந்தனபுண் டரிகங்கள். (உ௭)

ஆன்றபயன் பிறர்நுகர வகத்தினிமை யுளதாகத்
தோன்றியநல் லறிவினர்போற் றுவன்றியெழூந் தனகன்னல்
என்றகுல மாதர்தம திறைவர்முக நாடிலவர்
வான்றகைய நிலைபோல வளைந்துவிளைந் தனசெந்நெல். (உ௮)

முலைக்கிரியுங் கருங்கூந்தன் மொய்வனமு மரணாகக்
கொலைப்புருவ வெஞ்சாபங் குனித்துவிழிக் கணையேவி
நிலைப்படுநற் பொருடேட நினைந்துதவ நீணெறியிற்
றலைப்படுவோர் தமைவருத்துந் தன்மையினர் வயன்மாதர். (உ௯)

† உதிர்ந்த வகைபோன்றதலர் பொங்கர் என்றும் பாடம்.

வேறு.

இன்னவகை மன்னிவளர் காவுமெழின் மேவுங்
கன்னல்வய லுந்திகழ்தல் கண்டுவகை கொண்டே
இன்னலுட லம்பெற வினிப்புவியில் வாரா
மன்னவர் பெருந்துறை வளம்பதியில் வந்தார். (௩௦)

மாதவர் மிகும்பதி புகுந்துழி மருங்கே
நாதனுறை தண்டலையி னன்குபுனை தொண்டர்
ஓதுறு சிவாகம வொலிப்பொலிவு கேளா
யாதிதெ தழிந்துரைமி னேவலர்க ளென்றார். (௩௧)

சென்றவர்கள் வந்துசிவ பத்தர்பலர் சூழக்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பையிக ரொப்பார்
நின்றதொர் குருந்தமர நீழலி லிருந்தார்
என்றலு மகிழ்ந்தன ரினிப்பிறவி யில்லார் (௩௨)

ஏவல ருரைத்தமொழி கேட்டரனை யெய்தும்
ஆவலொடு காவினை யணைந்தக மலர்ந்து
மேவிய மணிச்சிவிகை விட்டினரி திழிந்தே
தேவர்பர வும்பரமர் தெய்வசபை கண்டார். (௩௩)

வேறு.

அண்டமெலாங் கடந்த*பொருள் பகரு நூலி னளவுரைப்பார் தெளிந்தயர்வா ராய்வா ராகித், தொண்டுபடு மடியார்களூற்றொன் பான்மேற் றொன்னூற்றொன்பா னென்னுந் தொகுதி சூழ. ஒண்டொடிபங்கினனிருப்பவிருப்பாலெய்தியுடனுரைத்துச் சிவஞா னமுணர்வா ரன்பு, மண்டியநெஞ்சினில்வணங்கி வணங்கார் போல மந்திரியார் மேன்மையுடன் வந்து நின்றார். (௩௪)

---

* அண்டமெலாங் கடத்தல் - அண்டக்கெல்லாமாகியும் அதற்கு வேறுதல், "உலகெலா மாகி வேறாய்" என்றார் சிவஞானசித்தியினும்.

உருத்திராக் திருமணியுடை யிலங்கு காதி லொண்சிரத்திற்கந்தரத்தி லொளிகொண மார்பிற், கரத்திலணிந் திலகுதிருமுண்ட மகிக் கண்கரந்த நன்னுதன்மேற் கவினச சாத்தித், திருத்திகழும் வேதியனு ரம்பொன் மேனி திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கை மீது, பொருத்தமுறும் புத்தகமே தையாவென்னப் பொய்ம்மையிலாச சிவஞான போத * மென்றார். (௩௫)

என்றலுமே சிவமேது ஞான மேதிங் கிலங்கியிடும் போதமே தியம்பு வீரேல், அன்றுவட நிழலில்வாழ் திருந்தார் நீரே யடியேனு முமக்கடிமை யாவே னென்ன, நின்றசிவ மொன்றதனைத் தேர்தன் ஞான நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாமென், றுன்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தையுருகும்வகை யுரைசெய்தா ருவமையில்லார். (௩௬)

வேறு.

உத்தம ரின்ன வாறிங் குறைத்தலு முவந்து நாலாஞ்
சத்திநி பாத மெய்துந் தன்மைய ராத லாலே
அத்திரு மன்றி லாடு மையரிங் கென்னை யாள
இத்திரு மேனி கொண்டா ரென்பது மனத்தி லெண்ணி. (௩௭)

மின்னினு நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி யணைந்து நாயே னுறுபவ மொழித்தல் வேண்டும்
என்னையின் றடிமை கொள்வா யெம்முயிர்க் கிறைவா வென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாங் கண்ணீர் வார. (௩௮)

இவ்வகை புகன்று முன்னோன் முன்னுற விரங்கி நிற்பத்
திவ்விய தரமே † யான செய்திய ரென்று நாடி
அவ்வடி யவரின் மிக்கா ரொருவரிவ் வடிமை தன்னை
வெவ்வினை யகற்றி யாள வேண்டுமென் றிறைஞ்சி நின்றார். (௩௯)

---

* பாசஞானம், பசுஞானங்கள்போல அழியாது என்றுமுள்ளதாகலின் பொய்ம்மையிலாச் சிவஞானம் என்றார். † திவ்வியதரம் - தீவிரதரம்.

கருப்புக நினையார் தம்மேற் கண்ணருள் செய்து நெஞ்சிற்
பரப் *பற மிதித்தல் † வேண்டி யெடுத்தபொற் பாதங் கொண்டு
திருப்புனை மறையோர் போற்றத் தில்லையம் பலத்தே நின்ற
அருட்பரா னந்த வாரி யாதலி னதற் கிசைந்தார். (௪0)

அத்தகு பகலோன் முன்ன ரலர்செயு மம்பு சாதம்
ஒத்தவர் தம்மை நாடி யுன்னையின் றடிமை கொள்ள
இத்தலத் தணைந்தோ நீமுன் னியற்றிய தவத்தி னாலே
சித்தம திரங்கல் வேண்டா மெனத்திரு வாய்ம லர்ந்தார். (௪௧)

வந்துநான் வறுமை யுற்றேன் மாற்றெனை திலப்பா டென்று
சிந்தையா குலமுற் றுன்கைச் செழும்பொரு ளீதல் செய்வார்க்
கிந்தநா ளளிக்க வேண்டு மெனவிதி யின்மை யாலே
அந்தணா ளிந்நா ளாக வடிமைகொண் டருள வெண்ணி. (௪௨)

அத்தகு தொண்டர்க் கெல்லா மதிபரா மவரைநோக்கி
இத்தவ முடையோ னெய்து மிடரொழித் தாள்வ திந்நாள்
வித்தக விதற்கு வேண்டுங் கருமநீ விரைவிற் செய்கென்
றுத்தம வடிவங் காட்டி முண்மையா ருரைத்தல் செய்தார். (௪௩)

முன்னவர் புகன்ற வாறு முயல்குவ மென்றே யந்த
மன்னுறு தவத்தின் மிக்கார் வனைமலர்த் தெரிய லானும்
பொன்னிடை யழுத்தி முத்தம் புனைந்தபல் பட்டி னானும்
அங்கெங்கு காவி னூடங் கானபூங் கோயில் செய்தே. (௪௪)

செய்தநற் கோயிலூடு சிறந்தவா சனமுஞ் சேர்த்து
மெய்தகு தொண்டர்க் கெல்லா மிக்கவ ரிறைவற் சார்ந்து
கைதவ முடையார் நெஞ்சிற் கனவிலுங் காண நில்லா
மைதரு களத்தாய் கோட்டஞ் சமைந்தது வாய்ப்ப வென்றார். (௪௫)

* நெஞ்சிற்பரப்பு - சித்தவிருத்தி. மிதித்தல் - திருவடிதீக்ஷைசெய்தல்.

ஆயிடைக் குடபால் வெற்பி லாதவன் கரந்து ஞாலம்
பாயிருள் பரந்த பின்னர்க் கடிகையோர் பதினைந் தாகி *
மேயநல் லுயிர்க ளெல்லாம் விழித்துயில் பயிலுங் காலைத்
தூயதொண் டர்க்கு மாயை தொலையுநல் லமயந் தோன்ற. (சசு)

இங்கிவன் றன்னை யாளுங் காலமீ தென்று தெய்வச்
சங்கம தகன்று முன்னோன் மஞ்சனச் சாலை சார்ந்து
குங்குமம் புழுகு சாந்தங் குழைத்துமெய்ம் முழுதும் பூசிக்
கங்கையி னன்னீர் வாசங் கலந்தமென் பனிநீ ராடி. (சஎ)

மெய்ப்புன றுகிலான் மாற்றி விலைமதிப் பில்லா நல்ல
ஒப்பருஞ் செம்பட் டாடை யுடுத்துயர் கோட்ட மெய்திச
செப்பிள முலையாள் பாகன் றென்றிசை யதனை நோக்கி
அப்பெருந் தவிசின் மேலங் கழகுற விருந்த பின்னர். (சஅ)

அண்டரு மலர்தூ யேத்து மன்பருந் தூநீ ராடி
வெண்டுகில் புனைந்து நீறு விளங்கிய மெய்ய ராகி
முண்டக மலர்த்தாள் வைத்து முத்திதந் தருள மேனி
கொண்டவர் திருமுன் சென்று குறுகியங் குவகை கூர்ந்து (சகூ)

விண்ணவ ரதிபன் பொற்றாள் விளக்கியர்ச சனைமுன் செய்து
தண்ணறும் பனிநீர் தோய்ந்த சாந்தமெய்ம் முழுதுஞ் சாத்தி
வண்ணமென் கழுநீர் மாலை வளம்பெற வணிந்து பின்னர்க்
கண்ணுறு பரிவு தீரக் கண்டுளை மகிழ்ச்சி கொண்டு. (ருo)

பருப்புடு‡ ஞளி கேரப் பழச்செழுந் துருவல் சேர்த்துச்
சருக்கரை கலந்து பாலிற் சமைத்தநல் லமுது தன்னை
இருத்திய கனகக் கான்மே லிலங்குபொற் கலத்தின் மீது
விருப்பொடு படைத்து நெய்யு மிக்கமுக் கனியும் பெய்து. (ருக)

* ஆகி - ஆக,     ‡ நாரிகேளம்-என்பதுமாம்;

திருவாதவூரடிகள் புராணம்.

மாலயன வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னாள்
ஆலமுண் டவனே நல்ல வமுதமுண டருளாயென்று
சீலமா மகிழ்ச்சி பொங்குஞ் சிந்தையி * னுரைப்பக் கால
காலனு முண்டு நீராற் கரமலர் கழீஇய பின்னர். (௫௨)

வெள்ளிலை பழுக்காய் நல்கி விரைதரு தூபந் தீபங்
கொள்ளுநற் றீபம † காட்டிக் கோலநன் னீறு சாத்தித்
தெள்ளொளி விளங்கு மாடி திருந்தமுன் றிகழ்வித் தெங்கும்
உள்ளவர் முடிமே லோங்க் வொண்குடை கவித்தல் செய்து. (௫௩)

கற்றைவெண் கவரி செம்பொற் காம்புநீ ளால வட்டம்
பற்றியன் புடனே வீசிப் பரிவுட னடியார் சூழப்
பொற்றவி சிடையே மேவும் புண்ணியன் றிருமுன் பைம்போ
துற்றகை யுடனே வாதவூரரங் கிருந்த பின்னர். (௫௪)

மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்க டத்து வங்கள்
ஐந்துநற் கலைக ளென்னு மறுவகை யகற்றி யந்தச
சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துட னறிவு சேரப்
பந்தனை யொழிவார் தம்மேற் பரிந்தருட் பார்வை செய்து. (௫௫)

எவர்க்குமெய்ஞ் ஞான மாமஞ்செழுத் § தையு முணர்த்த வேண்டி
அவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தைமுன் னுகமாறித் ○
தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ்ப் பாடு மன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை யுறத்திரு வாய்ம லர்ந்தார். (௫௬)

* சீலச்சிந்தையெனக் கூட்டுக. சீலம் - ஒழுக்கம். † நறுதீபம் - கர்ப்பூரதீபம். கொள்ளுதலை மேலுங் கூட்டுக. கொள்ளுதல் - கடவுள் உவந்தேற்றல். நற்றேசு என்றும் பாடம். § பக்குவரெவர்க்கும் சிவஞானமுண்டாதற்கு ஏதுவாகிய பஞ்சாக்கரம். ○ சிவத்தை முன்னுகமாறி அவத்தொழிலகற்றி என்க. அஃதாவது சிகாரத்தை முன் வைத்து நகார மகாரங்களை நீக்கி என்பதாம். அவத்தொழில் செய்வனவற்றை அவத்தொழிலென்றார்.

## வே று.

விரவு மன்பொரு வடிவுகொண் டணைவார் விழித்த பார்வை
யின் விளக்கின்முன் னிருள்போற், சுருதி செந்தமி ழாக்கிய மொழி
யார் தொலைவி லாதவெந் துயர்ப்பவ மொழிந்து, பரவி மென்பதம்
பணிபவர் படிமேற் படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவான், மருவு
மிங்கிவா சென்னியி லிருதாண் மகிழவைத்தனர் மதிநதி முடிப்
பார். (௫௭)

மன்னு முன்னுள வுயிர்க்கர ணங்கண மாய்ந்து பொய்முதலறி
விழந் தருளாற், றுன்னு மின்னருட் சிவகரணங்க டோன்ற லாற்
சுக வறிவதிற் றோன்றச, சென்னி யின்மிசை மேவிய பாதந் திரு
ந்து கண்ணிணை சேர்த்திருகரத்தால், உன்னல் செய்திடு மிதயமே
லணைவித் துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியினெழுந்தார். (௫௮)

மேலை யதத்தலத் திந்திர னிமையோர் மீதெ லாம்பொழி விரை
மலர் மழையே, போல வித்தலம் புதையவந் துதிரப் பூதருங்கண
நாதரும் புகழச, சால நற்குணம் புனையுநல் லடியார தங்கள் செங்
கையி லொலியலுந தயங்கும், ஆல வட்டமுங் கவரியு மிருபா
லசைய மாமுனிக் கணமடி வணங்க. (௫௯)

இருந்த வப்பெருங் கருணைய னெதிரே யெய்தி யன்புடை
யியல்பின ரிறைஞ்சிச், சிரந்த னிற்றம திருகரங் குவியச் சிறந்த
பேரரு ணிறைந்தசெய் கையராய், வருந்தி யித்தல மகழ்ந்து மேற்
பறந்து மால யன்றொழ வரியநீ யடியேன், அருந்து யர்ப்பவ மகற்
றவிங் குருவ மாவ தேயென வழுதுநெஞ் சழிந்தார். (௬0)

---

ஓசியல் = க்ருஞ்சம்;

ஐயனேயெனை யாண்டருள் புரியு மாதியேயுமை யணிமழு
விருக்கும், கையனேகொடுங் காலனை முனியுங் காலனேயிரு
கண்ணினுண் மணியே, செய்யனேயடி போற்றியென் பெரிய
செல்வமேயடி போற்றிபொய் யினர்தம், பொய்யனேயடி போற்றி
யெவ் வுயிர்க்கும் போதமேயடி போற்றியென் றழுதார். (௬௧)

அற்றை ஞான்றிருள் வைகறை யெனும்போ தணைத லும்பர
னருட்குரு வடிவந், துற்ற சாந்துடன் முயங்குசெங் கழுநீர்த்
தொடையலின் சுமை டெ ருதெனத் துளங்கிக், *கற்று மான் கரத்
தேந்திய விறைவன் கவின்கொண் மார்பணி மலர்த்தொடை கழித்
தங், குற்ற வான்றுய ரகன்றுநல் லடியா ருடன்விளங்கினர் களங்க
மொன் றில்லார். (௬௨)

வாத வூருறை யிறைவர்தம் பெரிய மாயை போலிருண்
மாய்ந்துபின் னவர்பாற், போத மாகவந் துறுசுடர் விளக்கம் போல
வெய்யவன் புணரியிற் றோன்ற, வேத நாதர்த மிருபத மிறைஞ்சு
மேன்மை யாளரை வேறுகொண் டிருந்தங், கோதுமாகமத் தறி
வரும் பொருளை யுரைக்க வேண்டினர் தாரற முரைத்தார். (௬௩)

களிம்பு தோய்ந்த செம் பெனவுனை மருவுங் கருமை கூர்ம
லங் கண்டது கலக்கும், பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்
தின் பற்றி னுடல் பலவெடுத் துழன்றாய், வளங்கு லாம்புவ னந்
தொறுஞ் செயுமுன் வல்வினைப்பயன் வருமுறை நெறியே, அளந்து
காந்தர நுகர்ந்துமே னுகர்வு மாக்கி யேநெறிபுரிந்தேனைமனை வழுக்கால். ()

---

* கற்ற - கன்ற என்பதன்விகாரம்;

செய்து ளோர்பெறும் வினைப்பய னொருவர் சேர்க்க வேண்டுவ தில்லெனி னிதுமேல், எய்து மேலிது நுகர்வதென் றறிவ தில்லை நீ வினை யெனிற்சட மறியா, துய்தலாகிய நன்னெறியுணராவுனையு முன்வினைப் பயனையு முணர்ந்து, மைத வாமல மொழித்தருளகலா வாழ்வு நல்குவம் யாமென மதிப்பாய். (கூரு)

எவர்க்கு மிம்மலஞ் சேரவிங் கொழியா திருப்ப தென்னெனி லின்னல்கொள் பிறவித, துவக்கெ னுந்தம திருவினைப் பயனுந் துலைபு கும்பொரு ளெனநிறை நிகர்த்தால், * அவர்க்கு நம்பதங் கொடுத்திட ரொழிப்போ 'மதுவி லாதவ ரழுங்கியவ்வளவும், பவப் பெருங்கடல் வீழ்வார்தம் பருவம் பார்க்கு மெய்ம்மையுந் தம்மையும பாரார (கூகூ)

என்ற கூடுமெப் பருவமென் றியம்பில் யாமி ருந்துள விடந் தொறு மிறைஞ்சி, நன்றி சோசிவ புண்ணியம் புரியு நன்மையா லது நணுகுமென் றறிநீ, மன்றி லானவெம் மியல்புனக்குரைக்கி கின் மாசிலாவுரு மூன்றவற் றருவம், ஒன்று பேரொளி யொன்ற றருவுருவ மொன்று தானரு வுருவ மென் றுணாவாய். (கூஎ)

இந்த மூன்றினி லுருவுனக் கறியவிசைந்த பேரரு ளியம் புமிவ் வுருவம், வந்தி யாவரும் பணிவதற் கெளிதாய் வரமெலாந் தர வருமரு வுருவம், பந்த மாகிய மலவிரு ளகற்றும் பரிதியாவுள பல்லுயிர்க் குயிராய், அந்த மாதிக ளளப்பரு' மொளியாயமல மாகு மவ் வருவெனு முருவம். (கூஅ)

---

இருவினை யொப்புணடாதல்

## திருவாதவூரடிகள் புராணம்.

### சரியை

ஆவ லாலெமக் காமலா மரங்களாக்க லும்மலர் பறித்தலம்மல
ராற், றூவி லாவகை தார்பல சமைத்த றணப்பி லெம்புகழ் சாற்ற
லன் புடனு, மேவு மாலய மலகிடன் மெழுகல் விளங்க நல்விளக்
கிடுதலெம் மடியார்க், கேவ லானவை செய்தலிச்சரியை யியற்ற வல்
லவர்க் கெம்முல களிப்போம். (௬௯)

### கிரியை

கந்த வர்க்கமு மிளாமணப் புகையுங் கவின்கொ டீபமு மபுனித
நமஞ் சனமும், கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங் கொண்டு
மாயையின் குணங்களொன் றிலராய், ஐந்து சுத்தி செய்தகம்புற
மிறைஞ்சி யங்கி யின்கடன் முடித்தருள் வழியின், றிந்த நற்பெருங்
கிரியையன் புடனே யியற்ற வல்லவ ரெம்மருகிருப்பார். (௭௦)

### யோகம்

மூக்கு ணம்புல னொந்துட னடக்கி மூல வாயுவை யெழுப்பிரு
வழியைச், சிகவெனும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்
டவச் சிலம்பொலி யுடன்போய்த், தகக வஞ்செழுத் தோரெழுத்
தருவாந் தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே புக்க ழுந்தின
ரெமதிருப் பெறுவார் புவியில் * வேட்டுவ னெடுத்தமென் புழுப்
போல். (௭௧)

### ஞானம்

பரந்த வான்கலை முழுதுமா கமநூற் பகுதி யும்பல சமய சாத
திரமுந், தெரிந்து தேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின் செய்தி
யேபொரு ளெனமனந் தெளிந்து, புரிந்து போந்துள சிற்றறிவனை
த்தும் போக்கி யவ்வறி வெனச்சிவ போதம், விரிந்து தோன்றலொ
டுடையவித் தக்ரே மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார். (௭௨)

* வேட்டுவன் - குளவி.

## திருப்பெருந்துறைச்சருக்கம்.

உருப்பொலாதவ ரிழிகுலத்தவா்நல் லொழுக்க மில்லவரென்று
நம் மளவில், விருப்பி லாதவ ரெனினுமெய்ந் நீறு மிக்க சாதன
வேடமுங் கண்டாற், றரிப்பி லாதுசென் றெதிருறவணங்கித் தக்க
போனக மளித்தவர்க் களிதாய், இருப்பர் தாமவ ரடியவர்க் கடியா
ரென்பர் யானென தெனுஞ்செருக்க றுப்பார். (எங)

விரிந்த சஞ்சித வினைகளன் புடனும் விழிக்க வெந்தன விரவு
மிப் பிறப்பிற், பொருந்தும் வல்வினை யுடலுட னகலும் புந்தி சேர
ருள் வருவினை போக்கும, அருந்து யர்ப்பொரு ளுயிருடம் புனவே
யல்ல நம்மன வாகுமிங் குனைப்போல், இருந்த நங்குரு வடிவைநின்
கருத்தி லிருத்து வாயபொரு ளிதுவென மொழிந்தார. (எச)

அத்த னார்திரு வாய்மலாந் தருளு மமல வாசகங் கேட்டகமகி
ழும், பத்த னார்தமக கெழுபிறப் பறுக்கும் பாத மீதுறப் பணிந்தெதி
ரெழுந்து, பித்த னனவெண் பிழைதனக் கிரங்கும் பிஞ்ஞ காமிகப்
பேதைமை யுடையேன, முத்த னாகமெய் காட்டினை யெனவே
மொழிந்த ழிந்துகைம முடிமிசைக் குவித்தார (எரு)

என்ன வாகமுன் னினைந்துள பொருளு மில்ல தாகிய வுடல
மும் யானு, நின்ன வாகநின் னருள்கொடு நினைந்தே னின்மலா
வென நின்றுநின் றுரையா, மன்னு தானைதம் மேலணி கலன்கண
மதுரை மீனவன் வான்பொரு ளிறையோன், முன்ன தாகவைந்
திறைஞ்சின ரறஞ்சேர் முதல்வ னாமுக மலாவுகொண டிருந்
தார். (எசு)

---

* "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுங் கண்டிகையுங்கண்டா
லுள்கி, உவராதே யவரவரைக் கண்டபோது [illegible] முவந்தடிமைத் திறநினை

## வேறு.

பெருந்துறை யுறைவா ரன்பு பெறுந்திரு வடிய ராகி
இருந்தவர் தம்மின் மேன்மை யெய்தினர் மூகத்தை நோக்கித்
திருந்திய பொருளி தெல்லாந் திருப்பணிக் களியு மேலாம்
அருந்தவர்க் குதவு மில்லா தலந்தவர்க் கருளு மென்றார். (எஎ)

தம்பெரு முதல்வர் சொல்லுந் தருமொழிப் படியே யுள்ள
செம்பொருள் யாவு மனபின் றிறத்துளார் தொலைத்த பின்னர்
அம்பர னளித்த ஞான மருந்தினை யருந்திப் பாச
வெம்பிணி யகற்று மந்த வித்தகர் மூதத ராஞர் (எஅ)

திருந்திகழ் கவிகைக் கீழுஞ் சிறந்தபொற் சிவிகை மேலும்
வருந்திரு மேவு தானை மன்னவ னென்ன வந்தார்
உருத்தெரி யாத நீறுங் கோவண வுடையுங் குஞ்சி
விரிந்தருள் சிரமுங் கண்ணீர் மிகப்பொழி விழியு மானார். (எகூ)

அன்புட னேகி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணா ஞானநல் வடிவே கண்டு *
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார். (அ௦)

மன்னுமிந் நிலைமை யுற்றா ரனபடைச் சுற்றமாகித்
துன்னின ரெல்லாம் வந்து தோன்றலைத் தொழுது நின்று
தென்னவன் முனியா வண்ணஞ் செழும்பரித் திரள்கொண் டேகல்
என்னுமத் தொன்றுந் தேரா விதுபழு தென்றி ரங்கி. (அக)

ஐயநீ வருதல் வேண்டுமென் றவ ரழைத்த போதிற்
றெய்வநீ றணிவார் தானைத் திறத்தினர் தம்மை நோக்கி
மையலா முணர்வின் மிக்கீர் யாவர்நீர் மாயா பேதப்
பொய்யெலா முரைத்தல் வேண்டாம் போமினி யகல வென்றார்.

* நல்லறிவே கொண்டு என்றும் பாடம்.

என்னிவர் புகல்வ தென்றே யாவரு நின்றி ரங்கித்
துன்னுநற் றுணை வீரர் தம்முளே துயர மெய்திப்
பன்னுநம் மொழியுங் கேளார் * பரிவில ரென்று நீங்கித்
தென்னவற் கின்ன வாறு செப்புவ மென்று சென்றார். (௮௩)

சென்றவர் வைகை நாடன் றிருந்தவை முன்ன ரெய்தி
வன்றிறன் மன்ன போற்றி மாமது ரேச போற்றி
என்றுபின் வாத வூர ரெய்திய செய்தி யெல்லாம்
ஒன்றிய கவற்சி கூரு முளத்துட னின்று சொல்வார். (௮௪)

நின்பெயர் புனைந்தோ ராகி நின்பெருங் கருமஞ் செய்வோர்
என்பவர் செய்கை தன்னை யெங்ஙனமி யாங்கள் சொல்வோம்
பொன்பொலி மௌலி யோய்நின் புடைவிடை கொண்டு போந்து
மன்பெருந் துறையா மந்த வளநகர் புகுந்த பின்னா (௮௫)

அந்நகர் மருங்கோர் காவி லணைந்துள குருந்தி லீசன்
றன்னடி யார்க ளாகுந் தாபத பலருஞ் சூழ
மன்னியங் கொருவா மேலா மாதவ வேடம பூண்டு
முன்னுற விருததல் கண்டு முடிவிலா மகிழ்சசி கொணடு (௮௬)

அங்கவர் தாமுந் தாமு மன்பொடு சிலசொற் கூறிச
சங்கர சிவனே போற்றி யெனறவர் தாளில் வீழ்ந்து
செங்கரங் குவித்துச சென்னி சேர்ததுவந் தனைகள் செய்து
பொங்கொளி மணிப்பூ ணாடை பொருளெலா முவந்து நல்கி. (௮௭)

குறைவிலா வாடை நீத்துக் கோவண முடுத்துச சென்னி
நறைமயிர் விரிதது நீற்றை மெய்யெலா நயந்து பூசி
முறைமையன் றிதுதா னென்று மொழிந்தவெம் முகமும் பாரார்
நிறையழி பித்த ரானா நிருபவென் றிறைஞ்சி நின்றார். (௮௮)

* கொள்ளார் என்றும் பாடம்.

கேட்டலு மதுரை மாறன் கிளர்ந்தமெய்ம் முழுதும் வேர்வு
காட்டிட வெகுளி பொங்கக் கண்கனல் வடிவ மாகி
வாட்டிறன் மன்னர்க் கின்ன வண்மைய ருளரேல் வையம்
ஈட்டுறு செல்வந் தானே யெவையில வென்று நக்கான். (௮௯)

அடுபரி கொள்வா னீந்த வரும்பொருள் கவர்வ தாகக்
கெடுமதி யுரைப்பார் தஞ்சொற் கேட்டுமா லெய்தி ஞானக்
கொடுமைகொ ளீந்த வோலை கொடுதெதொரு தினத்து ணம்பாற்
கடுநடைத் தூத ரேகிக் கைக்கொடு வம்மி னென்றான். (௯௰)

ஏவலிற் சென்ற தூத ரெழிற்பெருந் துறையி லெய்தி
ஆவலிற் சிவன்று ளேத்து மண்ணலைக் கண்டி றைஞ்சி
மேவலர்க் குருமே றன்ன வெந்தொழில் வேந்தன் வாய்ந்த
காவலாக் கதிபன் மாறன் * றிருமுகங் காண்க வென்றார். (௯௧)

அற்றமில் கொள்கை மிக்கா ரான்றிரு முகம தன்றி
மற்றொரு முகமுங் காண மனமில ரிதன்மே லன்பு
பற்றிலர் பிறிதோ ரோலை படியெடு துரைமி னென்ன
உற்றத னியல்பு வல்லா னெழுதிய துவந்து சொல்வான். (௯௨)

தென்னவ †னெழுது மோலை தென்னவன் பிரம ராயன்
என்னுநல் லமைச்சர் காண்க வெல்லையி றனங்கொண டேகிக்
கொன்னுறு பரிகொ ளாமற் கோவணங் கொண்டீர்ந்து
மன்னாதம் கருமஞ் செய்வா வணமையென் றுவகை யுற்றேம். ( )

வையக மன்ன ராகி வாழ்தலின் மனைக டோறும்
எய்திய வுதரத் தீயா லிரப்பது பெருமை யென்றும்
மெய்தகத தம்மை யாண்ட வேந்தரைப் பிழைத்து வேறு
செய்வது பலிக்கு மென்றுந் தேர்ந்தநூற் றுணிவுங் கண்டேம். (௯௪)

---

* திருமுகம் - ஓலை.

† அரசனோலை என்றும் பாடம்.

மன்னரை யடைந்து வாழ்தல் வஞ்சகஞ் சமீழ நாகந்
தன்னுடன் மருவி வாழுந் தன்மையென் றுணர்வீராயிற்
றன்னுமிவ் வோலை காணும் பொழுதுநந் தூத ரோடும்
இந்நகர் வருக மாற னெழுத்தென வுரைத்து நின்றான். (௬௫)

மீனவ னெழுது மோலை கேட்டபின் மின்பா லன்பர்
ஆனவ ரடியா ரெம்மை யடிமையா வுடைய ரல்லாற்
றெனெனக் கண்ண லென்றுந் தன்னையான் பிழைத்தே னென்றும்
மாநில மன்னன் சொன்ன தென்னென மனத்தி லெண்ணி. (௬௬)

அந்தக னெழுது மோலை கொண்டவன் றூதர் தாமும்
வந்தெமை யணுக மாட்டா ருடையவர் மதுகை யாலே
வெந்தொரு கணத்தில் வீழுமேவலர் புரங்கள் செற்றோ
ரந்தம ரொருவர்க் கஞ்சத் தகுவரோ * வென்று சாற்றி. (௬௭)

போயரன் றிருத்தா ளேத்திப் புண்ணிய வடிவே போற்றி
ஆயிரஞ் சுடிகைப் பாம்பை யலரென முடித்தாய் போற்றி
மாயிரு ஞாலங் காக்கு மன்னவ னெழுது மோலைப்
பாயிர மிதுகே ளென்று மொழிந்தனா பழுதி லாதார். (௬௮)

கேடிலா வியல்பி னுருங் கேட்டிள முறுவல பூத்துப்
பாடலா லேத்துந தெய்வப் பான்மையாக குவந்து சொல்வார
நீடிலா தவாபோ லுள்ளம் பேதுற லொழிவா யிந்த
நாடெலா மதிகக நாமே நற்பரித் திரள்கொண டேகி. (௬௯)

தென்னவற் களித்து மீள்வோஞ் செழுந்திறற் றூத ரோடு
மன்னனைக் குறுகி யெம்பால் வரவிடு மோலை தன்னுள்
முன்னுறக் கடிது வந்தே மாவணித் திங்கண் மூலம்
என்னுமத் தினத்தி லிங்கே யெய்துநற் பரிக ளென்பாய். (௭00)

---

* இஃது, "நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோம்" என்னும் தேவாரம் சிந்திக்கற்பாலது.

தொன்மதிக் குலத்து மன்னன் றுயர்செய்வா னென்று சற்றும்
நின்மனக் கவற்சி கொள்ளா தொழிகென நீறு சாத்திப்
பொன்மணிக் கலன்க ளல்கிப் பூந்துகில் பிறவுந் தந்து
மன்மனத் துவகை கூர மந்திரிப் பான்மை செய்து. (௧௦௧)

தென்றிசைக் கதிபன் றன்பாற் சென்றிது கொடுத்துக் காணடி
என்றுநன் மணியு நல்கி யேகென விடுத்த பின்னர்
கன்றகல் புனிற்று * வென்னக் கசிந்திரு கண்ணீர் வார
நின்றுநின் றிறைஞ்சி யையா நீத்தியோ வென்று நொந்து (௧௦௨)

விழிப்புனல் சிந்தச சிந்த விண்ணவன் விடைபெற் றேகிச
சுழிப்புனல் வாவி சோலை சூழ்பெருந் துறையை நீங்கி
வழிக்குறு துணையா யுள்ள வள்ளலைந் தெழுத்துமோதிப்
பழிசசுறு தூத ரோடு மதுரையம் பதியிற் சென்றார். (௧௦௩)

மதுரைமன் னவன்முன்னேகி மனமிலா வணக்கஞ் செய்து
கதிர்மதிச சடையோ னீந்த கவின்கொண்மா மணிமு னல்கி
எதிருற நின்ற போதி லின்புற வழுதி நோககி
விதிமுறை யிருமிங் கென்ன விருநதனா விரிந்த நூலார். (௧௦௪)

விலைமதிப் பில்லா வந்த மேதகு மணியைப் பல்கால்
நிலையுற வியந்து நோக்கி நெஞ்சினு ளுவகை யெய்தித
தலைவனைச சிந்தை யுள்ளே தரிப்பவர் தம்மை நாடிச
சிலைமுகக் கரத்து மன்னன் செய்ததே துரைமி னென்றான். (௧௦௫)

மலக்கொடும் பகையை வெல்வார் மன்னவன் முகத்தை நோக்கி
நிலத்தொளிர் புகழின் மிக்காய் நீதரு நிதிகொண் டேகி
இலக்கணக் குறைபா டின்றி யீரிரு கதியு முண்டாங்
குலப்பரி யினங்கள் யாவும் விலைக்குறக் கொண்ட பின்னர். (௧௦௬)

---

* புனிற்று - ஈன்ற அணிமையுடையபசு.

அரும்பரித் தொகுதி யெல்லா மணிதிகழ் மதுரைக் கேகப்
பொருந்திய தினமே தென்னப் பூசுரர் விதியிற் றேர்ந்து
திருந்துமா வணியாந் திஙகண் மூலநற் றினமா மென்ன
இருந்தன னதனை நாடிப் பெருந்துறை யென்னு மூரில். (௧0௭)

பின்படைச சுற்ற மெல்லா நீடுமிந் நகருக் கெய்தும்
அன்பினிற் கடிது மீண்டா ரவர்பெரும் படிறு கூற
மன்பெரு முனிவா லோலை வரைந்தனை யதனால் வந்தேன்
கொன்பரித திரளிங் கெய்துங கூறுமந் நாளி லென்றூர். (௧0௮)

என்பது கேட்டு மாற னும்மிடை யெமக்குண டான
மன்பெரு நண்பு நீக்க நினைத்துள மனத்தார் சொல்ல
அன்பிலர் போல வோலை யெழுதின மதுகொண் டின்னே
துன்புற லொழிவீ ரென்று நன்மையாத் தொன்மை கூறி. (௧0௯)

கொன்னெடுங் கோயி லூடு கொடுபுகுந் துரிமை கூரத
தன்னரு கிருததி மேன்மை தக்கநற் கலைக ணல்கிப்
பொன்னணி கலன்கள் யாவும் புனையுமென் றளித்து முன்போன்
மன்னுள கருமங் கூறி மனையிடை யேகு மென்றான். (௧௧0)

தம்பெரு மனையிற் சென்று தாபதர் வைகப் பின்னர்
நன்பரிச * சமூக மெய்து நாளிரண் டென்னு முன்னர்
வெம்படைச சுற்ற நீங்கி யிருந்துழி விரிந்த நேமி
அம்புவிக் கரசன் றன்மு னமைச்சரி லொருவன் சென்று. (௧௧௧

போற்றியெம் பொருளை நாட போற்றியென் றிறைஞ்சிக் கூறு
மாற்றமுண் டொன்று நின்பேர் புனைந்துள வரிசை பெற்றோர்
சாற்றருந் துரகங் கொள்ள நேரியன் றலத்திற் சார்ந்து
தீற்றின னடியார் கையி னின்பொருள் யாவு மீந்தார். (௧௧௨)

---

* கஜபரி இளைவெதுகை,

நின்பெருந் தூத ரேகி யெழுதுநின் றோலை காட்டப்
பின்புவந் துனது சிற்ற மொழித்துயிர் பிழைக்க வெண்ணி
அன்புடை யவர்போ லுன்ற னடியிணை குறுகிப் பின்னர்
நன்பரித் திரளின் செய்து நாளுனக் களிப்ப லென்றார். (௧௧௩)

மற்றவர் மொழிந்த வெல்லாம் பொய்யுரை மன்ன வென்னச்
சொற்றமிழ் வைகை நாடன் றூதரை வெருவ நோக்கி
அற்றமில் சருவ வல்லா ரருட்பெருந் துறையி லெய்தி
உற்றவெம் பரிக ளுண்டே லொல்லைவந் துரைமி னென்றான். (௧௧௪)

அருந்திறற் றூத ரேகி யத்தினங் கடிது மீண்டு
வருந்திமுன் புகுந்து மன்னர் மன்னனை வணங்கி நின்று
பெருந்துறை யென்னு மூரும் பிறிதுள பதியுந் தேடிக்
கருந்தடங் களிற்று வேந்த கண்டிலம் பரிக ளென்றார். (௧௧௫)

பாங்குநின் றின்ன வாறு பகர்தலும் வெகுட்சி யெய்தி
ஈங்குநங் கருமஞ் செய்வ னென்றிடர் செய்வான் றன்னைத
தாங்கருந் துயரஞ் செய்து தகைத்துநந் தனத்தை யெல்லாம
வாங்குமின் றண்டலாள ரென்றிகல் மன்னன் சொன்னான். (௧௧௬)

மன்பெருந் தண்டலாளர் மறையவர் குலத்தின் மிக்கார்
முன்புசென் *றினைய சொல்வார் முனிவுடை முகத்த ராகி
நன்பரித் தொகுதி கொள்ள நயந்துமக் கந்நா ளீந்த
தன்பொரு ளெல்லாம் வாங்கச் சாற்றினன் சிற்ற மன்னன். (௧௧௭)

மற்றிதன் பயன்யா தென்னின் மன்னவன் விடுப்ப வென்றி
உற்றவன் றூதர் வல்லை யொண்பெருந் துறையி லெய்திக்
கொற்றவெம் பரிகள் காணார் மீண்டனர் கோவு நம்பாற்
பத்திய நேசம் விட்டான் யாரினி யாள வொட்டான். (௧௧௮

* முன்புநின்று என்றும் பாடம்.

தனமினித் தருதல் வேண்டு மென்றவன் றண்ட லாளர்
சினமுடன் புகல வானா விருந்தவூர் நிலைமை கூறும்
நினைவுட னமைச்சர் வாழ்வி னீக்கிமெய் வாக்கின் மன்னர்
தனியுற வலிதிற் காவற் சாலையி லாக்கி னார்கள். (ககக

சற்றுமுட் டளர்வி லாத தன்மையின் வாத வூரர்
மற்றவர் செலுத்தச சென்று வன்சிறைச் சாலை யெய்த
நற்றவர் வருத்தங் காண நாணமுற் றொளிப்பான் போன்று
பொற்றடந் தேரின் வெய்யோன் போய்க்குட பான்ம றைந்தான்.

கள்ளுலா மிதழி மாலை கவின்பெற முடித்த வேணி
வள்ளலா ரேவச் சென்று வழுதிமேல் வெகுட்சிகொண்டு
வெள்ளைவான் பிறைப்பற் றோன்ற விழுங்கவங் காந்த பேயின்
கொள்ளிவா யனைய வண்ணங் கொண்டது செக்கர் வானம். (கஉக)

தெண்டிரை யுலகி னன்மைத் திறத்தினர்க்*குற்ற தீங்கு
கண்டுள சிறியோர் போல நகைத்தன கவின்கொண் முல்லை
ஒண்டமிழ் வாத வூரர்க் குற்றதை யுணர்ந்து துன்புங்
கொண்டவ ரிதயம் போலக் குவிந்தன கமலமெல்லாம். (கஉஉ)

தென்னவன் வைத்த காவற் சிறையினி லுறையுந் தெய்வம்
அன்னவ ரொருவர் காணி னுணமுற் றயர்வா ரென்றே
இன்னல்கொண் மனத்தாள் போல விருட்கரங் கொண்டு கூடற்
பொன்னக ருள்ளார் கண்கள் புதைத்தனள் கங்குன் மங்கை(கஉங)

மன்பகை துரப்ப திந்த மந்திரித் தலைவர்க் குண்டாம்
என்பது முளதோ வந்தோ வென்செய்து மென்றி ரங்கி
அன்பரை யகன்று நெஞ்சா லழலெழ வுயிர்த்து மாழ்குந்
துன்புடை மடவார்போலத் துயின்றிலர் மதுரை யுள்ளார். (கஉச)

* நல்திறத்தினர்க்கு என்றும் பாடம்.

செம்மனப் புனிதர்க் குண்டாந் தீங்குதங் கிழமை யாலே
ஐம்முகக் கடவு ளீன்ற வறுமுகற் குரைக்கு மாபோல்
விம்முசெஞ் சூட்டு முட்டாள் வியன்சிறைச சேவ லெல்லாந்
தம்மனை யிடங்க டோறுந் தழங்கின புலரிக்காலே. (கஉரு)

சிற்பர முணர்ந்து ஞானச் செந்தமி ழோது நீதிப்
பொற்பினை யுடையோ ரின்னல் பொருதுசென் றுரைப்பபோல
விற்பொலி சடிலன் சூல வேலவ னுல வாயில்
அற்புதன் கோயின் முன்றி லார்த்தன சஙக மெங்கும். (கஉசு)

எம்மிறை பரியி லேறு நாளிதோ வென்று பார்க்குஞ்
செம்மலர் மடவா ளிட்ட திலகசிந் தூரம் போல
அம்மலை மிசையே வைகி யாடகக் கிரிசூழ் போந்து
மைம்மிகு கடன்மேல் வந்து முளைததது வாலபானு. (கஉஎ)

மண்கெழு செங்கோல் வேந்தன் வைகறை யெழுந்து நீராற்
கண்கழல் விளக்கி மூழ்கிக் கண்ணுதல் பூசை செய்து
தண்கதிர் முத்த மாலை தரித்துநற் கலன்க டாங்கி
விண்கிளர் செம்பொற் கோயின் முகப்பினில் வீற்றிருந்தான் (கஉஅ)

வன்றிற லாளரெல்லாம் வாம்பரித் திரள்கள் கொள்வான்
சென்றர னடியார்க் கீந்த செம்பொரு டாரீ ராகில்
இன்றுமை வருத்தஞ் செய்து மென்றெறி வெயிலி னூடு
நின்றிடு மென்ன நின்றார் நீள்பெரும் புகழி னிற்பார். (கஉகூ)

அங்குநின் றிளைப்பார் தம்மை யாண்டவாண் டகையை யுன்னி
இங்குணர்ந் திலையோ நாயே னிடும்பையென் றிரக்க மெய்திச்
சங்கவெண் குழையாய் மன்னன் றனக்குவாம் பரிக ளீதல்
நங்கட னுகு மென்று நவின்றசொற் பொய்ம்மை யாமோ. (கங0)

* வாலபானு-பாலசூரியன்.

ஊனுடம் புடைய வாழ்வை*யொழித்துனக் கடிமை யென்று
மாநிலம் புகலா நிற்ப வந்துனை யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பான் மீள விடுத்தனை வேலை நீருள்
ஆனபி னன்னீ ராற்று நீரென வாவ துண்டோ. (கஙக)

அறததனிச செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுததவர் புரங்க ளெல்லாஞ் செற்றவ ரடியான் றன்னை
நிறுததினர் வெயிலி னென்று னின்புகழ்க் கேற்ற மாமோ. (கஙஉ.)

வானநா டவர்க்கு மேலோய் வந்துனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்று லாருனக் கடிமை யாவார
நானெனு மனத்தார் சொல்லு நல்லுரை யன்றி நின்ற
ஈனனு மொருவன் சொலவ தேறுமோ வுளத்தி லென்றா. (கஙங)

அவததொழில் புரியா மெய்ம்மை யன்பருக் கன்பு செய்து
பவககட லிடைவீ ழாமற் பரிந்தருட் பாவை நல்கித்
தவப்பெரு வடிவங் கொண்டு தாளளித தாளு மையர்
செவிப்புலன் புகுந்த தன்பர் செப்பிய மாற்ற மெல்லாம் (கஙச)

காம்படு தோளி பாகன் கண்ணுத லண்ண லன்பர்
தாம்படு துயர மெண்ணி யத்துயா தணிக்க வேணடித
தேம்படு மலங்கன் மார்பிற் றென்னவன் றனக்கு வென்றி
வாம்பரி யளிததல சொல்வாம் வல்வினைப் பகையை வெல்வாம்

திருப்பெருந்துறைச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருததம் - கஅங.

* வாழ்க்கை என்றும் பாடம்.

# குதிரையிட்ட சருக்கம்.

தந்தை யென்பவர் மைந்தர் வாதை தவிர்ப்ப தேகட னாதலால்
அந்த மின்றிய காத லன்ப ரழுங்கல் கண்டபி னரியெலாம்
வந்து வெம்பரி யாக வும்பரி வீரர் வானவ ராகவுஞ்
சிந்தை கொண்டன ரந்த மால்விதி தேடு வார்மதி சூடுவார் (௧)

தேசி லாநரி வந்து வந்து திரண்டு வெம்பரி யானபின்
ஆசி லாவிமை யோர்க டாமு மமைந்த சேவக ராயினார்
மாசி லாமணி மன்ற ராரிய வாசி வாணிகர் போலவே
ஏசி லாவுரு மாறி னார்மறை யிவுளி யின்புற மேறினார். (௨)

சேடு கொண்டு திரண்டு வீர ரிரண்டு ஞாங்கர் சிறக்கவே
ஊடெ ழுந்துக ளிம்ப ரெங்கணு மும்ப ருங்கிளர் வெய்தவே
கோடு டன்றுடி விம்ம நீடிய கூடல் சூழ்மதில் வாயில்வாய்
ஆடல் வெம்பரி கொண்டு சென்றன ராதி யாருமை பாதியார். (௩)

அங்கு நின்றவர் சென்று நிம்ப வலங்க லானை வணங்கியே
எங்க ளூர்ந்துகள் பொங்கி விம்ம வெழுந்து பல்லிய*மார்ப்பவே
திங்கள் வெண்குடை மன்ன வாரிய தேச வெம்பரி யின்றுநந்
துங்க வன்மதி லின்பு றம்பு துவன்றி வந்த வெனச்சொனார். (௪)

வாசி யின்றிரள் வந்த வென்றலும் வாத வூருறை யையர்மேல்
நேசம் வைத்தவர் தம்மை முன்ன ரழைத்து நீள்கலை யாதிதந்
தாசில் வெம்பரி நாண வம்மினென் றேதியங் கெழுந்தடையலார்
கூசு தன்படை சூழ வேயிறை கோயி லின்புற மெய்தினான். (௫)

* காகளம் - என்றும் பாடம்.

வேறு.

வண்டுபடி யலங்கலணிந் தடந்தோண் மாறன் மணிச்சிவிகை மீதேறி மதுரை மூதூர், கண்டிருக்கண் களிக்கும்வகையால வாயிற் கடவுளிடும் பரிவாரவு காண்பா னெண்ணிச், செண்டுவெளி * தனிற் போந்துபனிநீர் தோய்ந்த செழுங்கழுநீர் மதுமாலை சிறந்துதூங்குந், தண்டரள மணிப்பந்தர் நிழற்கீழ்ம்பொற் றவிசின்மிசை வீற்றிருந் தான் † றுனை சூழ. (சு)

முத்தமிழின் றிறநவிலும் புலவர் சூழ முதுமறையோர் மங்கலச்சொன் முறையிற் கூறக், கைத்திகழும் வளைபுலம்பக் கலன்கணமின்னக் கன்னியர்க ளிருமருங்குங் கவரி வீசக், கொத்துலவும் பலமலரின் வாசந் தோய்ந்து குலவுமிளந் தென்றல்வர மாதர் பாட, மெத்துமணி முத்தமெனும் பணிகள் பூண்டு வெண்மதியின் றோற் றம்போல் வீற்றி ருந்தான். (எ)

மங்குல்படி தடம்புரிசை வாத வூரர் மனங்களிப்ப விழிகளிப்ப வழுவி லாத, திங்களெனுந் தன்மரபு விளங்க வென்றுந் திருநீறு மஞ்செழுத்துஞ் சிறந்து மல்கச், சங்கினுடன் காகளங்கண் முழுவ மார்ப்பத் தயங்கியெழுந் துகளுயர்வான் றன்மேற் செல்லத், துங்க னெடுங் கடல்பரந்து வருதல்போலத் துவன்றிவரும் பரித்திரளின் றோற்றங் கண்டான். (அ)

வேறு.

அங்கிளர் மதுரையம் பதியி லாவணித்
திங்களின் மூலநாள் செறிதி னத்தினில்
எங்கணு நீறுமஞ் செழுத்து மோங்கிடச்
சங்கர னிடும்பரிச் சமுகம் வந்ததால். (கூ)

---

* செண்டுவெளி - குதிரைகடாத்தும்வீதி. † இனிதிருந்தான் என்றும் பாடம்.

தூத்திரண மணிகெழு சோதி மாமுடிப்
பார்த்திவன் விழிநலம் பருக வீதியிற்
கூத்தினர் செயலெனக் குலவு வாம்பரிச்
சாத்தினர்* வரும்பெருந் தன்மை கூறுவாம். (௧0)

கட்டிய சுரிகையர் கவின்கொள் வாளினர்
பொட்டணி நுதலினர் பொலன்செய் மேனியர்
பட்டுடை மருங்கினர் பவள நீள்வடம்
விட்டொளி விளங்கிய வியங்கொண் மார்பினர். (௧௧)

புன்மயிர்ப் பீலியர் புலியின் றோலினர்
பின்மலாப் பாசிலை பிணைத்த நுஞ்சியர்
வன்மொழிக் குரலினர் வயங்கு தூணியர்
வின்மலி கரத்தினர் வெறித்த பார்வையர். (௧௨)

பொன்னியல் குழையினர் பொலன்செய் மாலையர்
பன்னிற சாத்தினர் பணைத்த தோளினர்
சென்னியிற் கதிர்மணி யிலங்கு சேடனைப்
பின்னிவிட் டௌதெனப் பிணைத்த குஞ்சியர். (௧௩)

தாங்கிய சுரிகையுந் தயங்கு வேல்களும்
வாங்கிய சிலைகளுங் கணையும் வாளுமாய்
ஞாங்கரி லிவர்வர நாப்பட் டோன்றினர்
மீதங்கிய நதிமதிச் சென்னி யண்ணலார். (௧௪)

வேறு.

நச்சுரக வுசிமணி நண்ணுமொரு வண்ணக்
கச்சிடை விசித்துள கவின்கொளுடை வாளும்
பசசைமுழு நீலமொடு பன்னிறவ டஞ்சேர்
செச்சைநிற மன்னிய திரண்டவி ருதோளும். (௧௫)

---

* பரிச்சாத்தினர் - குதிரைவாணிகர்கள் "குதிரையைக்கொண்டு குடநா டதன்மிசைச் - சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்" என்றார் திருவாசகத்திலும்.

ஒப்பரிய சட்டையு முடுத்திலகு பட்டுந்
தொப்பியு முகத்திடை துலக்கமுள ராகிச்
செப்பரு நலங்குலவு செண்டொருகை கொண்டே
இப்படியி லிப்படிவம் யாவருள ரென்ன. (கசு)

கட்டுபடி மீதின்மணி கசசைமணி முன்பின்
இட்டவிரு பக்கமணி யின்னொலி புலம்பப்
பட்டிலகு பக்கரை பனிக்கவரி யெட்டும்*
விட்டொளி விளங்குமொரு வெண்பரியி லேறி. (கஎ)

வீசுகவ ரிததிரண் மிடைந்தொளிர மீதே
தேசொடு கவிததுள செழுங்குடைவ யங்கப்
பூசல்புரி வெம்பரி பொருந்துபடை யூடே
மாசில்குல வாரியரின் மன்னரென வந்தா (கஅ)

மன்னவனு மிங்கிவர் வருந்தகைமை கண்டே
தன்னுளம கிழ்ந்திரு தடங்கணிமையாமல்
அன்னமெனு மூர்திநெடு மாலரனை யலலால
இன்னவெழில் யாவருள ரென்றதிச யித்தான் (க௯)

பண்ணிய தவத்துள பயன்பரியின் மீதே
நண்ணிய தெனத்தமி னயந்தனர் வியந்தா
எண்ணிய முடித்தன ரெனக்கருதி நின்றார்
புண்ணிய மறைத்தமிழ் புகன்றதிரு வாயார். (உ0)

தூயசுடர் வேல்பல சுழற்றியெதிர் செல்வார
வாயொலி விளைப்பர்கல் வாளினை விதிர்ப்பார்
நேயமொடு தம்மிலணி நின்றுசமர் செய்வார்
ஆயின ரரன்புடையி லாங்கபரி வீரர். (உக)

---

* எட்டும்-அட்டதிக்கிலும், ஆகுபெயர்.

நீறுசிவ நீதிநிலை நிற்கவுல காளும்
மாறனு மகிழ்ந்துதவ மன்னரை யழைத்தே
கூறரிய வாரிய குலேசரொரு வீதி
ஏறும்வகை சென்றுரையு மென்றினிது சொன்னான் (உஉ)

என்னிவன் மொழிந்தன னெனத்தமி லிரஙகா
மன்னிய வருந்தவரும் வாண்முக மலர்ந்தே
கன்னலை நலஙகொள்கனி யைக்குறுகி நெஞ்சான்
முன்னுற வணஙகிவிழி முத்துதிர நின்று. (உ௩)

மன்றன்மல ரோனுநெடு மாலுமுரு வேறு
யன்றுமுத லின்றுமறி யாதவகை நின்றாய்
வென்றிவிடை யன்றியுயர் வெம்பரியின் மீதே
இன்றுனை வணஙகமுன மெத்தவ முயன்றேன். (உ௪)

வந்தபடி யிவ்வுரு வணங்குமிது வல்லால்
அந்தவடி வாகிலுனை யாரறிய வல்லார்
இந்தவகை கண்டடி யவர்கமெளியை யெனறே
சிந்தைதனி லன்பொடு தெளிந்துல கெல்லாம். (உரு)

என்றுமுக மன்பல வியம்பியரு ளாலே
வென்றிபுனை மீனவன் விளம்புமொழி சொன்னா
கொன்றைமுடி யாருமதி சைந்துகொடை மாறன்
நன்றியொடு காணும்வகை நற்பரி யுகைத்தார். (உசா)

* மன்னரவ பந்தமுடன் வட்டநெடு வீதி
என்னுமிவு ளித்தொழில்கள் யாவுமினி தேறி
உன்னுமன வேகமென வோடுமுயர் பாய்மா
நன்னட மிடும்படி நடாத்தியெதிர் வந்தார். (உஎ)

---

* பரிநடத்திக்காட்டும்வகை.

வெம்பரியி னண்ணலை வியந்துதமிழ் மாறன்
கம்பமுடி யெய்தவொரு கைவிரல் சுழற்று
அம்பொன்விலை யில்லதொ ரருங்கலை யளித்தான்
எம்பரமர் செண்டின்மிசை யேற்றுநகை செய்தார். (உஅ)

வேறு.

ஏற்றவொண் கலையை நேசமெய்தில னொருவன் *சென்று
காற்றென விரைவி னெய்திக் கடிதுதன் கரத்தில் வாங்கிப்
போற்றிலன் முடியின்மீது புனைந்தில னென்று மாறன்
சீற்றினன் மறைப்பி னாலே நெஞ்சிடை வெகுட்சி கொண்டான். ()

வெளிப்பட வரிய மேனி விண்ணவன் கண்ணு நெஞ்சங்
களிப்புற வருதல் கண்டுங் கண்டிலன் கன்னி நாடன்
ஒளித்துல கெங்கு நிற்போ னுறுபவ மொழித்து ஞானம்
அளித்திடி னன்றி யாவ ரவன்றிற மறிய வல்லார். (௩0)

எண்டிசை மன்ன ரன்பா லீந்தமென் கலைகள் யாவுஞ்
செண்டிடைக் கோட லன்னோர் தேயநல் லியற்கை யென்றே
வண்டமிழ் வாத வூரர் மாமது ரேச னெஞ்சிற்
கொண்டுளே முனிவு தீரக் குறைந்துமுன் னின்று சொன்னார் (௩க)

நலந்தகு மிந்த நீர்மை கேட்டபி னயர்ந்து மன்னன்
கலக்கமி லிவுளி நன்னூல் கற்றவர் தம்மை நோக்கி
இலக்கண விதியா லுள்ள விரும்பரி யிழிவு மேன்மை
துலக்குற நும்மி னாடி யெம்முடன் சொல்லு மென்றான். (௩உ)

சொற்றிகழ் துரக நூலின் றுணிபொரு ளுணர்ந்து ளோருங்
கொற்றவெம் பரிகட் குள்ள குற்றமுங் குணமு நாடிப்
பொற்றடங் கிரியின் மீது பொருகயல் பொறித்து மீண்ட
வெற்றிகொண் மன்னர் கோன்முனிவ்வகை விளம்பலுற்றார். (௩௩)

* ஒருவன் - வெம்பரியினண்ணல்.

வேறு

தாவினைச்சந் திரசுழியா மண்டா வர்த்தந் தண்டை யடியிற் சுழியா முடலின்பக்க, மேவுசுழி கௌவகமாங் காக வர்த்த மேன் மைதிகழ் முன்வளையச் சுழிதா னுகும். பாவுசெழுங் கேசாரி யடி யிற் சேர்ந்த பயனில் கொடுஞ் சுழிகேசா வர்த்தமாகும், பூவமருங் கசசையிற்பட் டடையேயாகப் புகன்ற சுழியிசசுழிகள் புணரா வாகி.

கொம்புகன்னங் திருகுகன்ன நஞ்ச பாதங் கொள்ளிக்கால் வெள்ளிக்கண் டீனி குன்று, வெம்புதழற் சுடலைமுகப் பரனோ கண்ட மணடப்பாழ் விலங்கிபல வண்ட மாதல், செம்பொறியா மக்கினிசித் திரங்கண் மூன்று சிறந்தினிய மட்டிற்பா லறுபா லென்றே,* அம்பு வியோர் மொழிந்தபழு திவையுமின்றி யடிநாவிற் குரமிரட்டை யாகா வாகி. (ருரு)

சிரமதனி லிரண்டுசெழுந் துளைப்பி னுன்கு சிறந்தவுரந்தனிலி ரண்டு நுதன்மே லொன்று, குரவமிசை நின்றசுழியொன்றி னேடு குலவியவீ ரைந்துசுழி குறையா வாகி, நரிவெருகு கருங்காக மலகை கோழி ஞாளிசெழுங் கேழலெனுங் குரலின் றுகி, விரவுபெருந் திரைவேலை மங்குல் சங்கம் விடைமுழவம் போன்முழக்க மிகவுண டாகி. (ருசு)

உருத்திகல்செய் புலியுளியங் கழுதை செந்நா யொண்பூனை நரியினுடன் காிய காகந், தரித்தவழற் புகைநிறமும் புனையா வாகித் தகுக்கிமருத தெனுங்கவனத் தன்மை யெய்தி, விரிதத கதிர் வெண்டரளந் திங்க ணீல மென்கமலத தாதுசெழுங் கனகங் காயா, அரத்தமலர் நல்லபசுங் கிள்ளை போல வமைந்தவொளி தயங்கியவங் கத்த வாகி (ருஎ)

* பாலறுபாழென்றே என்றும் பாடம்

நெற்றியகன் றுயர்குரவ முடைத்தாய் வெண்மை நிறைந்து தமி லொத்திலகு மெயிற்ற வாகித், துறறநறுங கந்தமிகச சிறந்து நாவுஞ் சூதவிளந் தளிர்போலு மருணந் தோய்ந்தே, உற்றவிரண டிமைமயிருந தொகையுண டாகி யுக்கிரமாம் விழிப்பார்வையுடைய வாகி, முற்றுமெயிற் றசையின்றி யுள்வளைந்து முக்கோண மெனத் திகழு முகத்தவாகி. (நஅ)

உளையினுடன் றலைமயிரு நிறமொன் ருகி யுரத்தினுடன் கழுத்துரக படமே போன்று, வளைசிறந்த தொனிபரந்து குவிந்துள் வாங்கி மண்டலமுண டாயுரங்கொள் குரஙகள் சேர்ந்து, இளைகொ ணரம் புகள்கரந்து தசைதா னென்றிக கிளர்முழந்தா ணெளித்த பதங் கெழுமலின்றி, நெளிமுதுகு புனைந்துதொடை திரண்டு தணை டை நீண்டுடல நெய்த்தநிற நீர்மை யாகி (நகூ)

மிக்கசெழு மறைநாவிற் கமல நாதன் விழிபபுனலில் விண ணோர்க ளெண்மர் தம்பான், மைக்கடன்மே லமிர்ததி லங்கிமீதின் மல்குகருப் பையிலுலூக வண்டந் தன்னிற், றெுக்கவெழு பேத மெனு மிவற்றிற் ரேன்றுந் தொன்மையவா யிரிரண்டு துணைததா *ணெற்றி, ஒக்கவெளுக் கும்பரிக ளுளவாய் † வானி லொணபுன லிற் செல்லுநெறி யுளவு மாகி. (சo)

மஙகாளன் சாரஙகன் கஙகா நீலன் மௌவழகன் கொஙகா ளன் சன்ன சம்பான், குஙகுமசசோ ரன்கரியானீலன் சாரன்குலவு மள்ளா னுரஞ்சிவந்தா னல்லான் பொல்லான், றங்குகரஙகாற் சம்பா னென்று கூறுந் தன்மையுள பன்னிறமும் புனைந்தசாதித், துஙகமிகும் பரியிவையென் றவற்றின் றன்மைத் தொன்மையுரைத் தரசனைமுன் றெழுது நின்ருர். (சக)

---

* துணைத்தாள் - ஒன்றையொன்றெத்தகால்.

† பரிகளாயுள்ளனவாய் என்க.

நற்பரியி னியல்புணர்ந்தோ ரின்னவாறு நவின்றமொழி கேட்டு மிக நயந்துவெள்ளி, வெற்பனைய விடையேறி யளிக்குந் தெய்வ வெம்பரிகள் யாவும்விலை மதித்தபின்னர்ப், பொற்புடைய தன்பொருண்மே லெண்ம டங்கு * போதுதலாற் பொங்குமகிழ் வெய்தி மாறன், றற்பரனை முகநாடிக் கயிறு மாறித் தருகதுர கத்தொகுதி தம்மை யென்றான். (௪௨)

வேறு.

காத்துல கனைத்து முய்யக் கண்ணருள் செய்யு நீதிப்
பார்த்திவன் கருமஞ் செய்வார் பற்றிய கரத்தில் வாங்கச
சாத்தவர் தம்மி லாங்கோர் சால்பினர் † கயிறு மாறி
ஈத்தனர் ‡ பந்தி யூடு சேர்த்தன ரிவுளி யெல்லாம். (௪௩)

திணடிறல் கெழுவு நேமித் தென்றிசைக் கிறையுஞ் செய்ய
வண்டமிழ்க் கிறையுங் காண வந்திடு திசையி னேகிப்
பண்டைநற் படிவ மாகிப் பணிந்துவிண் ணவர்கள் சூழக்
கொண்டலைப் பொருவு கண்டர் குலவுதங் கோயில் புக்கார். (௪௪)

வாய்ந்தன பரிக ளும்மா லென்றெழில் வாத வூரின்
வேந்தரை மனையி லேக விடுத்துள மகிழ்ச்சி கூர்ந்து
சார்ந்தமெய்த் தகைமை யோருந் தானையுஞ் சூழ வேகி
ஆய்ந்தநற் றமிழ்நூல வலல வரசனுங் கோயில புக்கான். (௪௫)

அத்தின மகல மாலை யணைதலும் பரிக ளெல்லாம்
நித்தன தருளி னாலே நெடுங்குர னரிக ளாகி
மெய்த்தமிழ் மதுரை மூதூர் விழித்துயி லொழிந் திரங்கத
தத்தமி லுடன்று கூடித தனித்தனி களித்துநின்று. (௪௬)

வேறு.

நின்ற நின்ற நெடும்பரி யாளர்மேற்
சென்று வெம்பகை செய்து வெருட்டியே
துன்று கின்ற துரங்க மொருங்கொடு
கொன்றுநின்று § யர் கூவிளிக் கொணடவால். (௪௭)

---

* போதுதலால் - மிகுதலால். † சால்பினர் - தலைவர். ‡ ஈத்தனர்-ஈந்தார்; விகாரம். § கொன்று நிர்றல்-கொல்லுதல், ஒருசொல்

வரைசெய் கோபுர மாட நெருங்கிய
அரச வீதியு மாவண வீதியும்
முரச வோசை முழக்கொழிந் தேமிகக்
குரைசெய் வாய்நரிக் கூக்குர லானதால். (சஅ)

பாடி யாரணம் போற்றமன் றிற்பயின்
றாடி யார்விளை யாட்டின் புதுமையால்
ஓடி யாரு மொளித்திட வென்றொரு
கோடி யானது கூவு நரிக்குழாம். (சகூ)

துங்க மாறன் றொருபடை வெங்கொலை
தங்கு மாயுதந் தாங்கி யெதிர்க்கவே
எங்கு மான நரிகளெல் லாங்கொடுஞ்
சிங்க மாயமர் செய்யத் தொடங்குமால். (ரு0)

நீடு வாடை யிடந்தொறு நின்றணி
கூடு வார்மிகக் கூவி வெருட்டுவார்
ஓடு வாரொளித் தோடிப் புகுமிடந்
தேடுவா ரெதிர் சென்றமர் செய்குவார். (ருக)

எங்க ளாருயிர் காத்தரு ளின்றணி
திங்க ளோயெனத் தெய்வம் பராவுவார்
அங்க பாட மடைத்தரண் செய்குவார்
மங்கு லாடு மதிற்*றலை யேறுவார். (ருஉ)

நற்ற வஞ்செய நன்கில தானதோ
கொற்ற வன்செய்ய கோல்கொடி தானதோ
இற்றி தன்பய னென்னென வின்னணம்†
உற்‡றி ரங்கினர் கூடலு ளோரெலாம். (ருங)

---

* மங்குலாடுமதில் - முகில்செல்லாமற்றடையுற்று நின்று அசையும் மதில் † இன்னணம் இரங்கினரென்க. ‡ உற்று - யாவரும் ஒருங்குகூடி.

தூய வன்றூர கத்தொழி லாளர்கள்
கோயி லின்கடைக் கூக்குரல் செய்துபோய்
மாய வெம்பரி வந்தவெ லாநரி
ஆய வென்றர சற்கெதிர் கூறினார். (௫௪)

மாக்க ளோசையும் வாம்பரி யோசையுங்
கூய்க்கு லாவு குறுநரி யோசையும்
மீக்கொண் மாமுடி மீனவன் றன்செவித்
தீக்கொள் வேலைச செருகிய தொத்தவே. (௫௫)

இந்த வாறொலி கேட்டிரு கண்டழல்
சிந்த வாகஞ் சிறவியர்ப் பெய்திட
அந்த மாறன் வெகுட்சிகண டணைலா
வந்த மாய நரிப்படை மாற்றினர். (௫௬)

பொன்கொ ளுடன் புனைந்த நலந்திகழ்
மின்கொ ளாரம் விளங்கிய மொய்ம்பினன்
றன்க ணுகி நடப்பவா தணடல்செய்
வன்க ணாளரை வம்மெனக் கூவினன். (௫௭)

வேறு.

நரியினிற் றொகுதி யெல்லா நற்பரித் திரள்க ளாக்குஞ்
சரிதி*யைக் கொணர்தி ரென்னத தாடொழு தவர்க ளோடி
இருபிறப் புடைய ராகி யினிப்பிறப் பில்லார் தம்மை
விரைவினிற் குறுகி நும்மை யழைததனன் வேந்தனென்றார். (௫அ)

சித்தருக் கன்பு பூண்ட சித்தரு முறுவல் செய்து
நித்திலத் தொளிபோன் மின்னு நீறெனுஞ் சாந்து பூசிப்
பத்தருக் கேவல் செய்வார் பதமலர் முடியிற் சூடி
முத்தமிழ்ப் பொருநை நாடன் முன்புசென் றருகுநின்றார். (௫௯)

* சரிதி - நடையையுடையோன், நடை - ஒழுகு முறைமை; நரியைக் குதிரையாக்கும் முறைமை என்க.

மூட்டெழு மழல்போன் மன்னன் முனிவுடை முக*த்த னாகி
ஈட்டுநம் பொருள்க ளெல்லா மிரப்பவர் தமக்கு நல்கி
நாட்டுள நரிக ளெல்லா நற்பரி யாககி நம்முன்
காட்டின ரிவர்செய் மாயங் கண்டிரோ வமைச்ச ரென்றான். (சுo)

தன்றொழில் வழுவி னோர்க டமக்குறு துயரஞ் செய்தல்
வன்றிற லரசர் நீதி யாயினு மறைநூ லாளர்
சென்றுயர் தவத்தி னிற்பார் தெரிவையர் விருத்தர் பாலர்
என்றிவர்க் குறுகண் செய்வ தெம்மனோ ரியல்பன் றென்று. (சுக)

தண்டல்செய் வன்க ணாளர் தங்களை நோக்கி நங்கண்
கண்டிட முன்னில் லாமற் கடிதினி லிவர்க்கொண் டேகி
மண்டழல் வெயிலி னூடு வளைப்பினி னிறுத்தி நம்பாற்
கொண்டுள தனங்க ளெல்லாங் குறைவற வாங்கு மென்றான். (சுஉ)

வன்றிற லேவ லாளர் மறையவர் தமைக்கொண் டேகி
ஒன்றிய வளைப்பி னூடு நிறுத்தலு முலகோர் போற்றும்
நன்றிகொள் வாத வூரர் நரியெலாம் பரிக ளாக்கித்
தென்றிசை நிருபற் கீந்த சித்தரை நினைந்து சொல்வார். (சுங)

தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
றில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பா லின்றெனை யடிமைகொண்டாய்
அல்லையோ தமியே னின்ன லறிதியோ வறிந்தி லாயோ. (சுச)

பரித்திர ளரியே யான பான்மைகண் டடியேன் றன்னை
வருத்தின ரிதனை மாற்ற வல்லநீ மாற்று யென்னிற்
றரித்தனை விடத்தை யென்னுந் தன்மையும் புரங்கண் முன்னாள்
எரித்தது மிலையா மென்றென் றிரங்கின ரெவர்க்கு மிக்கார். (சுரு)

---

* முனிவுடைமுகம்-முனிவுடைமையைப் புலப்படுத்து முகம் முனிவு - பெருங்கோபம்.

நன்றிகொள் கடவுட் கங்கை நதியினை வைகை யூடு
சென்றெழில் வாத வூரர் பேரிடர் தீரென் றேவி
அன்றொரு மடந்தைக் காளா யடியவர்க் கெளியார் கொன்றை
துன்றிய முடியின் மேன்மண் சுமந்தமை யுரைத்தல் செய்வாம்.

குதிரையிட்டசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௪௧.

# மண்சுமந்தசருக்கம்.

தங்கிய வருளின் மிக்கார் தாம்படு மிடும்பை யுன்னி
அங்கண ரவர்பா லுற்ற வருந்துய ரகற்று கென்று
கங்கையை விடுப்ப வேகிக் கடும்பெருக் கெடுத்து வைகைப்
பொங்கலைப் புனலா*யெங்கும் புரண்டது புணரி யேபோல்.

சேர்ந்தவெண் முத்த மூரல் செய்துநீர்க் கலைமே லார்த்துக்
காந்தளஞ் செங்கை வீசிக் கனதனக் குரும்பை காட்டி
மாந்தளிர்ப் பதங்கண் மீது வருதிரை ஞெகிழ மார்ப்பப்
போந்துள கணிகை மாதர்ப் போன்றது வைகை யாறு. (௨)

திரைப்பெரு மருப்பி னாலே செழுங்கரை யிருபாற் குத்தி
மரத்திரண் முறித்துச சாலி வயலெலா மழித்து வாயால்
நுரைத்திரள் சிந்தி மீதே நுண்மண லிறைத்து வண்டு
நிரைத்தலின் மதத்த வேழ நிகர்த்தது வைகை யாறு. (௩)

மைத்திகழ் குழலா ளந்த மலைமகண் முலையிற் றோய
அத்தனை வருத்து மேன்மை யனங்கனா யுதமென் றெண்ணி
ஒத்தெழுந் தொளிருங் கன்ன லுயங்குசெங் கழுநீர் கஞ்சம்
புய்த்‡தவை யழிக்க வேண்டிப் புரண்டது பழன மெல்லாம். (௪)

* ஆய்- ஆகவென்பதன்றிரிபு. ‡ புய்த்தல் - பிடுங்கல்.

வடம்படைத் துடைய பார வனமுலை முகத்து மாதர்
நீடேர்துகில் கடுகி வீழ்வ தென்னநின் றழகு செய்து
தடம்படக் கிடந்த தெங்கின் றயங்குசெங் குரும்பை மீது
நெடும்புனற் றிரைபோய் மீள நிவந்தது வைகை யாறு. (௫)

மீதெழு பரிதி கையால் விடுங்கனல் வெம்மை தீரப்
பூதல மடவாள் போர்க்கும் புதியவெண் டுகிலே போல
ஏதலர்ப் பழனஞ் சோலை யேதெனப் பரந்து கஞ்ச
மாதுறை மதுரை மூதூர் மதிற்புறஞ் சென்று சேர்ந்து. (௬)

தாங்கிய துவச நாஞ்சிற் றடமதி லிடியத் தள்ளி
ஆங்கெழின் மதுரை மூதூ ரழிப்பது போன்று செல்லப்
பாங்குள விடங்க ளெல்லாம் பரந்தது வைகை நன்னீர்
ஈங்கெது செய்வோ மென்னா யாவருங் கவற்சி கொண்டார். (௭)

மைக்கடுங் களிற்றுத் தானை வழுதியுங் கடிது நண்ணித்
தொக்கபொன் மலரு முத்துந் துகின்மணிப் பூணு நல்கித்
தக்கவண் புவியி லுள்ளோர் தமக்குயி ரென்னு மன்னே
மிக்கநின் கோப மாறல் வேண்டுமென் றிரைஞ்சி நின்றான்.  (௮)

கலைமதிக் குலத்து மன்னன் கன்னிநன் னுடன் கூறுந்
தலைமைமிக் குடைய சொல்லாற் றன்முனி வொழித்த லின்றி
மலையெனத் திரைகண் மேன்மேல் வருதல்கண் டிதுவென்னென்னா
நிலையுறச் சிந்தை யுள்ளே நேடினா னேடிப் பின்னர்.

ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்
றீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்ச ரென்றான். (௧0)

---

* ஈண்டு "முன்னவனாற் கோயிற் பூசைகண் முட்டிடின்" என்னுந் திருமந்திரஞ் சிந்திக்கற்பாலது.

விளங்கிள மதிசேர் சென்னி வித்தகர் பத்தரான
வளந்திகழ் வாத வூரர் வருந்திய வினைப்பி னீக்கி
உளங்கொள மகிழ்ச்சி செய்யி னுறுபுன லூர்கொ ளாதென்
றளந்தறி வறிந்து கூறி யாஙகவர் தொழுது நின்றார். (கக)

மன்னனு மவர்க டம்மேன் மகிழ்ந்*தருட் பார்வை நல்கி
என்னுள மதித்த வாறே யிஙகினி துரைத்தீ ரென்று
கொன்னுறு வினைப்பி னூடு நிற்குநற் குணத்தி னரை
முன்னுற வழைத்து நட்பான் முகமலர்ந் திதுமொ ழிந்தான். (கஉ)

பாம்பணி செய்ய வேணிப் பரம்பர னடியார் கையில்
ஆம்பொரு ணமதே யானு லறம்பிறர்க் காவ துண்டோ
தேம்படு மலங்கன் மார்பீர் செயலிதற் குமது மேனி
சாம்புவ தவமே யான்செய் தணடலே தகவி லாமை. (கங)

உற்றவித் தகைமை முன்னே யுணருமிவ் வுணர்வி லாமை
குற்றமித் தனையு நம்மேற் கொணடனங குறைகொ ளாமன்
மற்றினிப் புகலு மாறென் வைகைநம் மூர்கொளாது
நற்றவத் தலைவர் நீரே யடைப்பியு மெனாந வின்றான். (கச)

அருட்பெரு வழுதி யிவ்வா றன்புரை பகர்ந்த போதுந்
தரிப்பரி தென்ன முன்னந் தழலென வெகுணட போதும்
விருப்பொடு வெறுப்பி லாத மெய்ம்மையார் தம்மை யாண்ட
திருப்பத நினைந்தார் வைகைச் செழும்புன லூர்கொ ளாமல். (கரு)

சுந்தரப் பரிமேல் வந்த தோற்றமே மனத்தி லுன்னி
அந்தரத திரைஞ்ச நன்னீ ரடங்கியுள் வாஙகிச செல்ல
வெந்துயர்ப் பிறவி யான விடஙகிளர் வேலை நீந்தி
வந்தருட் கரையிற் சேர்வார் வைகையங் கரையிற் சென்றார். (கசு)

* அவர்கடன்மேன் மகிழ்ந்து - அவர்களிடதது மகிழ்சசிகொ
ண்டு. மேல் இடப்பொருளுருபு.

முறைமுறை வணங்கி நின்ற வாரியர் முகத்தை நோக்கி
துறைதிரை நெடுநீர் வையை யணைகடி தடைத்தல் வேண்டும்
உறையுமிம் மாந்த ரெல்லா மொல்லையில் வம்மி னென்று
பறையறை வித்து நம்மூர்க் கிவ்வுரை பரப்பு மென்றார். (கஎ)

ஆரியர் கடிதினோடி வன்பறை யறைவித் தம்பொற்
றேரியல் வீதி தோறுஞ் சென்றுரை பரப்பு முன்னே
கூரிய கொட்டு மண்சேர் கூடையுங் கொண்டு வையை
நீரியல் கரைமேல் வந்து நின்றனர் மதுரை மாந்தர். (கஅ)

நீறுகொண் டிலங்கு மேனி மறையவர் நியமஞ் செய்த
வீறுகொண டிடங்க டோறு மாரியர் விரைவிற் சென்று
கூறுகொண் டெவர்க்கும் வேறு கோலறை யளந்து செங்கை
மாறுகொண டுறுக்கி வையை வன்கரை யடைக்க லுற்றார். (ககூ)

கண்பெறு கழையின் முத்துங் கடகரி மருப்பின் முத்தும்
வெண்பணி லத்தின் முத்து மேதகு கரும்பின் முத்தும்
வண்புனற் றிரைகள் வீச வரையெனக் குவைகள் செய்து
பண்படப் பொருந்த நீருட் பதித்துயர் வரம்பு செய்வார் (உ0)

பரித்திர ணிறுத்து மென்பார் †பாம்புக ளுருட்டு மென்பார்
திரைப்புனன் மிகுத்த தென்பார் தேவர்கட் கரிய மென்பார்
நிரைப்படு மகிலோ டார நெறிப்பட வொதுக்கி நீடு
வரைப்பிடைக் குவித்து நிற்பா ராயினர் மதுரை யுள்ளார். (உக)

எருடைப் புதுநீர் வையை யிவ்வகை யடைக்கு மெல்லை
நீருடைப் பொலிந்த வேணி நின்மலற் கன்பு மிக்காள்
சீருடைத் தவத்தின் மிக்காள் செம்மனச் செல்வி யென்னும்
பேருடை நரைமூ தாட்டி பிட்டுவிற் றுணவு கொள்வாள். (உஉ)

---

* குதிரைக்கால். † வைக்கோற்புரி.

ஆங்கவட் களந்து நீக்குங் கோலறை யடைப்ப தின்றி
ஓங்கலைப் புதுநீர் வைகை யுடைப்பினை யடைக்கு மெல்லை
தீங்குள தறுக ணாளர் சென்றவட் குறுகண் செய்ய
ஈங்கெனக் குறுதி யாவார் யாவரோ வென்றி ரங்கி. (உ௩)

பிட்டினைக் கூலி கொண்டு பெருங்கரை யடைப்பா ரின்றி
நெட்டிலைச் சூல மேந்து நின்மலன் கோயிலெய்தி
மட்டறத் தளர்ந்த கொங்கை மார்பினிற் கண்ணீர் வார
எட்டுருத் திரண்ட* பாத மிறைஞ்சிநின் றினைய கூறும். (உ௪)

வேறு.

நெட்டரவக் கச்சுடையாய் நீலநிறத் திருமாதின்
வட்டமுலைத் தழும்புபட வந்தணையுந் திருமார்பா
கட்டியசெஞ் சடையாயுன் கண்ணருள்கொண் டெப்பொழுதும்
பிட்டினைவிற் றுண்பேறக்கும் பேரிமைப யுளதாமோ. (உரு)

யாருடனு னினிப்புகல்வே னெனையுடையாய் வைகையினன்
னீருடையா தடைக்கும்வகை நீசிறிதின் றருளாயேற்
சீருடையா யுனக்கடிமை செய்யுமவர்க் கெளியையெனும்
பேருடையா யெனப்பலரும் பேசுமொழி பழுதாமே. (உ௬)

தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதெனை திலம்பாடென் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளா தொழியினுயிர் நீப்பேன்மற் றென்செய்கேன். (உ௭)

வேறு.

இன்றெனக் குறுதி யாகி யானிடும் பிட்டு வாங்கி
வன்றிறற் கூலி யாளாய் வன்கரை யடைப்பா ரில்லை
உன்றனக்கபயம் யானென் றுரைப்பவ டன்மே லன்பு
சென்றவட் காளா மாறு துணிந்தனர் தேவ தேவர். (உ௮)

---

* அஷ்டமூர்த்தியாயிருந்த.

ஆடையுந் துணிந்த சீரை யாக்கியே கூலி யாளர்க்
கூடையுந் தலைமேற் கொண்டு கொட்டுடைத் தோள ராகிப்
பீடைகொண் டயர்வாள் காணப் பெரும்பசி யுடையார் போல
* வேடைகொண் டொல்லை வந்தார் வேண்டியவடிவங்கொள்வார

வந்தெனை யேவல் கொள்வா ருளர்கொலோ மற்றிங் கென்று
புந்தியின் மகிழ்ந்து கோயில் வாயிலிற் புகன்ற போதில்
அந்தநன் மொழியைக் கேளா வன்னைதன் னயர்ச்சி கூருஞ்
சிந்தனை யொழிந்து கூலி யாளரைச் சென்று சேர்ந்தாள். (௩0)

புடையின்மே லுலகோரின்றிப் புனைந்துள புலித்தோ லாடை
உடையின்மே லசைக்குங் கச்சா மோங்குநச் சுரக மின்றிச
சடையின்மேன் மதிய மின்றித் தாங்கிய மழுமா னின்றி
விடையின்மே லின்றி நின்ற வெளியனை வெளியிற் கண்டாள். ()

மைந்தநீ யெனக்கிங் காளாய் வருகென முன்னர்க் கூலி
தந்தியேல் வருவ னென்று சாற்றலு நுகர விப்போ
திந்தவா ரமுதம் போலு மினியபிட் டளிப்பே னல்லால்
அந்திவா யிதனை விற்றே யளிப்பனின் கூலி யென்றாள். (௩௨)

இரும்பசி யுடையே னன்னே யினியபிட் டளிப்பை யாகிற்
† குரம்புகொண் டடைப்பன் யானே கோலமை முழுதுமென்னக்
கரும்புறத் துகின்மே லிட்ட பிட்டினைக் கரததா லள்ளி
விரும்பியிங் கிதனைக் கொள்வா யென்றனள் விருப்ப மிக்காள்.

கூற்றடுங் கமல பாதர் குறந்துணிக் கரிய சீரை
ஏற்றிடும் பிட்டு வாங்கி யின்புற வமுது செய்து
மாற்றரும் பசியை யன்னே மாற்றினை யினிப்போய் வைகை
ஆற்றினின் கூற்றி லுண்டா மருங்கரை யடைப்ப னென்றார்.

---

* வேடம். † செய்கரை.

நன்றுநன் றின்னு மன்னே நயந்துபிட் டளித்தல் வேண்டும்
என்றுதந் தணிந்த சீரை யேற்றது நிறைய வாங்கித்
தின்றுதின் றலைநீர் வைகைச் செழுங்கரை யதனிற் சென்று
குன்றெனுந் தவத்தா யுன்றன் கோலறை காட்டு கென்றார். (௩௫)

மெய்த்தவம் புரிவார் தம்மில் விழுப்பமிக் குடைய வன்னை
இத்தடங் கரையை வல்லே யெம்பிரீ யடைப்பா யென்னப்
பைத்தவெம் பகுவாய் நாகம் பணிமதிப் பாதி கொன்றைக்
கொத்துடன் முடிக்க வல்லார் கோலறை யடைக்க லுற்றார். (௩௬)

பேர்ப்பாமண் கூடை பெயவா பிறைமுடி*மேற்சும் மாடு
சேர்ப்பர்பின் சுமந்து சென்றச செய்கரை சிந்தி மீள்வர்
வேர்ப்பர்மெய் யிளைப்பார் போல மென்றுபிட் டிரத நாவிற்
பார்ப்பரவ் வன்னை தன்மேற் பரிந்தருட் பார்வை செய்வர். (௩௭)

பிட்டுநன் றென்று கூறிப் பிறைமுடி யசைப்பர் வேடன்
இட்டமென் றசையிற் சால வீசனுக் காமி தென்பர்
கொட்டுடன் கவித்த கூடை கொணடுநின் றாடல் செய்வர்
வெட்டிமண் குவிப்ப ரோடி விரைந்தடிப் பாய்ந்து மீள்வர். (௩௮)

பரிவுடை மனத்தி னாளும் பரமர்தஞ் செய்தி கண்டு
கரையினை யடைத்தல் வேண்டு மென்றுதன் கருமங் கூறாள்
உரனுடை வழுதி தூதர் காண்பரே லுறுகண் செய்வார்
இருவினை யுடையேன் மற்றிங் கென்செய்வே னெனநி னைந்தாள்.

மற்றவ ணிலைமை வெள்ளி மன்றுணின் றாடுகின்ற
கொற்றவ ரறிந்து பின்னுங் கூடைமண் கரைமேற் கொட்டி
உற்றவிக் கரையை யன்னே யொல்லையி லடைப்ப னின்னே
சற்றிதற் கிரங்கா தேகுன் றகவுடை மனையி லென்றார். (௪0)

---

* பிறை முடி - பிறை இயற்கையடை

நீறணி புனித மேனி நின்மலன் விடுப்ப வேகித்
தோறிரை முகத்தி னுடன் றென்மனை புகுந்து மெல்லிலை
கூறருந் தவத்தின் மிக்காள் கோலமைற யடைப்ப வஞ்சி
மாறிடு திரைக்கை தன்னாற் றெழுதனள் வைகை மங்கை. ()

சிறந்தமண் கூடை வேணித திருமுடிக் கொட்டை யாக
நிறந்திகழ் கொன்றை நீழ னிறைமண லணையே யாக
உறந்தொழின் முயற்சி யாலே யுயங்கிமெய் யிளைத்தார் போல
மறைந்துல கெங்கு மான வள்ளலார் பள்ளி கொண்டார் (சஉ)

ஆங்கவா துயிலு மெல்லை யருட்பெரு வாழ்வின் மிக்கார்
ஓங்கிய கருமஞ் செய்வா ராகியொண பிரமபு தாங்கிப்
பாங்குநின் றவரை நாடிப் பரந்தகோ லறையி லுள்ள
தீங்குநன் குணாவீ ரென்னச சென்றகன் கரையிற் சேர்ந்தார்

நன்குற வடைத்தல் செய்தா ரியாவரு மெனாு யந்து
சங்கர னடைகரு நீடு தடங்கரை யவர்க ளெய்தி
எங்கணு முயாந்து தாழ்ந்த திவ்விடம் யார்க்கு நேர்ந்த
பங்கிது மொழிமி னென்ன நின்றவ ரிவைப காநதார். (சச)

பெருவள நீடு கூடற பிட்டுவிற் றுணவு கொள்வாள்
ஒருமுது மடந்தைக் காளா யொருவன்வந் திங்க ணெய்தி
இருநில மகழ்ந்து கூடை யுட்சொரிந் திரங்கி நிற்பன்
சிரமிசை யெடுப்பன் மீளச சிந்துவன் குவிததல் செய்வான். § ()

பாடுவ னுடல் செய்வன், பையவோர் கூடை மண்ணை
நீடுதிண் கரையி லேறச் சொரிகுவ னொடிந்து நிற்பன்
ஓடுவ னோடி மீள்க னொரு கைமண் கரையிலேறப்
போடுவன் போக வென்னில் வருவன்வா வென்னிற் போவன்

---

* சென்றனர் கரையி லன்னோர் என்றும் பாடம். § மீள்வன் சிந்துவ னகுதல் செய்வான். என்றும் பாடம்.

பிட்டினை நுகர்வ னையா பெரிதுநன் றென்று செங்கை
கொட்டுவன் செய்கை காணி லரசிளங் குமர னுப்பான்
நெட்டலர்க் கொன்றை நீழ னெடுந்துயில் கொள்கின் றானங்
கட்டுரை சிறிதுங் கேளா னவன்றனைக் காணுமி னென்றார். ()

என்றலு மவனை யிங்கே கொணர்மினென் றவரு ணின்ற
வன்றிற லொருவன் கூற வாரியன் வல்லை யோடிச்
சென்றலு ஞான யோகச் செழுந்துயி லொழிந்து மூன்று
துன்றிய புரங்கள் செற்றார் துண்ணென விழித்தெழுந்தார் ()

விழித்தலுங் கடிது சென்ற வாரியன் வெருவ நோக்கி
மொழிக்கனல் சிந்தி யந்த முன்னவன் றன்னை யெய்தி
அழைத்தலும் வருதல் செய்யா தஞ்சிநின் றிரங்கல் கண்டு
பழித்தவர் செங்கை பற்றி யீர்த்தனன் பரிவி லாதான். (௪௯)

ஆங்கவன் கடிதிற் றள்ளி யண்ணலை யெண்ணி லாத
தீங்கினன் முன்னாக் கொண்டு சேறலும் வெகுட்சி யெய்திப்
பாங்குநின் றவரு ணின்ற பாவியைப் பாவி நோக்கி
ஈங்குவெங் குருதி சோர வடித்திடுங் கிவனை யென்றான் (௫௦)

கடுத்தசொல் வன்க ணாளன் கதத்துடன் மாறு கையில்
எடுத்தனன் முனிவர் விண்ணோ ரெடுத்தனர் தொழுது செங்கை
அடித்தன னடித்த போதி லன்புடை யரிவை பாகங்
கொடுத்திலா தணுக்க மெய்த மறைந்தனர் குறைவி லாதார். ()

வேறு.

தார்மேனின் றிலங்குபுய வழுதி மேலுந் தன்மனைமங்கையர் மேலு மமைச்சர் மேலும், யார்மேலுஞ் சென்றுபொருஞ் சேனை மேலு மயன்மேலு மரிமேலு மறவோர் மேலுந், தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ் சிறந்துளவிந் திரன் மேலுந் தேவர் மேலும், * பாரமேலுங் கடன்மேலு மரங்கண் மேலும் பட்டதரன் மெய்யிலடி பட்ட போதில். (௫௨)

* ஊர்வன, நீர்வாழ்வன, பறவை. தாவர முதலியன.

தந்தமுரு வொழிந்து பிறிதுருவ மெய்திச சதுர்முகனுஞ் சங்காழி தரித்த மாலும். அந்தமுத றெரிவரிதாய் வெளியே நின்ற வணணலார் வடிவிலடி பட்டபோதில் எந்தவுல கஙகளினு மிருந்துளோர்க ளெம்முடலி லடியுரைத்த தென்று கூற, முந்தியெழும் பன்மொழிக ளுகாந்த வெல்லை மோகரிக்கு மெழுகடலின் முழக்கம் போன்ற. (௫௩)

மாயையெனுங கரும்பெரிய புனன்மேன் மொக்குள் வணணமெனு மெண்ணிலா வண்டத் துள்ளும், எயவகை யெண்பத்து நான்கு நூறு யிரமான பலயோனி யெவற்றி னுள்ளும், ஆயவுயிர்க் குயிராகி நிற்கு  தன்மை யவனிதலக் தஞ்ஞான ரறிந்து பாதச சேயமலா வழுகதுதறகோ கூலியாளாய்ச சென்றுமுடி மண்சுமந் தார தில்லை ஈாதா (௫௪)

### வேறு.

மையணையுந் திருமிடற்றுர மெய்யிலடி வாதவூர்
ஐயருடம் பினும்வந்து படுதலுமே யயர்வெய்தி
உய்யவெனை யாட்கொள்வா னுவந்தொருவர்க் காளாகி
மெய்ய*ரெழுந் தருளினரோ வென்றென்று மிகநொந்து. (௫௫)

தம்பெருமை யறியாத தம்மிறைவர் † தமக்கிரஙகிக்
கம்பிதமுங் கண்ணீரும் வரக்கவற்சி யுறும்போதில்
வெம்பிறவி தொலைத்தார்முன் ஞரியர்கள் விரைந்தோடி
உம்பர்பிரான் றிருவிளையாட் டெல்லாமங் குரைத்தார்கள். (௫௬)

வேட்டுருகும் பெருங்காதல் வித்தகரித் தன்மையெலாங்
கேட்டுமனந் தளர்ந்துமிகக் கிளர்ந்துவிழிப் புனல்பெருக
வாட்டிகழுஞ் சடையண்ணல் மண்சுமந்த விடஙகொடுபோய்க்
காட்டுமென மொழிந்தவரோ டவ்விடநேர் கடிதெய்தி. (௫௭)

---

* மெய்யர் - அழிவில்லாதவர்; எனவே தோற்றமு மில்லாதவர் என்பது தானே போதரும் † ஈண்டு "தன்பெருமை யறியாத தன்மையன்காண் சாழலோ" "தானுங காணகில னின்னமுந் தன்பெருந்தலைமை" என்னுந் திருவாக்குக்கள் சிந்திக்கற்பலன.

அழுங்கியரும் பெருநரகி லடியேனும் வீழாமல்
எழுந்தருளும் பெரியோனே யெங்கணுளா யென்றென்று
தொழுதகரமுங் கணணீருந் துளங்கியமெய்ப் புளகமுமாய்
விழுந்துபுரண டிவ்வாறு புலம்பினாமெய் யன்பாளர். (௫௮)

நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
ஆறுபடுஞ் சடைமுடியா யடியவாகட் கெளியானே
மாறுபடும் புரமெரித்தாய் மாறுபடும் போதுடலிற்
கூறுபடுஞ் சிவஞானக் கொம்பினுளங் குழையாதோ. (௫௯)

கொங்கையான் மணிமார்பிற குறியிடுமவ் வீறுடைய
மங்கையாள் பெருமானே மண்சுமக்க நினைத்தானோ
கங்கையா ளலைக்கரத்தாற் கரைத்திலளோ புள்ளுருவாம்
பங்கயா சனனறியாப் பணிமுடியென் றறியாளோ. (௬0)

பிரமனுடன் றிருமாலும் பிறப்பகலப் பலகாலும்
பரவியிடு நறுமலரோ பதந்தரிடும் பசிலையோ
புரிதருசெஞ் சடையோநற புதுமதியோ வாயிரவாய்
வரியரவின் பலபடமோ மணசுமந்த சும்மாடு (௬௧)

கலையறியும் புகழ்வைகைக் கரைதிருவம் பலமாக
அலையெறியும் புனலோசை யநதரதுந் துபியாகத
தலைவனடங் கண்டாக * னரவமெனுந் தவமுனியுங
கொலைதவிரும் † புலியென்னுங குலமுனியு மானாரோ. (௬௨)

மீனேறுங கொடித்தென்னன் விழிக்கேற விரைதுரகந்
தானேறு வதுகணடு தருங்கலைபொற் செண்டேறத
தேனேறு மலர்க்கொன்றைத் திருமுடிமேன் மண்ணேற
யானேறுஞ் சிவபதமு மெனக்கேற வின்றுது. (௬௩)

---

* பதஞ்சலி. † வியாக்கிரபாதர்.

பொன்னுலகத துள்ளோரும் புரந்தரனுந் திருமாலும்
மன்னுமறைக் குரியோனும் வழியடிமைத் தொழில்செய்ய
அன்னைதனக் காளாகி யணிவைகை யடைத்தடியுனை
டென்னையருட் பணிகொள்ள*விசைந்தனையோ விறையோனே. ( )

கட்டுமரைத துணிச்சீரைக் கச்சையுமத் திருத்தோளிற்
கொட்டுமுடித் தலைமீது கவித்ததொரு கூடையுமாய்ப்
பிட்டுநெற் றவமுடையாள் பின்புவருந் திருக்கோலம்
இட்டமுறத தொழுமபடிநான் கணடிலனே யிறையோனே. (௬௫)

தாரூருஞ் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்கள்
நீரூரும் புகழ்வைகை நெடுங்கரைமே னினருரோ
சீரூருங் கனகமுடித தென்னவனே மதுரையெனும்
பேரூரி லிருப்பவரோ பிட்டமுதிட் டருள்வாளோ. (௬௬)

பொன்மௌலித தலைமீது புண்ணியர்மண சுமந்தேறுங
கொன்மலியுங கோலறையுங குளிர்வைகைப் பேராறுங
கன்மமெனும் பகைநீங்கக் கணணுதல்வெம் பரியேறுந்
தென்மதுரை மூதூரு மலலவோ சிவலோகம். (௬௭)

இன்னவகை யன்புடையா ரிரங்கினரா யிடைவைகைத
துன்னுதிரைப் பேராறுந் தொலையவடிந் ததுபின்னர்த்
தென்னவனுஞ் சிவன்செயலா மெனத்தெளிந்து வாதவூர்
மன்னவர்தம் பால்வந்து வணங்கியிது கூறுவான். (௬௮)

அந்தரர்தம் பதியினிழிந் தருள்புனைமாத் தியர்குலத்தில்
வந்தருளித தமியேற்கு மந்திரியாய் மகிழ்வெய்தி
எந்தைவயப் பரியேறல் காட்டியெனக் கொழியாத
பந்தமறத் திருவுள்ளம் பற்றினைநற் றவத்தோனே. (௬௯)

* அருட்பணிகொள்ள-அருளினாலே தொண்டுகொள்ள.

கருமாளத திருமேனி காட்டினனென் றுணராதே
திருமாலுங் காண்பரியான் றேவருடன் பரியேறி
வருமாயச் சூழலினு லழககாடை யண்டர்தொழும்
பெருமானுக் களித்தேனென் பிழைசெய்தேன் பெரியோனே. (எ0)

அப்பணிசெஞ் சடையானே யரும்பரிமே லாளாக்கும்
மெய்ப்பொருள்*ளென் றுணராமல் வெய்யவினைப் பொருள்வேண்டிச்
செப்பருமித் தறுகணமை செய்திதேன் சிறுமையுளேன்
எப்பிழையும் பொறுததருளா யானரகிற் புகுதாமல். (எக)

தூநாக மணிந்தபிரான் றுஙகமிகும் பரியேறிப்
பூநாறுஞ் சடைமேன்மண் சுமந்தபுகழ் போதாதோ
யானுனு நின்பணியே செய்தொழுக விவ்வுலகந்
தானுள வேண்டுமினி யென்றிரந்தான் றமிழ்மாறன். (எஉ)

வேறு.

என்றிறன் மன்ன னிவ்வா றிரததலும் வாத வூரர்
தென்றிசை புரக்கு நீதித் தென்னவன் றன்னை நோக்கிப்
பின்றிகழ் சடையான் மன்னும் பெருந்துறை நகரி லேக
இன்றெனை விடுப்ப தேமற் றிவ்வுல களிப்ப தென்றார். (எங)

தென்புலத தலைவன் றானுஞ் சிந்தையி னொந்து முன்னோன்
அன்பருக் கரசர் வாழ்வி லாசையில குளதோ வென்று
மென்பதத திறைஞ்சி யையா வேண்டிய செய்க வென்று
தன்புகழ்க் கூடன் மூதூர் புகுந்தனன் றனை சூழ. (எச)

சற்றவத தொழில்செய் யாத தானைமன் போன பின்னா
அற்றவர்க் கற்ற சோதி யருட்பெரு வாழ்வு வேணடிக
கொற்றவர்க் குற்ற கோலங் குறையென நீத்து மேலாம்
நற்றவக் கோலங் கொண்டார் நம்பனுக கன்பு மிக்கார். (எரு)

---

* மெய்ப்பொருள் - கலவிப்பொருள் என்றது ஞானத்தை அது குணியை உணர்ததி நின்றது

ஆத்தனை யால வாயி லண்ணலை யிறைஞ்சி யந்த
மைததிகழ் சோலை நீடு மதுரையம் பதியை நீங்கி
விததகர் தம்மை யாண்ட மேனிகண் டிறைஞ்ச வேண்டும்
பிததினர் கடிது சென்றார் பெருந்துறை பொருந்த வெண்ணி. ( )

மிடைகெட வைத்த பாத வித்தக ரூரை நோக்கி
நடையிடு மெல்லை தன்னி னன்மன விரைவுங் காற்றூங்
தடைபடு கன்றை நாடுங் கபிலையுந் ததும்பி நின்று
மடையிடை யுடைக்கு நீரு மாயினர் வாத வூரர். (௭௭)

கண்ணுழை யாத கானும் பதிகளுங் கடிது நீங்கி
எண்ணறு முனிவர் மேவு மெழிற்பெருந் துறையி லெய்திப்
புண்ணிய வினத்தர் *சூழ முன்புபோ லிருந்த போதில்
விண்ணவ ரதிபன்பொறறாள் வீழ்ந்திது தாழ்ந்து சொல்வார். (௭௮)

நீண்டுதற் கரிய மார்பிற் சேயிழை தனத்தி னாலும்
ஈண்டொரு மாற்றி னாலு மெய்திய தழும்ப போற்றி
வேண்டிய வடிவ மாகி வெம்பரி மேற்கொண் டெம்மை
ஆண்டருள் செய்ய வந்த வண்ணலே போற்றி போற்றி. (௭௯)

அண்டருக கரியாய் போறறி யடியவர்க் கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண சுமநதாய் போற்றி
தண்டனக கினிய மேனி காட்டியென் சென்னி மீது
முண்டகத் திருததாள் வைத்த முததனே போற்றி போற்றி. (௮௦)

போற்றியென் றின்ன வாறு புகன்றவா முடிமேற் செங்கை
ஏற்றியங் கினிய கூறி யெழுகென வெழுநத பின்னர்
நீற்றையும் புனைந்து ஞான நிறையருட் பாவை நல்கி
வீற்றிருந் தன்பர் கூட்டம் விளங்கினர் களங்க மில்லா. (௮௧)

---

*புண்ணியவினததர் - அன்பா குழாம்; அது, 'அன்பர் கூட்டம் விளங்கினர்' எனப் பின்னர்க் கூறுமாற்றானு மினிது விளங்கும்.

அந்தமு முதலு மில்லா ரடியவர் தம்மை நாடி
வந்துள கரும மெல்லா முடித்தன மகிழ்ச்சி கூர
நந்திகழ் வடிவங் காண வேண்டிநற் கயிலை யுள்ளார்
சிந்தனை செய்தார் வல்லே யாண்டிரோஞ் சேறல் வேண்டும் (அஉ)

வாழ்ந்திரு மின்பின் யாமு மேகுவ மென்ன வந்து
சூழ்ந்தரு ளுருவா மன்பர் தோததிரம் பலவுஞ் செய்து
தாழ்ந்தெதி ரிறைஞ்சி யையா தரிப்பரி தென்று மண்மேல்
வீழ்ந்தயர்ந் தழுதா ரெம்மை விடுதியோ வென்று நொந்தார் (அங)

பரிந்தழு மடியார் தம்மேற் பரமனு மன்பு பூண்டு
வருந்துவ தொழிமி னிந்த மணமலி குருந்த நீழற்
பொருந்திய தெய்வ பீடம் பொலிவொடு குயிற்றி மீதே
திருந்திய மறையுந் தேடு நம்பத மாகச செய்து. (அச)

தாங்கரு மரந்தை நீங்கி யாமெனுந் தன்மை கணடு
நீங்கரு மன்பி னுலே நித்தலு நயந்தி றைஞ்சி
ஈங்கருண மனதத ரெல்லா மமர்ந்திரு மொருநாளிந்தத
தீங்ககல் பொய்கை*யூடு செழுந்தழல் வந்து தோன்றும் (அரு)

எழுந்தழல் விளைந்த போதில் யாவருந் தடத்தி னூடு
விழுந்துபின் னெய்தி நம்பால் விடுகநுங் கவற்சி யென்று
தொழுந்தவ மியற்றுந் தொண்டர் சூழ்ந்துபின் செல்ல மெல்லச
செழுந்திருக் கயிலை நாடிச சென்றனர் தில்லை நாதர். (அசு)

நீங்கரு மன்ப ரெல்லா நில்லுமி னென்று கூற
ஆங்கவ ரிறைஞ்சி யெந்நா ளையநிற் காண்ப தென்று
தாங்கரு மயக்க மெய்தித் தாயகன் மகவு போலப்
பூங்கழல் வணங்கி நின்றார் போயினர் மாயை வல்லார். (அஎ)

---

* தீங்ககல் பொய்கை - தீமை நீங்குதற் கேதுவாகிய தடாகம்.

இங்கிவர் நின்ற பின்னு மின்னருள் வாத வூரர்
தங்கிளை வாழ வந்த தலைவர்பின் சென்ற போதிற்
பொங்கிள முலையாள் பாகர் புரிந்திவர் வரவு காணு*
அங்கொரு கொன்றை நீழ லிருந்தன ரரந்தை நீக்க. (௮௮)

தன்புடைக் கவடு கொண்டோர் தடங்கிரி நிரந்த மாலை
பொன்படைத தனைய கொன்றை பொலிவுற விருந்த போதின்
மென்பதத் திறைஞ்சிக் கண்ணீர் விழவிழத் தொழுது நிற்கும்
அன்பரைப் பரிவா லைய ரருகுவைத தருளிச செய்வார். (௮௯)

அவ்விய மில்லார் தங்கட் கருடா முன்னு மன்னுந்
திவ்விய தலமா மிந்தச சிறந்துள குருந்த நீழல்
எவ்வுல கெங்கு முள்ளே மாயினு மிங்கு ளோர்கள்
வெவ்வினை யகற்றி யாள வேணடியீண் டுறைவோ மென்றும். ()

பொங்கொளிச சுழுனை யூடு புலம்பிசைக் குறியே யான
மங்கலச் சங்க மல்லால் வாய்ந்தபல் லியங்கள் யாவும்
இங்கெமக் காகா வோசை யடங்கிட மாத லாலும்
நங்குலக் கவுரி காணு நடமில தாத லாலும். (௯௧)

ஒழுங்குட னின்ன வாறிங் குணர்ந்துநற் குருந்த நீழற்
செழுந்தவக் குழுவி னீயு நங்கழல் சேவை செய்தே
எழுங்கனன் மடுவிற் காணில் யாவரு மதனிற் சென்று
விழும்பொழு துடன்வீ ழாம லவ்வுழை விரைவி னீங்கி. (௯௨)

உத்தர கோச மங்கை யென்னுநம் மூரிற் சென்று
சித்தியங் கெவையு மெய்தித் தெய்விக லிங்க மேனி
வைத்துநம் பதிக டம்மி லிவையிவை வணங்கி லங்கே
இத்திகழ் வடிவே காண்டி காட்டுது மெனவி யம்பி. (௯௩)

---

* புரிந்திவர்வரவுகாணு - தம்மைவிரும்பிய திருவாதவூரடிகளது வரவைக்கண்டு; பெயரெச்சத்தகரம் தொக்கது; புரிந்து வருதல் என வினையெச்சமுமாம்.

இந்நகர் வணங்கி நீங்கி யெழுக்கழுக் குன்ற மென்னும்
அந்நெடும் பதியி றைஞ்சி யாண்டுநின் றீண்டிப் போந்து
பொன்னினம் பலத்தி லெய்திப் புத்தரை வாதில் வென்ற
பின்னரெம் பதமே*யான பெரும்பதம் பெறுதி யென்றார். ( )

மன்னுமன் புடையார் தெய்வ வாசகம் புகலு மாறும்
பன்னகம் புனைவோன் மேவும் பதிபல வணங்கு மாறும்
பொன்னினம் பலத்தி லெய்திப் புத்தரை வென்று மன்றன்
தன்னருங் கமல பாதஞ் சார்தலும் பகர்த லுற்றாம். (கூரு)

மண்சுமந்தசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௪௪.

---

# திருவம்பலச்சருக்கம்.

வரந்தர விருந்தார் தம்மை வாதவூ ரிறைவர் போற்றிப்
பெருந்துறை நகரி லன்றிப் பிஞ்ஞகா புலியூர் மன்றிற்
பொருந்துகை முத்தி யென்று புகன்றதிங் கெவனோ வென்னத்
திருந்திய தவத்தாய் கேட்டி யென்றவர் செப்ப லுற்றார். (க)

இத்தலத் திடையே வீட மெடுத்துள விடத்தி லன்றி
வைத்துள விடத்தே யந்த வேட்டுவன் வடிவம் கொள்ளும்
வித்தக வுனக்கிங் கன்பாள் மெய்யுணர் வுரைத்தே மேன்மை
ஒத்திடுஞ் சிவாநு பூதி முத்தியம் பலத்தி லுண்டாம். (உ)

---

* பதம் - திருவடி; திருவடிப்பேறே முத்தியாதலே "இறுமாந் திருப்பன் கொலோ-வீசன், பல்கணத் தெண்ணப் பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங், கிறுமாந் திருப்பன் கொலோ" என்னுந் தேவாரத்தா லுணர்க.

இடம்படு முடம்பின் மூலத் தெழுந்தாற் சுழுனை நாடி
உடீன்கிள ரொளியே யாகி யொளியிலஞ் செழுத்து மொன்றாய்
நெடுங்குழ லோசை யாகி நிலவுமவ் வோசை போயங்
கடங்கிய விடமே யென்று மாடுமம் பலம தாகும். (ங)

எண்டரும் பூத மைந்து மெய்திய நாடி மூன்றும்
மண்டல மூன்று மாக மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனோ டைவராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாமே. (ச)

ஆதலா லிந்த வண்டத் தறிவரும் பொருளா மென்றுந்
தீதிலா மூல நாடித் திகழ்சிவ லிங்க மேனி
மீதிலா மந்த நாத வெளியின்மே லொளிமன் றதனுக்
காதலான் மடவாள் காணக் கருத்துற நிருத்தஞ் செய்வோம். (ரு)

அந்தணன் னடமே தென்னி லைந்தொழி னிகழ்த்த லாகும்
பந்தமதகற்று மிந்தப்படி வமுமதுவே யாகும் *
வந்துலகத்தில் யாருங் காண்பரேல் வழுவா முத்தி
தந்தரு ளளிக்குந் தெய்வத் தலமுமத் தலமே யாகும். (சு)

தாவரும் பணில நேமி தரிப்பவர் பிரம ரென்போ
யாவரும் புலிபாம் பென்னு மிருவரும் புரத்தி லுள்ளார்
மூவருந் தெய்வ மூவாயிரவரு முனிவர் தாமுந்
தேவருந் தொழுது போற்று மெல்லையத் தில்லை மூதூர். (எ)

---

* இந்தப்படிவமுமதுவேயாகும்- இவ்வாசாரிய மூர்த்தமும் அவ்வைந்தொழினிகழ்த்தும் மூர்த்தமேயாம்; என்றது நடேசமூர்த்தத்தை. எனவே ஐந்தொழிலியற்று மூர்த்தத்திற்கும் இவ்வாசாரிய மூர்த்தத்திற்கும் பேதமில்லை என்றபடி.

மற்றிவை தெளிவா யென்று பணித்தெதிர் வணங்கி நிற்பார்
நெற்றியி னீறு சாத்தி நிற்றியென் றகல நில்லார்
சற்றிடஞ் சென்றார் பின்னு மிங்கிவர் தன்மை கண்டு
கற்றையஞ் சடையார் நின்று கண்ணருள் செய்து போந்து. ()

கண்ணெதிர் நடக்கு மாறு கண்டுளங் களித்து நிற்கும்
புண்ணியர் காண முன்னர் மறைந்தனர் புலியூ ரையர்
துண்ணென விரக மெய்தித் தொழுதுகை தலைமேற் கொண்டு
நண்ணரு மன்பர் கூட்ட நணுகினர் வாத வூரர் (கூ)

அருந்தவ மகலா நெஞ்சத் தன்பருந் தாமு மந்தத்
திருந்திய குருந்தின் கீழோர் தெய்வபீ டிகையுஞ் செய்து
வரந்தருஞ் செய்ய பாத மலர்வகுத் திறைஞ்சி யாங்கே
இருந்தன ரிருந்த நாளி லெய்திய தியம்ப லுற்றாம். (௧0)

வெண்பிறை முடித்த வேணி விண்ணவ னன்பி லாத
பண்பின ரெனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்கு மென்றே
எண்பெறு நமசிவாய வாழ்கவென் றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் * புகல லுற்றார். (கக)

சொற்பதங் கடந்து நின்ற சோதிவந் தருளை நல்கும்
அற்புத மறியே னென்று மதிசயங் கண்டா மென்றும்
எற்பொலி சடையாய் நெஞ்சங் குழைத்தனை யென்னை யென்றுஞ்
சிற்பரன் றனது பாதஞ் சென்னியின் மன்னு மென்றும். (கஉ)

---

*ஞானவாசகம்-அருட்பா; வாசகம்-ஆகுபெயர். ஞானம், அருள் சத்தி என்பன ஒருபொருட் சொற்கள்; அது "அருளது சத்தியாகும்" "சத்திதன்வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்" என்னுந் திருவாக்குக்களாலறிக.

ஐயனே நின்னைக் காண வாசைப்பட் டேனு னென்றும்
உய்கிலேன் வாழே னென்று முனைக்கடைக கலமே யென்றுஞ்
செய்யுமா றறியே னக்தோ செத்திலே னென்றும் பொய்யர்
பொய்யனே நின்பொற் பாதம் புணருநா ளெந்நா ளென்றும். (௧௩)

ஆதரித் தழைக்கி லிஙகே யெதிர்ந்துவென் றருளா யென்றும்
போதமிக் குடைய பாட லிவையிவை புகன்ற பின்னர்
மாதிரத தெவரும் போற்ற வருந்திரு வார்ததை யெணணந்
தீதறச் சிறந்த வெண்பாத திகழெழு நான்கு மோதி. (௧௪)

இயல்புடன் மொழியும் பள்ளி யெழுச்சி யேசறவு நெஞ்சத்
தயர்வற வுரைசகு மின்னே ரனையபூங கழலக ளென்றும்
உயிருணி யெனுநற் செய்யுள் பிராரததனை யோஙகு நீதி
வியனெடுங கூடற் பாணடி விருததமெய்த தமிழுங கூறி (௧௫)

வேறு,

மருவுந் தொணடருடன் கூடி வைகிச சிலநாட் செல்ல முதற்
பரமன் சொல்லும் படியேபின் பயிலும் பொய்கைத தழல்கண்டு
கருதுங திருவஞ் செழுததோதிக் காணக் கிளருங கனன்மீது
விரவும் பேரன் புடையார்க ளெல்லாஞ் சென்று வீழ்ந்தார்கள்.

வீழ்ந்த போதிற் புலியூரர் விடைமே லேறிக் கவுரியுடன்,
சூழ்ந்தங கிமையோர் மலர்சிந்தித் தொழவிண ணிடையே தோன்
றுதலும், ஆழ்ந்த தடத்துட்கனன்மூழ்கு மனப ரடஙகைத துயர்நீங்கி,
வாழ்ந்து வணஙகிக் கணநாதர் வடிவாய்த திருமுன் வந்தார்கள். ()

தூரியத் தலையிற் பயில்வாருந் தொழுதங் கெழுவார் முகநாடி
ஒரு சற்றகலா தவர்நீரிக்*கொழியத் தனிநா மெய்தியதுங
கரையிற் றிரைபோய் விழவீசுங கழுநீர் வாசங் கமழ்வாவி
எரியிற் புகுவீ ரென்றதுவும் யாதோ வெனினிங் கிதுவாகும். (௧௮)

வேறு,

உத்தம னென்னுந் திருவாத வூரனை மன்னும் புலியூரிற்
புத்தரை வெல்லும் படிநாமிப் புவிமிசை வைத்தோம் யாமேகிற்
சித்த மயர்ந்தே தயாகூருஞ் செய்திய ஞமென் பதுதோரா
இத்தல மீதே சிலஞளிய கெம்முடன் வாரா திருமென்றேம். (கசு)

மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனையெய்திச
சிவபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே
பலமலர் கமழுந் தடமீதிற் பரவரு ஞானத் தழல்சேர்வித
திலயிதன நீடுஞ் சடம்வேவித திவ்வுட லீந்தோ மிந்நாளில். (உ0)

[illegible]என்று விளம்பிக் கணநாத ரெங்கணு மல்கப் புலியூரின், மன்று
[illegible]ய் பயில்வாரும் வானின் மறைந்தா ரவ்வெல்லேத, துன்றிய
[illegible] சிவநாமச சொற்றமிழ் வல்லார் வேறுகச, சென்றெரு
[illegible]மச செழுநீழற் றிகழ விருந்தார் சிவயோகம். (உக)

அ[illegible] ரழற்கே புகுமாறுமையர் விடைககே வருமாறும், முன்பு
தம[illegible]முரு † வெய்தி முன்னவ னற்று டொழு மாறும், பொன்
பொ[illegible]யன்பாளர் புகுவது மெல்லா மொருகாலத, தின்புற
[illegible]யோகத தியல்பொடு கணடா ரென்செய்தா. (உஉ)

[illegible]குவித்தா விழிநீரைச சிந்தின ரெந்தாய் வந்தாய்பின்
[illegible]தா யெனமாலுற் றெய்தினர் பொய்கைக் கரைமீதிற்,
கங்கை முடித்தார் விடையேறிக கணணுற நணணுந் தலமோவெல்
றகை ணிலத்தே போய்வீழ்வுற றழுதழு தந்தோ வெனநொந்தா ()

வேறு.

அன்னை நிகர்ப்பீ ரென்னை யொழிததே யனபாளர்
பொன்னடி பெற்றே பொய்கை யழற்கே புகலாமோ
மின்னுரு வததீா நும்மருள் கூடா வினையேனுக்
கின்ன லளிததீ ரெஙங ளெளிததீ ரெனநொநதார் (உச)

* ஒருசற் றகலா தமாநீரிங் என்றும் பாடம் † முன்புதமகக, முரு - கணநாதர்வடிவம்.

வேறு.

அந்நிலை தெளிந்து பொய்கை யகன்றுயர் குருந்த நீழற
பன்னரு மறைகள் காணுப் பதமலர் பற்றி வீழ்ந்து
மன்னிய நிலத்தி னுள்ளார் வல்வினைப் பிறவி மாள
இன்னருட் சதக மெய்தா னரும்பியென் றெடுத்துச சொன்னார். ( )

இத்திறங கூறி யாஙகே புலம்பிநின் றிரஙகு மெல்லை
நித்தனன் றுரைத்த நீர்மை நெஞ்சினு ணினைந்து பின்னா
அத்தலத திறைஞ்சி யெஙகோ னருட்பெரு விடைபெற்றேகி
உத்தர கோச மஙகை யூரினிற் சென்று புக்கார் (உசு)

சடையவர் கோயி லெய்தித தம்மைவந தடிமைகொணட
வடிவது காணு ராகி மயஙகிவெய் துயிர்த்து வீழ்ந்து
விடுதிகொ லென்னை யென்று நீததல்விண ணைப்ப மென்னுந்
தொடைகெழு பாட லோதக காட்டினர் தொல்லை மேனி. (உஎ)

கன்னலை யமுதை யஙகே கண்டுகொண டிறைஞசிச சின்னாள்
அந்நக ரிருந்து தஙகோ னருணமொழிப் படியே சென்று
தந்நிக ரில்லாத தெய்வத தலம்பல வணஙகி நீஙகிச
சென்னிநன் ஞட்டி லெயதித திருவிடை மருதூர் சோர்ந்தார் (உஅ)

அப்பதி தொழுத பின்ன ரன்புட னுரு ரெய்திச
செப்பரு மலர்ததாள் போற்றித திகழ்திருப் புலமப லோதி
எய்ப்பற விறைஞ்சி யணண லியம்பிய பதிக மெல்லாந்
தப்பற வணஙகி நீஙகித தடமதிற் புகலி சார்ந்தார் (உகூ)

குன்றென வயஙகு கோயிற் கோபுர வாயி னீஙகிச
சென்றுயா கயிலை யான செப்திகண்*டிறைஞசு மெலலை
மன்றிடை நடிதத பாத மலரடி பிடிததுக கொணடு
பின்றிகழ் சடையோன் முன்னர்ப் பிடிததபத தருளிசசெய்தார.

தொலைவினைப் பகைமை யுள்ளார் யாவருந் தொழுதா லிங்கு
வெல்வரப் பகையை யென்று விருப்புடன் சிலநாள் வைகி
மல்குமத் தலத்தை நீங்கி வண்கழுக் குன்றி லன்பாற்
செல்வதற் கிசைந்து தில்லைத் திசைகுறித் திறைஞ்சி யேகி. ()

வேறு.

உத்தர நெடுந்திசையி லேகியொளி குன்று
முத்தநதி சூழுமுது குன்றினை வணங்கி
அத்தல மகன்றுய ரருட்டுறையி தென்றே
மெய்த்தவர்க ளெண்ணியுறை வெண்ணெயி லடைந்தார். (௫௨)

அந்நகர் வணங்கியபி னன்புட னகன்றே
நன்னாவதி சென்றுநடு நாடு †முயர் காடுங்
கொன்னிப மடங்கலுறை குன்றமு மிகந்தே
மன்னுமரு ணாசல மருங்கணைய வந்தார். (௫௩)

மாடமொடு கோபுரமு மன்னுமணி முத்தஞ்
சூடுமதி லும்பெரிய தோரண முகப்பும்
நீடுகமு காடவி நெருங்கியுள தண்கா
ஊடுயர்தல் கண்டுவகை கொண்டுதொழு துய்ந்தார். (௫௪)

அன்றிருவர் தேடவழ லானதொரு வெற்பாய்
நின்றவடி வோமன நிறைந்தபெரு வாழ்வோ
என்றுமலை யண்ணலை யிறைஞ்சியருள் கொண்டே
சென்றருணை யாகிய செழும்பதி புகுந்தார். (௫௫)

---

* கயிலையான செய்தி கண்டு - ஊழிக்காலத்துங் கைலாசம் போலச் சீர்காழி அழியாதிருக்குஞ் செயலைச் சிந்தித்து; காணல் - கருதல். † நடுநாடு இங்கே திருவெண்ணெய் நல்லூருக்குந் திருவண்ணாமலைக்கு மிடைப்பட்ட நாட்டைக் குறித்து நின்றது.

வேறு

சோலையு மதிலும் பல்பூந தோரண மறுகுந் தெயவ
சாலைகள் பலவு நீஙகிச சந்நிதி மறுகிற் சென று
மாலையு மதியும பாமபு மததமு முடியில வைததோன்
ஆலய மிறைஞசிக கணடாா தமமையன் ருணட மேனி (௩௬)

மாலுடன் பிரமன் றேவா வந்துனக கபய மென்றென
றோலிடும் பொழுதி லால முணடிருள் கணட போறறி
மேலிடும் பவநோய் தீர விண்ணவா மணணோ பசசைப
பாலுடன் கலநதுட் கொள்ளும் பனிமலை மருந்தே போறறி (௩௭)

நெடியவன கேழலாகி நீணில மகழ்நதுங் காணு
அடிகளென் றலைமேல வைதத வருட்பெருங கடலே போறறி
படியிடம் புரககு முணணு முலையெனும பசசைமேனிக
கொடியிடங கொணட செம்பொற குன்றமே போறறி போற்றி
வெனறிடுங கனனி மேதிச சென்னிவிக கிரமன றனனை
கொன்றதன் பாவந தீரக குறிததிட வருளவாய போறறி
அன் றவந தென்னையாளு மணியணு மலையாய போற்றி
என றுதம பரிவா லேததி யிறைஞசியங குறையு நாளில் (௩௯)

மாதா† கொண மாத ரெல்லா மாாகழித திஙக டன்னில்
ஆதிரை நாணமுன் னீரைந தாகிய தினஙக டம்மின
மேதகுமனை டோறு மழைததிருள விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனறறட மாடல் செய்வாா. (௪௦)

அன்னவ ரியல்பு கண்டா ராஙகவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியா பாடி யாடுங கவின்கொளம் மனைகண டன்னோர்
பன்னிய பாட லாக வம்மனை பாடல் செய்தாா (௪௧)

* விககிரமன் = யுததவீரன்.

† மாதா - அழகு

விரவுமன் புடையா ரந்த மேதகு தலத்தை நீங்கிப்
பரிவுடன் கச்சி யேகாம் பரந்தனிற் பரனை யேத்தித்
தெரிவருங் காமக் கோட்டிச் சீறடி வணங்கித் தேவர்
வானினைந் திறைஞ்சுந் தெய்வ வண்கழுக் குன்றிற் சென்றார். ()

கோட்டிதழ் கமழுங் கொன்றைச் சென்னியான் குலவு மன்பர்
சூட்டிய மலர்த்தாள் போற்றித் துணைவனின் செய்ய மேனி
காட்டினை கலங்கா வண்ண மிக்கழுக் குன்றி லென்று
பாட்டினைப் பொழிந்து சின்னாட் பயின்றபின் பணிந்து போந்தார்

அத்தல முதலா நாப்ப ணடைந்துள பதியுங் காணும்
மைத்தடங் கிரியுங் காவும் வாவியு நதியு நீங்கிப்
பைத்தவெம் பாம்பொ டாடி நரியெலாம் பரிக ளாக்குஞ்
சித்தர்தென் றில்லை மூன்று காவத மென்னச் சென்றார். (சச)

வேறு.

தாழூரன் மடப்பாவையர் தோளாசையி லாளாம்
மாழூகரு மிட்டுண்டுயிர் வாழாதவர் தாமுந்
தீழூள்கர் வரன்மேலருள் செய்யாதவர் பலரும்
போழூர்வழி போகாதவர் புலியூர்வழி போனார். (சரு)

செல்லுஞ்சுர மிருபாலொளி திகழ்கொன்றைகண் மலரா
எல்லொன்றிய விமையோருல கெனநின்றன வெங்கும்
புல்லுஞ்சிவ ஞானத்தமிழ் * போல்வணடிசை பாடச
சொல்லும்பொருள் வல்லார்தம கைபோன்றன தோன்றி. (சசு)

தெள்ளுஞ்சிவ ஞானஞ்சிறி தில்லார்தவ வேடங்
கொள்ளுஞ்செய லெனவொண்மலர் குலவுங்கவி ரெல்லாம்
பள்ளம்படர் புனல்போற்புலன் வழியேபயில் சிறியோர்
உள்ளந்தமை யொக்குந்திகழ் மைக்கொண்டொளிர் காயா. (சஎ)

பூயுங்குல மந்தித்திரள் பயிலுந்தொறு மசையா
ஈன்குழு வெழுதேனி னிருல்சேர் மலர்நாகம்,
ஆயந்திகழ் தாராகண மகல்வான்மிளிர் மதியம்
எயும்படி கிளர்பொங்கரி னிடைநின்றன வெங்கும். (௪௮)

பக்கங்கிளர் கமுகின்றிரள் பலசாமரை வீசக்
கொக்கின்றளிர் கோதும்பல குயில்காகள மூதத
தொக்கன் பொடி விண்ணுதிபர் சொரியும்பல பொற்பூ
ஒக்கும்படி மலர்சிந்தின வொண்சண்பகச சோலை. (௪௯)

நீங்காவள மிவ்வாறுள நீள்சூத நரந்தந்
தேங்காரளி மூரல்பாதிரி தெங்கின்றிரள் வகுளங்
கோங்காசினி கொந்தார்செழு மந்தார நெருங்கும்
பூங்காவை யகன்றூபுலி யூரந்நகர் கண்டார். (௫௦)

சேணொன்றிய மதிலும்பணி திகழ்கோபுர நிரையுஞ்
சோணந்தரு கும்பங்கிளர் துணைமாளிகை பலவுங்
காணுந்தொறு மெழில்செய்வது கண்டஞ்சலி கொண்டே
பூணுந்திரு வருளன்பர் புகழ்ந்தாருண மகிழ்ந்தா. (௫௧)

வேதந்தரு மொலியுந்தொழும் விண்ணோர்தம தொலியுங்
கீதந்தரு மொலியுங்கிளர் முழவங்களி னொலியும்
போதந்தரு சிவஞானிகள் புகலாகம வொலியும்
ஓதுந்தமி ழொலியுங்கட லொலிசெய்தன புலியூர்.* (௫௨)

நிறைவொன்றிய மணிமாளிகை நெடுவீதிக ளகலா
வரையொன்றிய வுயர்கோபுர மணிவாயில் புகுந்தே
உரையொன்றிய சிவஞான முரைக்குஞ் சிவ நன்னூற்
கரைகண்டவர் மணிமன்றெதிர் கண்டாரருள் கொண்டார். (௫௩)

---

* சிவநாமத்தமிழ் என்றும் பாடம்.

பொன்னார்பொது நின்றாடிய புனிதன்றனை முடிமேல்
அந்நாளடி வைக்கும்பரி னாகும்படி கண்டார்
மன்னாவுயி ரன்னாய்மணி மன்றா சரணென்றே
சொன்னார்பல காலன்பொடு தொழுதார்மிசை விழுதார். (௫௪)

விண்டேயிரு கண்ணீர்விழ வீழ்ந்தின்னடி முடிமேற்
கொண்டேபி னெழுந்தன்பொடு குறையாவரு ணிறையா
வண்டேர்குழ லுமைபாகனை வண்டில்லையு ளின்னே
கண்டேனென நற்பாடல் கருத்தார வுரைத்தார். (௫௫)

குன்றாவருண மூலந்திகழ் குறியாகிய சுடரும்
மன்றாகிய வெளியூடு மகிழ்ந்தாடிய வொளியும்
ஒன்றாகிய வநுபூதியி லுற்றார்செய லற்றார்
நின்றாரசை வில்லாவொரு நிலையோவிய மானார். (௫௬)

மைகால்குழ லுமைபங்கினன் வழிபாடு மறந்தே
கைகாலசை விலவாயின கண்ணுஞ்சிறி திமையா
செய்காரிய மென்னேயிது தெருளாமரு ளென்னா
மெய்காவலர் மணிமன்றை விடப் †போமினி யென்றார். (௫௭)

வேறு.

பூண்டருள் கொண்ட காவல் புரிபவ ருரைத்தல் கேளார்
தாண்டவ நிகழு ஞானத் தன்மையின் றன்மை நாடிக்
காண்டகு துரியா தீதக் கழிபரத் தொளியின் மூழ்கி
நீண்டதோர் தம்பமாகி நின்றனர் நெடிது போது. (௫௮)

---

* புலியூரில் விண்ணோர் ஒலிமுதலியன கடலொலி செய்தன என்க; புலியூரை எழுவாயாக்கில் செய்தன என்னும் பன்மைமுற்று இயையாமை உணர்க, † விட - விட்டு.

போமெனப் போகா ரொன்றும் புகல்கிலர் பித்தங் கொண்டார்
ஆமெனக் காவ லாள ரஞ்சிகின் றிரங்கு மெல்லை
சாமுடற் குயிர்வந் தெய்தூந் தன்மைபோற் குவிந்த கஞ்சத்
தேமலர்க் கரமேற் கொண்டு சிவசிவ போற்றி யென்றார். (ருக)

முன்னவன் செம்பொன் மன்றை மும்முறை வலங்கொண் டங்குத்
தன்னிக ரில்லா மூலத் தலைவனை வணங்கிப் பின்னர்
அன்னையம் பிலகதன் பாத மன்புட னிறைஞ்சி யந்தப்
பொன்னவிர் கோயின் மேல்பாற் புலீசசுரஞ் சென்று சேர்ந்து. ()

வரந்தர விருந்த நாதன் *மலரடி வணங்கி நாகேச
சரந்தனி லிருந்தவண்ண றன்பத மிறைஞ்சி நீங்கித்
திருந்திய மறையோர் வாழுந் தில்லையம் பலஞ்சூழ் வீதி
பொருந்துழி யமிர்த மான வாசகம் புகல லுற்றார். (சுக

ஆடுமிக் குலாநற் றில்லை யாண்டவன் றனைகொண டென்னும
பாடலைப் புகன்றுகோயி லிருவகைப் பதிகங் கூறி
நாடுமச் சிவபுராண மொழிந்தநல் லகவன் மூன்று
நீடுமெய்த தமிழு மன்பா லோதினா நீதி மிககார (சுஉ)

கைவளை சிலம்பச செம்பொற் கிங்கிணி கறஙகச சூழ்ந்து
மைவளர் குழன்மேல் வண்டு மருண்டிசை திரண்டு பாட
மெய்வியர் வரும்ப வெம்போர் விழிக்கயல் புரட்டி ஞாஙகா
இவ்வகை நின்று சுணண மிடித்தனர் மடந்தை நல்லார் (சுங)

அத்திரு வனையார் பாடல் கேட்டவ ரிசைத்த தாக
மெய்த்தமி ழதனு னன்கு மிகுதிருச் சுணண மோதி
மைத்திகழ் காவி னூடு வருதலு மாங்கே பொய்தல்
தத்தமின் முயலுங் காதற் சிறுமியர் தம்மைக் கண்டார். (சுச)

---

* வரந்தர வமர்ந்த நாதன் என்றும் பாடம்.

கண்டபின் வறிது கூறுங் கட்டுரை சிறிது மற்றும்
அண்டனை யுரைமி னீரென் றவரவ ருரைத்த தாக
எண்டரு திருத்தெள் ளேணந் திருவுந்தி யெழிற்றோ ணோக்கம்
பண்டிகழ் திருப்பூ வல்லிப் பாடல்பொன் னூசல் சொன்னார்.

ஆங்கொரு சிறுமி தன்னோ ரன்னையை நோக்கிக் கூறுந்
தாங்கிசை மொழியே யாகத் தருமவை யீரைந் தோதி
ஞாங்கரின் முரலுந் தும்பி தன்னையு நயந்து நாதன்
பூங்கழல் வழுத்து கென்று புனிதர்கோத் தும்பி சொன்னார். (சுசு)

பொங்கரி னிடையே வாழும் பொற்பிளங் குயிலே கூவி
இங்கழை யெம்பி ரானை யென்பதுங் கிளியை நோக்கித்
திங்களஞ் சடையான் பாதஞ் செப்பெனத் தசாங்க மென்னுந்
தங்கிசைத் தமிழுஞ் சொன்னார் தந்நிக ரொருவ ரில்லார். (சுஎ)

மண்ணிடத் தெம்மை யாண்ட வடிவினை *யன்றி மற்றோர்
அண்ணலைக் கடவு ளென்பார்க் கஞ்சுதும் வினையே மென்றும்
பண்ணுறச் சிறந்த பாடல் பகர்ந்துநற் பன்ன சாலை
ஒண்ணகர்ப் புறம்பு செய்தாங் கிருந்தன ருண்மை மிக்கார் (சுஅ)

பரம்பரப் பொருளா மிந்தப் பைந்தமி ழோதி வையம்
பெரும்பிறப் பகல வந்து பிறந்தவர் செய்தி யெல்லாம்
இருந்தநற் றொகுதி †தோறு மியம்பிநன் மகிழ்ச்சி யெய்தி
அரும்புகழ்த் தில்லை யுள்ளா ரியாவரு மதிச யித்தார். (சுகூ)

---

* வடிவு-மூர்த்தம்; அது மூர்த்தியை உணர்த்திநின்றது.

† தொகுதி - சபை.

தத்துவ முடிவி லாடுந் தாண்டவந் தம்முட் கண்டு
சித்தலுஞ் சென்று மன்றி னிமலனை யிறைஞ்சி யன்பால்
இத்திற மையர் தில்லை யெல்லையி லிருந்தாரிப்பால்
புத்தரை வாதில் வென்ற புகழினை யுரைத்தல் செய்வாம். (௭0)

திருவம்பலச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௪௧௪

# புத்தரைவாதில் வென்றசருக்கம்.

தாழுநீடு வேணியண்ண ருள்விடாவொர் மாதவன்
ஆழிஞால வண்மையுண்மை யாயுநேய நெஞ்சினன்
சோழநாடு கண்டுதில்லை தொழுதுபின்பு பழுதிலா
ஈழநாடு தன்னைநாட வெண்ணியங்கு நண்ணினன். (௧)

கண்ணுமாதி மாதவ னலங்கொளீழ நாடனும்
அண்ணரு னிருந்தலூ ரடைந்துசேரிடந்தொறுங்
எண்ணிலாத காலம்வாழி தில்லைமன்ற மென்றுகூற
உண்ணிலாவு மன்பினு லுரைக்குமா தொடங்கினன். (௨)

சென்றுசேரிடந்தொறுஞ் சிறந்தசெம்பொ னம்பலம்
என்றுகூறி வைகுநாளி லீழநாடன் முன்புபோய்
நன்றிலாத மூகர்தா நயந்திறைஞ்சி மன்னகேள்
ஒன்றியா முரைத்ததுமென் றுவந்திவ்வாறு கூறினர். (௩)

ஒக்கமில்தி ருத்தனு மொருத்தனிந் நகர்க்குளான்
நற்கலன்க ளக்குமாலை நாளுமுண்ப தையமே
நிற்கினும்மி ருக்கினு நிலாவுசெம்பொன் மன்றெனுஞ்
சொற்கிளந்து ரைக்கு*மென்று சொல்லிமுன் வணங்கினர். (௪)

* கிளந்துரைத்தல் - வெளியாகச் சொல்லுதல்.

## திருவாதவூரடிகள் புராணம்.

இன்றிங் கலைக்கொணாவீரென் றிசைத்தா னிருபனுங்கவ
ருஞ், சென்றன் புடையாய் வருகவுனை யழைத்தான் றிறன்மன்
னவனென்ன, நன்றென் பதுவுந் தீதுமின்றி நாளும்பலிபெற
றுணபதொழிந், [illegible]ான்றுங கருதா ரொடுங்கரும முளதோ வேந்
தற் கெனவுரை[illegible]ன் (ரு)

ஊரிற் பலிகொண டுண்கினுமற் றொன்றுங கரும மில்லெனி
னும், பாரிற் பயில்வா ருயிர்புரத்தல் பரமா கிருபர்க் காதலினால,
வேரிக் கமழ்தா ரெம்மரசன் றன்பால் வருதல் வேண்டுமெனச,
சீரிற் றிகழ்வேற் றூதருடன் சென்றா னொன்றுந் தீமையிலான்.

மூந்தும் பிடக மூன்றுணர்ந்து செயிரானான் கொழிந்து முது
சீலம், ஐந்தும் பூண்டு பார்மீதே *யாறைந் தடக்கு மியல்புடை
யோன், கந்தங கெடுதன் முத்தியெனக காட்டுங குரவனுடனிருப
பச, சந்தஞ் சிறந்த புயனிருப னிருந்தான் றனைபுடைசூழ (எ)

உடுக்குந் தனிவெண கோவணமு மொளிர்பொக் கணமுமாத
திரையும், எடுக்குஞ் சதங்கை நெடும்பிரம்பு மிலகுந் திலகத திரு
முகமும், அடுக்குஞ் சிறுபுன் முறுவலுநின் றசையுஞ் சடையுங
கண்டரசன், திடுக்கங கொளவந் தருகாக விருந்தான் றிருவம் பல
மென்று. (அ)

இருக்குந் தலைவன் றனைநோக்கி யிப்போ திருவம் பலமென்
றிங், குரைக்குந் தகைமை யெவன்கொலென வுலகாள் பவனுக
கவனுரைப்பான், பெருக்கும் புகழாற் றிகழ்வளவன் பிரியா விருகட
பேயருளால், புரக்குந் திருநாட் டறந்தழைக்கும் புலியூரென்ப
தொன் றுளதால். (கூ)

---

* பாரமிதை என்றும் பாடம்.

அந்தப் பதிமுன் றில்லைவன மஃதே புவன மனைத்தினுக்கும் மீந்தக் கிளருந் தெய்வதல மதனுள் மூலத் தானமதாம், இந்தப் புவிக்கு நாபபென்ன விலங்கும் பொதுவா மிடமதனில், சந்தத் தனத்தா ளுமைகாணத் தலைவன் றிருத்தாண டவம்புரியும். (க0)

மன்னுந் திறலான் மனுமைந்தன் வடிவிற்றொழுநோய் மாற்றி நெடும், பொன்னங் கிரிபோ லுருநல்கும் புனிதத் தடமுண டதின் மூழ்கி, முன்னம் புலிமேற் றவமொன்று முயலாதவரு மைந்தொழில், என்னுந் திருததாண் டவம்புரிதல் கணடா லுலகி லினிப் பிறவார். (கக)

நண்ணும் பிறவி யொழித்துயிர்க்கு நலஞ்சேர் முத்திகொடுப்ப தற்கிங், கெண்ணுஞ் சமயக் கடவுளரில் யானே வல்ல னெனப் பதமேல், வண்ணந் திகழ்பொற் கழலணிந்து மதுகைக் கொடியுங் கட்டியருட், பெணணும் பிகைகண காணநடஞ் செய்வா னந்தப் பெருந்தருக்கால். (க௨)

தேக்குஞ் சடில முடிக்கடவு ளிருதாள் கருதாத தீமனமும் வாக்குஞ் செயலுங் கொடியோரு மொருகாற பொன்னம் பலமென் னின், ஆக்கந் * தருமஞ் செழுத்திருபத் தோராயிரத்தோ டறுநூறு, நாக்கொண் டுரைக்கு மதற்குநிக ரென்றான் குன்ற நற்புகழான். ()

நீறுந் திருவஞ் செழுத்துமிலா நிருபா திருவம பலமென்று, கூறும் பொருளிங் கிதுவாகு மென்றான் குன்ற மெனுங் குணத் தான், தேறும் பிடக மூன்றுமுறை செய்யுந் தலைவ னல்லாது, வேறுங் கடவு ளொான்றுளதோ வென்றே புத்தன் வெகுண்டுரைப் பான். கச)

---

* ஆக்கம் - முத்திச் செல்வம்.

சென்றே தில்லை யெனும்பதியிற் சேர்வேன் வாது செய்தவன்றன், நின்றே நடிக்குங் கழலீடு நீங்கு கொடியு மீங்கறுப்பேன், ஒன்றே கடவுள் புத்தனென வுலகோ ரறிய வுரைத்தந்த, மன்றே போதி நிழற்பெருமான் பள்ளி யென்ன வழங்குவிப்பேன். (கரு)

இந்தக் கருமந் தினமூன்றில் யானே முடிப்ப னெனவெழுந்து
சந்தச சிவிகை மேல்கொண்டு தன்றாள் வணங்குங் கணஞ்சூழ
நந்தக் கிளருந் திரைக்கடலு நாடுங் காடு மகன்றேகிப்
புந்தித் துயரங் கொண்டொல்லை சென்றான் புத்தன் புலியூரில்.

வேறு.

மன்னனுந் தனது செல்வ மகட்குள மூகை நீங்கப்
பொன்னினம் பலத்தி லேக வென்பது பொருந்த வுன்னித்
தன்னெடுந் தானை சூழத் தனிப்பெருஞ் சிவிகையேறிச
சென்னிநன் னாடு சேர்ந்து தில்லையி னெல்லை புககான். (கஎ)

இங்கிவன் செல்லு முன்ன ரெய்திய புத்த னங்கிச
செங்கரன் றில்லை யெல்லைச் சிவிகையி னிழிந்து சென்று
பொங்குதண் புனல்சேர் சென்னிப் புலீச்சுர வரன்பொற் கோயில்
தங்குசெங் கனக சாலந் தயங்குமண் டபத்தி லானான். (கஅ)

ஆங்கவ னிருப்பச் சென்ற வரசனு மிறைஞ்சி யேத்தி
ஓங்கிய மகிழ்ச்சி யெய்தி யமர்ந்துழி யுரக ராசி
தாங்கிய சடிலன் கோயி றன்னிலுட் கருமஞ் செய்வோர்
ஈங்கிவர் வரவுகண்டே யாவரு மொருங்கு சேர்ந்தார். (கக)

வேறு.

தத்தமன மொரந்துகன்*றுனென வெகுணடே
சித்தமயர் வெய்தும்வகை சின்மொழிகள் கூறு
அத்தனுறை தில்லைதனை யொல்லையி லகன்றே
புத்தகழ் தேகிது பொமோறுமென வுரைத்தார். (உ௦)

* தில்லைநக ரெல்லையை யகன்றே என்றும் பாடம்;

தார்வளவன் முன்னருயர் தர்க்கவுரை கொண்டே
நீர்பரவு சைவநிலை யன்றென மறுத்துச்
சீர்மருவு புத்தனுயர் தெய்வமென விப்போ
தேர்பெற நிறுத்தியல தேகுவதி லென்றான். (உக)

புத்தனவ னிவ்வகை புகன்றபி னெவர்க்கும்
இத்திற முரைக்குவ மெனக்கடி தகன்றே
மெய்த்தவர்கள் வேதமுத லோர்பரி கரத்தோர்
தத்தமனை தோறுமிது சாற்றினர்க ளன்னோர். (உஉ)

புணனுழையும் வேணிகர் புகன்றமொழி கேளா
அண்ணலுறை கோயிலிடை யாவரு மடைந்தே
வண்ணமணி மண்டபம தெய்தி வரு புத்தன்
எண்ணமது கேட்குவ மெனாக்கடிது சென்றார் (உங)

தெய்வநா ரானவர்கள் * செல்லவெதிர் வாரா
மெய்யுணர்வில் புத்தனை வெகுண்டுபல சொல்லா
உய்வதறி யாதவொரு நீபயமு றாதே
இவ்வகை யிருந்தமதி யாமையெது வென்றார் (உச)

அங்கமறை யாகம புராணமவை யாலே
நுங்கடவு ளோகடவு ளென்றுநுவல் வீரேல்
எங்கடவு ளோகடவு ளென்றுநவில் வேன்யான்
இங்கெனெதிர் கூறுமென வேயவ னிசைத்தான். (உரு)

போற்றுமறை யந்தணர்கள் புத்தனை வெகுண்டே
தோற்றனை யெனக்கலைஞர் சொல்லவுனை வெல்வோம்
மாற்றமினி யுன்னுட னுரைக்குமது மற்றோர்
சேற்றினெதிர் கல்லெறிதல் செய்வதல துண்டோ. (உசு)

---

* தெய்வமறை யந்தணர்கள் என்று பாடமோதுவாருமுளர்.

நன்றிதரு வாருமொரு ஞானிகுரை செய்தால்
நின்றதன் வெகுட்சியை நிறுத்தல்தட னமால்
இன்றிழியு நின்னுட னிகழ்ச்சியெனி னுஞ்சீர்
ஒன்றுமிலை யானவனை யோருரையில் வெல்வோம். (உஎ)

மிக்கதிறன் மன்னவரு மெய்யுணர்வி னோருந்
தொக்கசபை முன்னர்நம தர்க்கவுரை சொன்னால்
தக்கதென லாட தகாததிது வென்றால்
எக்கலக மும்மிலை யிதேகரு மமாமால். (உஅ)

உத்தர முரைக்கவழி யாதுவலி யூரர்
புத்தனை முனிந்தனர் புடைத்தனர்க ளென்றே
இத்தல முறைத்துவிடு மென்றவளை வன்பான்
மெய்த்தவ ரழைத்தெழுது மோலையை விடுத்தார். (உகூ)

அந்தணர் பெருந்தவ ருங்கலை யுணர்ந்தோர்
வந்தணுகு நாளைமணி மன்றுதொழ வென்றே
புந்திமகி ழோலைபல போக்கியபின் வெய்யோன்
முந்துற வொளித்தனன் முளைத்தன னிராவோன். (௩0)

வேறு.

துங்கவா னென்னு மாதின் சுடர்நுதற் றிலக மென்னக்
கங்குலா மடந்தை பாரக்கும கவின்கொள் கண்ணாடி யென்னச்
சங்கவார் குழையார்க் கிட்ட தரளவெண் கவிகை யென்னத்
திங்கண்மாக் கடவு டோன்றச் சிறந்தது ஞால மெல்லாம். (௩க)

இன்றொரு தினமுந் தோரா வீங்கிரு நாளை யாங்கள்
உன்றன துயர்ச்சி யின்மை காட்டுவ முலகிற் கென்று
நன்றிகொண் மனையிற் சென்றே யாருநல் லுணவு மாந்தி
அன்றிருண் மேன்மை யாளரருந்துயில் * பயிலுங் காலை. (உ௩)

* அருந்துயில் - முழுதும் உறங்காமை மேலது.

அழகுற மன்றி லாடு மையர்கைப் பிரம்பு தாங்கித
தழைசடை முடியு மேனி சாத்திய நீறு மாகி
விழைதரு வடிவங்கொண்டு வெளிப்படக் கனவில்வெய்யோன்
எழுவதன் முன்ன ரெய்தி யாவர்க்கு மிதுபு கன்றார். (௩௩)

வருந்துவ தொழிமி னம்மூ ரெல்லையின் வைகி யன்பால்
இருந்தனன் வாத வூர னிவ்வுரை கேட்ட போதே
பொருந்திய தர்க்கநூலாற் புத்தரை வெல்வா னின்னே
அருந்தவ முடைய நீர்போயழைத்திடு மவனை யென்றா. (௩௪

கண்டனர் கனவு தன்னில் விழித்தனர் கனக மன்றில்
ஒண்டொடி பாக னன்பா லுரைத்தது கருத்தி லாய்ந்து
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவிகதனா முடியிற் கோயில்
மண்டப மிசையே யெல்லா மாந்தரும் வந்து தொக்கார். (௩௫)

புல்லறி வுடைய புத்தன் புகன்றதற் கிரங்கிப் பின்னர்
எல்லையில் கருணை யான்வந் திருங்கன வதனி லெய்திச
சொல்லிய மொழியி னாலே ( ) திகொண் முகத்த ராகி
வல்லிருட் குவிந்து வெய்யோன் வரவிரி கமல மொத்தார். (௩௬)

தெய்வீக மானமன்றிற் றிருநடம் புரியு நாதன்
தைவரு நீறுஞ்*செய்ய சடையுநற் பிரம்புந் தாங்கி
மைவிரி கங்குற் காலை வந்தான் மகிழ்ச்சி யெய்த
இவ்வகை மொழிந்தா னென்றெண் றேவருங் கனவு சொன்னார். ()

அத்தனை மன்றளாடு மையனை வியந்து கூறித
தத்தமி லன்பு கூர்ந்து தரித்துள வருத்த நீங்கி
மெய்த்தவர் வாத வூரர் மேவிடத் தனுகு வோமென்
றுத்தம பன்ன சாலை யொல்லையிற் குறுகி னார்கள். (௩௮)

---

* தைவருநீறு - உத்தூளனஞ் செய்கின்ற விபூதி; தைவருதல் தடவுதல்; ஒரு சொல்.

கூடினர் பன்ன சாலை கூடருட் குன்றை யன்பால்
நாடினர் வந்து கண்டார் நளினவா சனத்தின் மீது
பீடின ரிருந்த யோகம் பெயர்ந்தனர் வியந்து மன்றில்
ஆடின ருரைத்த வெல்லா மாங்கவர்க் கியம்பி னார்கள். (௩௯)

வேறு.

அந்தமொழி யன்பினர் செவிப்புல னிலங்குறலு மன்றிறை பணிதத துணரா, வந்தவரு டன்கடிது சென்றுதிரு மன்றனை வணங்கியருள் பெற்று மயலாஞ், சிந்தைய ரிருந்தமணி மணடபம தெய்தியவர் தீயமுக ராடி ல் ‿ரே, நந்துமென வேயெழினி கொண்டுமறை வித்துதி ரிருந்தனர் நலநகொளனைமேல். (௪௦)

மன்னுமறை யந்தணர் பு⁻ராணிக ரருங்கலைகள் வல்லவர்நல லோர்க ளுடனே, சென்னிவள வன்கடிது வந்துதிரு மன்ற னெதிர் சென்றுதொழு தங்க ணகலா. மின்னுமணி மண்டபம தெய்தியரு ளன்பரை வியந்தடி வணங்கி யருகா, நன்னரனை யின்புற மிருந்தனன் விரிந்தகலை நரணிறைவு கொண்ட மதிபோல்.

ஈழவள நாடனு மெழுந்தடி பணிந்துதிறை யிட்டகுறை நல்கி யிறைவா, வாழிமிகி வாழியென நின்றபொழு தங்கவனை மன்னர் பெரு மானு மகிழா, வேழுழிவை நன்றுவிலை யில்லையி மணிக்கென வியந்தரு கிருத்தி யெவருஞ், சூழுமவை தங்குதலு மஙகய லிருந்தன ர்கள் சூழ்ந்துகரி சொல்லு மயலோர் (௪௨)

தில்லைநக ரந்தணர் தபோதனர் சிறந்திளி திருந்துழி விரி ந்த சிவநூல், வல்லவ ரிழிந்தகுண புத்தனுடன் வாதுசெயு மன்னு சபை காண வருவோர், தொல்லைமறை தந்தவரு மூகுந்தன்முனி வோரொழுவர் சூழுமிரு நான்கு திசைமேல், எல்லையி லிருப்பவ ருரு த்திரர்கள் விஞ்சைய ரிராப்பக லிலங்கு கதிரோர். (௪௩)

* இருபக்ஷத்தாரையுஞ் சாராத பொதுவினர் என்பார் அய லோர் என்றார்.

வேறு.

தன்பெருந் தானை சூழ விருந்ததண் பொன்னி நாடன்
றென்பெருந் துறைசூழ் நாடன் றிருவடி வணங்கி நின்று
நின்பரஞ் சைவ ஞான நிலையினி னிறுத்தல் பின்னர்
என்பரம் புத்தர் தமமை யீஙகுயிர் செகுப்ப தென்றான். (சச)

வளவனிவ் வகையிற் கூற வந்தபொய்ப் புத்த ரெல்லாம்
உளமயர் வெய்த வாத வூராரு*மகிழ்ச்சி யெய்த
களவுரை பகர்வோய் வந்த காரண முரைநீ யென்னக்
கிளர்செவி நுழைவே லென்னக் கேட்டவ னிதனைச சொல்வான். ()

மன்னுமெங் கடவு ளல்லான் மற்றிலை கடவு ளென்றே
இந்நெடும் பதியி லெய்தி யியம்பியிங் கெவருங் காணப்
பொன்னினம் பலத்தே யெங்கள் புதத்ரை வைத்தல் வேணடி
நென்னல்வந் திருந்தே னீங்கு வேறிலை நினைந்த தென்றான். ()

என்றலும் வாத வூரெம் மிறைவர்புன் முறுவ லெய்தி
முன்றவ மொன்று மில்லாய் முயலிப மாவ துண்டோ
நன்றது நிற்க வுன்ற னற்பெருங் கடவு டானுஞ்
சென்றவ னடியிற் சேருஞ் செய்தியுஞ் செப்பு கென்றார். (சஎ)

அணணலா ருரைத்த போதி லாங்கவன் வெகுட்சி யெய்திக
கணணிலா தவற்கு வெய்யோன் கதிரொளி காட்ட லாமோ
நணணலா வெமக ளுதை னற்புக ழுரைக்கி னன்று
எணணிலா யிரஙகள் வேண்டு மென்றுபி னிதுபு கன்றான் (சஅ)

அறந்திகழ் பிடக நன்னூ லோதியன் புடைய னாகிப்
பிறங்குபல் யோனி தோறும் பிறந் துயிர்க் குறுதி செய்து
மறந்தரு கோற லாதி நால்வகை யொழிந்து மாண்பு
சிறந்துள போதி நீழற் சேர்வனெம் மிறைவ னவான். (சகூ)

---

* வாதவூரரும் என்பதில் உம்மை தில்லைவாழந்தணர் மு
மேயோரையும் தழுவிநிற்றலின் இறந்ததுதழீஇய எச்சம்.

மேவிய கருவிற் சேரு முருவம்வே தனைகு றிப்புப்
பாவனை யுடன்விஞ் ஞானம் பஞ்சகந் தங்கள் கூடி
ஓவில்பல் லுணர்வுண டாகி யொழிவது பிறவித் துன்பம்
ஆவது பொன்றக் கேடா யழிவது முத்தி யென்றான். (ருo)

வாதவூ ரண்ண லாரும் வண்புனற் பொன்னி நாடன்
தீதிலா முகத்தி னூடு சிறந்தருட் பார்வை நல்கிப்
பேதையா யறிமால் கொண்டு பித்துரை பகரும் புத்தற்
கேதியா மின்று சொல்வ தென்றுபின் னிதுபு கன்றார். (ருக)

தருமமுண் டென் றுரை நன்னூல் சாற்றினன் றலைவ னென்பை
மருவிய வுணர்வுண் டாகி மறைந்திடு கணத்தி னென்னை
பொருளுட னுரைதான்*றேடிப் புகலுமுன் னுணர்வு போனல்
இருடரு நின்னூல் சொல்வ தெப்படி யியம்ப வேண்டும். (ருஉ)

ஆதலா லறநூ லென்ப துனக்கிலை யுயிர்கட் காகப்
பேதமாம் யோனி தோறும் பிறந்தன னிறைவ னென்றாய்
தீதுசே ரொருவர் மாலைத் தீர்க்கவந் தவர்க டாமும்
போதமால் கொள்ளி னம்மால் போவதங் குள்ள தாமோ. (ருங)

கொல்வது கருதா னெங்கள் கோவென வுரைத்தாய் முன்னம்
பல்வகை யோனி தோறும் பார்மிசைப் பிறந்த நாளில்
வெல்புலி நரியே யாகி வெம்பசி யுற்றான் மற்றுப்
புல்லொடு தழையோ தின்பா னின்பெரும் போதி நாதன். (ருச)

கரவெனு மூன்ற னூலிற் கந்தமைந் துடனே கூட
உருவமு மழியு மென்றா யுன்னிறைக் குருவ மெங்கே
விரவிய யோனி தோறு முயிர்க்கருள் செய்ய வேண்டி
மருவொரு வடிவங் கொண்டா னென்பதே மதியி லாதாய். (ருரு)

---

* தான் - அப்புத்தன்.

காரண வுயிரிற் கூடுங் காரிய வுருவின் றேலுஞ்
சீரணி போதி நீழற் சேரிறைக் குருவமில்லை
பூரண ஞான மில்லாய் பொன்றுகை முத்தி யென்னும்
பேருணர் வில்லா வுன்றன் பிடக நூல் யாவர் சொன்னார் (௫௬)

இருபதிற் றொருவராக வெண்ணுமுன் புத்த ரெல்லாம்
வருவது சிறந்த தாயர் வயிற்றினைப் பீறி யென்னை
பரிவொடு சுமந்து பெற்றா ருயிர்கெடப் பழுது செய்தே
* அருநரகத்தில் வீழு மவர்களோ கடவு ளாவார். (௫௭)

கரவுடைப் பூதநான்கின் கலப்பினிற் பேத மல்லா
துருவினுக் குயிர்வே றின்றென் றுரைப்பைநின் பொய்மைநூ
இரவினிற் றுயிலுங் காலுன் முகத்தினி லேறிப் போகும்
அரவினைப் பூத பேத மறிந்ததோ வறிவிலாதாய். (௫௮)

உருவமு முயிருங் கூடு முணர்வுனக் கில்லை யிந்த
உருவமிங் கழிந்த காலை யுயிர்கடி தகன்று போகும்
உருவமு முயிருங் கூடிப் பிறக்குமே லிஃதோ லுணறன
உருவமு முயிரும் வேறா மென்றுரை யுன்றன் வாயால் (௫௯)

வானமு மில்லை வானத் தோசையு மில்லைவானம்
ஆனதில் வழக்க தாமென் றாற்றுவை யுன்ற னூலில்
காணிலம் புனறீ நான்குங் கலப்பதற் கிடம தாகும்
நீணவி லோசை வானி னிகழ்ந்துள செய்தி யென்பாய. (௬௦)

இடமிருந் திசைதா னென்ப தில்வழக் கென்னு நீயே
வடநெடுந் திசையிற்போதி மரமென வணக்கஞ் செய்வை
புடவியி லறிவி லாரும் பித்தரும் பொய்ம்மை யோரும
உடனிக ழவையிற் கூறி றொக்குநீ யுரைத்த வெல்லாம். (௬௧)

---

* அருநரகம் - வேதனை சகித்தற்கரிய நரகம்-

மாமுயி ரல்ல வென்னை மன்னுமைம் பூதமான
உருவினர் போல நன்னீ ருணவினாற் கிளைகொண் டோங்குஞ்
சருகெழு முணவின் றாயி னுதலாற் சனன பேதத்
தருவினை யருத்த வெங்கோ னுருயிர்க் கமைத்த தென்பாய. (௬௨)

வன்பெரும் பழுது கோறலு மண்மிசைப் பிறர்செ குத்த
புன்புலா றின்ன னன்றென் றுரைப்பைநின் பொய்ம்மை நூலில்
தின்பையென் றனக்கு நல்லூ னுடலுயிர் செகுத்தே யூட்டி
உன்பசி தணிப்பார் பாவ மெய்துவ துனக்கு நன்றோ. (௬௩)

காரண நிற்க வென்றுங் காரியங் கெடுதல் வீடென்
றாரணம் பரவு மெங்கோ னாகமம் புகல்வார் சொல்வார
போரணங் குயிருஞ் சேரப் பொன்றுதன் முத்தி யென்று
பேரணங் குறற நீயே பிறிவறி யாது சொன்னாய். (௧௪)

அழிந்திடி னைந்து கந்த முத்தியென் றுரைத்தா யைந்தும் (v k. 84)
அழிந்திடின் முத்திபெற்றா ராரென வினவுங் காலை
அழிந்திடு மைந்தி னுண்டா முணர்வென வுரைக்கி னைந்தும்
அழிந்தது மிலதா முத்தி யாவது மில்லை யென்றார். (௬௫)

வேறு.

பொங்குபுகழ் மங்கியுள புத்தனும் வெகுண்டே
எங்கடவு ளில்லைபெறு முத்தியிலை யென்றீர்
உங்கடவுள் யாதுமது முத்தியெது வென்னத்
தங்குசிவ ஞானமுனர் சைவரிது சொல்வார். (௯௬)

ஆலமணி நீழலி லிருந்தற முரைக்குங்
கோலமது கண்டுபலர் கும்பிட நடிப்போன்
மேலணியு நீற்றனுமை கூறனருண் மேவுஞ்
சீலனவ னற்பெருமை * செப்பவெளி தாமோ. (௬௭)

---

* நற்பெருமை - மெய்ம்மையான பெருமை.

தில்லைமணி மன்றிலுறை திங்களணி யெங்கோன்
எல்லையுளனோ மொழிய வென்றருள் புரிந்தே
சொல்லுமள விற்பல தொடுத்துநவி லாதே
நில்லுமிது கூறுமென நீசனி துரைத்தான. (௬௮)

முன்னர்வட நீழலி லிருந்தற மொழிந்தான்
என்னிறைவ னென்னுமுரை யென்னெதி ருரைத்தீர்
மன்னுசெப மாலைகொ டிருக்குமது மற்றோர்
உன்னரிய நற்கடவு ளுண்டென நினைந்தோ (௬௯)

மல்லலுல கத்தவர் வணங்கிட நடிப்பன்
தில்லையிறை யென்னவுரை செப்பினிர் செகத்தே
நல்லறிவி னோர்கள்சிலர் நாடுமவ ருண்டாய்
அல்லதுத மிசைதனி லாடுபவ ருண்டோ. (௭௦)

வையமுழு துய்யமணி மன்றினு ணடிப்போன்
மெய்யணியு நீறனென மேன்மைகொ டுரைத்தீர்
செய்யவொளி தங்குதிரு மேனிதனி னீறே
துய்யதென வோவுமது தொல்லிறை புனைந்தான். (௭௧)

மங்கையொரு பங்கனென வண்மைகொ டுரைத்தீர்
பங்குபடு பெண்வடிவு பாரின்மிசை யுண்டோ
அங்கமொரு பாதிமட மாதினுரு வானல
உங்களிறை நீர்துறவி லுற்றதவ மன்றோ. (௭௨)

என்றவன் மொழிந்தபி னிகழ்ச்சிநகை * செய்தே
மன்றனடி யார்கள்பெரு வாழ்வுபெற வந்தார்
நன்றியுப தேசமிது நற்றவ மிலாதாய்
உன்றனெதிர் சொல்வதல வென்றிது ரைசெய்வார். (௭௩)

* சிரிப்பு உவகைச்சிரிப்பு, கோபச்சிரிப்பு, அவலச்சிரிப்பு, முதலாகப் பலதிறப்படுதலின் அவற்றுள் இது இகழ்ச்சிச் சிரிப்பென்பார் இகழ்ச்சி நகை என்றார்.

ஓங்குசெப மாலைகொ டிருத்த லுலகெல்லாம
ஈங்குயர் தவங்கள்செய வென்றினிது கொள்ளாய்
தாங்கிய படைத்தொழில்கள் சார்பொடு பழக்கும்
பாங்குள பணிக்கர்கர பத்திரம தாகும். (எ௪)

ஈட்டிய தவப்பய னிலாதவர்கள் போலூன்
நாட்டமுடை யாரெதிர் நடித்திடுவ னென்றாய்
காட்டவனல் போலுடல் கலந்துயிரை யெல்லாம்
ஆட்டுமொரு நட்டுவனெம் மண்ணலென வெண்ணாய். (எ௫)

நீற்றினை யணிந்ததுவெவ் வின்னிறைவ னென்றே
சாற்றினை யுயிர்க்கிடர் தணிக்கவென வெண்ணாய்
தோற்றியுள தம்புதல்வர் துன்பமுறும் வெந்நோய்
மாற்றும்வகை யன்னைய ரருந்திய மருந்தாம். (எ௬)

புல்லறிவு கொண்டுபல போததுமொழி புத்தா
நில்லவனலாலொருவர் நீறணிவ துண்டோ
நல்லதிரு நீற்றினுள நன்குமறை தானே
சொல்லுமத லாலொருவர் சொல்லவெளி தாமோ. (எஎ)

பாகமதி லுத்தமியை வைத்தல்பழு தென்றாய்
போகமுலகுக்கருள் புரிந்தருள வென்றே
மாகமுகி லொத்தகுழன் மங்கையொ டிருந்தான்
யோகமுயிர் கட்குதவ யோகவுரு வானான். * (எஅ)

* இங்கே, "போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார், யோகியாய் யோக முத்தி யுதவுத லதுவு மோரார், வேகி யானூற்போற் செய்த வினைகளை வீட்ட லோரார், ஊகியா மூடரெல் லாமும்பரி னொருவ ரென்பர்" என்னுஞ் சிவஞான சித்தித்திருவிருத்தம்) சிந்திக்கற்பாலது.

அந்தர்கர முற்றதடி யன்றியறி யார்போல்*
இந்தமொழி கற்றனே யினிப்பிறிது தேராய்
மைந்துபுனே சந்தவிடை யான்மலரின் மன்னும்
சந்தமென நின்றநிலே கண்டிலேக ணில்லாய். (எக)

ஆதிபர மாதிசிவ யோகியரு வாகுஞ்
சோதிவெகு ரூபிசுக வாரிதுய ரில்லா
நீதிமணி மன்றதனி நிற்குநிலே யல்லால்
யாதுமுடி யாதுபதம் யாரறிவ ரென்றூர். (அ௦)

மைந்தர்மட வார்தமது வாகநிறை வினீயே
இந்தவகை பொய்மமொழி யியம்புவதெ னென்றே
அந்தமில வாகிய வருங்கலேகள் வல்லார
முந்துகலே மாதினே முனிந்திது மொழிந்தார். (அக)

வேறு.

தொக்க நான்மறை சொல்லுநீயிவை சொல்வதென் கலேமாதராய
தக்கன் வேள்வியி லுன்றனுசி தடிந்த தின்று மறப்பதே
முக்க ணுெருவ னில்லேயெனறிடு மூகா நாவையு யகனறுநீ
நகக ஞர்திரு வாணேயேகென நாம டந்தையு மஞ்சினுள். (அ௨)

அஞ்சி வஞ்சகா நாவினின்று மகன்ற பின்பவர் தாமெலாம
நஞ்ச யின்றவர் போலொடுங்கி நடுங்கி மூகைக ளாயினுர்
நெஞ்ச நொந்துபி னீழநாட னிரிணந்தி டுஞ்சிவ ஞான நூல்
எஞ்ச லின்றிய செல்வாபாத மிறைஞ்சி நின்றிது கூறுவான். (அ௩)

சொல்ல வல்லவர் மூகையாயினர் சொல்லி லாவொரு மூகையாம்
வல்லி யென்புதல் விக்குமூகை மறந்து நல்லுரை கூறினுல்
நல்ல தொணட னுமக்குநானென நாய னுரவ டன்னேநீ
ஒல்லே யிங்கழை யென்னவந்தவ ளுண்மை சேரவை நண்ணினுள்.

* போல் - அதுபோல. † கண் - ஞானக்கண்.

நண்ணி யங்குமு னின்றகன்னியை நன்மை யாளரு நாடியே
கண்ணி னின்னருள் செய்துபின்னர் கரைத்து முன்ன நிறுத்தியே
உண்ண டுங்கி யிருந்தபுத்த னுரைத்த தர்க்க மவைக்கெலாந்
தண்ண றுங்குழல் வல்லிநல்லுரை சாற்று கென்று விளம்பினார்.

பற்று*நன்குண ராதபுத்தர் பகர்ந்த தர்க்க மவைக்கெலாம்
கற்று ணர்ந்தவர் போலமன்னிய கன்னி மாறுரை கூறினாள்
மற்று மங்கையர் சாழலாம்விளை யாட லாக மகிழ்ச்சியால்
உற்ற தன்பொரு டன்னைவாசக மாக வுண்மைய ரோதினார். (அஎ)
திருமுறை - 925)

ஈழ மன்னனு மஞ்செழுத்து மியம்பி நீறு புனைந்துபின்
தாழ நின்றடி மைத்திறந்த வறாத தொண்டின னாயினான்
சோழ னும்புலி யூரின்மன்னிய தொன்மை யாளரு மம்பலம்
வாழ்க வென்று துதித்துநின்றெழில் வாத வூரரை யேத்தினார்.(அஅ)

தக்க சீர்பயி லீழமன்னுயர் சைவ னாயெதிர் நின்றுநன்
கக்க மாலை புனைந்துநீறு மணிந்து தொண்டின னானபின்
துக்க மாகிய சீவரத்துவ ராடை மூடி முடம்பினார்
மிக்க காதர மூகைதீர்த்திட வேண்டு மென்று வணங்கினான். (அகூ)

இன்ன வாறருள் செய்குவாயினி யெம்பி ரானென வன்புடன்
பொன்னி சூழ்வள நாடனும்புலி யூரு ளாரு மிறைஞ்சினா
மன்னு சீர்புனை வாதவூரர் மகிழ்ந்து பார்வையை நல்கவே
முன்ன ராக வணங்கியேயவர் மூகை தீர்ந்தது கூறினார். (கூ0)

மாசி லாத மனத்தினாய்முன மன்னு தீவினை செய்தலால்
ஆசி லாதவெண் ணீறணிந்துநலஞ்செ ழுத்துரை செய்திலேம்
பூச லாகிய நீறுடன்புனை யக்க மாலைகள் காவியாம்
தூசு தாதுவ ராடையைச்சுடு வென்று துன்றி வணங்கினார். (கூக)

* பற்று - பற்றப்படும் மெய்ப்பொருள்.

கோட்ட மின்றிய வுண்மையார்நகை கொண்டு நின்ற முகத்தராய்
ஈட்டு முனசெய் தவத்தினுரிவ ரென்று சிந்தையி லெண்ணியே
வாட்ட ருந்திரு நீறணிந்து வயங்கு ருத்திர சாதனம்
பூட்டி யங்கவர் சீவரங்*களர் பொங்கு தீக்கிரை யாகினர். (௯௨)

பொய்யி லாவரு ளையரும்புவி யூரு ளார்களு முன்புசேர்
மைய லாகிய வேடமின்றி வயங்கு நீறணி வார்களும்
துய்ய காவிரி நாடனுந்துக டரு மீழர்த மன்னனும
செய்யய மாமணி மன்றுளார்திரு முன்பு சென்று வணங்கினர். ()

பொன்று கின்றது முத்தியென்று புகன்று நின்றுழல் புத்தர்தாம்
மன்று கண்டு வணங்கியன்புடன் மாபெ ருந்தவ ராவதே
இன்றி தனபொரு ளாவதெனபல வாறு டன்கடன் மீதிலே
சென்ற தணபுன லல்லரோவுயர் தில்லை யெல்லையி னணணினர்.

மன்ற கன்றபின் யாவருஞ்செல வாத வூருறை வள்ளலா
சென்றி லங்கு திருப்புலீசர் சிறந்த பாதம வணங்கியே
ான்றி துன்றிய†வங்கணவைகினா நலல தில்லையு ளாரெலாம்
என்று மிங்கிரு மையா ரினி யென்று தம்மனை யேகினா. (௯௫)

பொன்னி நாடனு மீழநாடு புரந்த மன்னனு முன்புசோ
மன்னு தீவினை தீர்மன்று வணங்கி நீறணி வார்களும்
முன்ன ாக விறைஞ்சிஞான முதிர்ந்த கோவை யகன்றுபோய்
மின்னு மாமணி மாடமாளிகை தம்மி லன்புடன் மேவினர் (௯௬)

புன்மை வேட மகன்றுநீறு புனைந்து ளாகளு மன்னனும
தொன்மை யாதிரு வாதவூரா துலங்கு பாதம் வணங்கியே
நன்மை யாமணி மன்றிறைஞ்சி நயந்து நெஞ்சினில் வஞ்சமாம்
வன்மை யான தொழிந்துதில்லைத மனனு மூரென வைகினா.

புத்தரைவாதில்வென்றசருக்கம் முற்றிற்று

ஆ திருவிருத்தம - ருகo.

---

* சீவரம் - மருதந்துவாரீரில் தோய்த்தபௌத்தபிக்ஷுக்களின் ஆடை; பிக்ஷுக்கள் - துறவிகள். † துன்றிய வினையெச்சமுமாம

# திருவடிபெற்ற சருக்கம்.

உடம்படப் பொய்யை மெய்யா வுரைத்திடுஞ் சமய மென்னும்
தடங்கயத் திரளை வெல்லுந் தனிப்பெரு மடங்க லன்னார்
நெடுந்தவப் பெருமை யாலே நினைப்பருஞ் சைவ ஞானம்
இடம்படப் புகல்வார் பன்ன ரெய்திய செய்தி சொல்வாம். (க)

ஆடல்வெம் படையி னாட்சி யெழுசனியோ டசோ வென்னும்
பாடலுந் தெய்வ லோக யாதிரைப் பத்து மோதித
தேடலுந் திகைப்பு மீளத் தெளிதலுஞ்*சிறுமை கொண்டு
வாடலுங் களிப்பு மில்லா மன்பெரு வாழ்வி லானார். (உ)

போற்றுமஞ் செழுத்து நீறும் புவிமிசை விளங்கத் துன்பம்
மாற்றிடுஞ் சைவ ஞான வாசகம் புகல வந்தார்
சீற்றமில் புலியும் பாம்புஞ் சீர்பெற வணங்கு மன்றில்
ஏற்றினன் புலியூர் மேலைச் சிவபத மென்று கண்டார். (ந)

ஐயரங் குறையு நாளி லாடக மன்றி லாடும்
மெய்யர்தங் கருணை யாலோர் வேதியர் வடிவங் கொண்டு
துய்யமுப் புரிநூன் மார்புந் துலங்குபுத் தகமுந் தோன்றச்
செய்யமென் பாத நோவச் சென்றுமுன் னாக நின்றார். (ச)

முன்புற நின்ற வேத முதல்வரை முகத்தி னோக்கி
இன்புற வாத வூர ரின்மென விருந்த பின்னாக்
கொன்புனை மறையின் மிக்கீ ரெங்குளீர் கூறு மென்ன
மன்பெரு வளஞ்சேர் பாண்டி மண்டலத் திருப்பே னென்றார் (ரு)

---

* சிறுமை கொண்டு வாடல் - இந்திரியங்களின் குறும்புகளைப பற்றிப் பரதந்திரப்படுதல், களிப்பு - தற்போததாலுளதாம் களிப்பு. இல்லா - இவைகளில்லாத. மன்பெருவாழ்வு - எல்லாஞ்சிவன் செயலெனக்கொள்ளுதல.

பாண்டிநா டென்ற பின்னர்ப் பரிவுடன் செறிவு கூறி *
ஈண்டுநீர் வருதல் வேண்டு காரண மியம்பு மென்ன
ஆண்டநா யகன்ற னுணே யாகிய கரும நும்மை
காண்டலே யென்று பின்னுங் கருத்துற விதனைச் சொன்னார். (௬)

மண்ணிடைப் புகுந்து மேலே வானிடைப் பறந்து முன்னர்க்
கண்ணனு மயனுந் தேடிக் காண்பதற் கரியார் தம்மைப்
புண்ணிய மன்றி லாடும் புனிதரைப் பரியிலேறப்
பண்ணுநும் பெருமை யாலே வாழ்ந்தது பாண்டி நாடு (௭)

தென்பெருந் துறையி லையன் றிருவடிச் சேவைசெய்து
துன்பமொன் றின்றி வாவி சூழ்கழுக் குன்றிற் சென்று
பொன்பொலி மன்றி லெய்திப் புத்தரை வாதில் வென்றீர்
என்பது கேட்டுப் பின்னர் யாவரு மகிழ்ச்சி கொண்டார். (அ)

ஆதியை மன்றுளாடு மையனை யன்பி னாலே
ஓதிய தமிழின் பாட லுள்ளவை யோத வெண்ணி
மாதுய ரகல வின்னே வந்தன னெழுதல் வேண்டும்
வேதியர் பெருமா னின்று விளம்பிடும் விளங்க வென்றார். (௯)

விண்ணகம் பரவு நாத னிவ்வகை விளம்பச் சிந்தை
நண்ணுமன் புடைய ராகி நற்சடை முடியார் தம்மை
எண்ணருந் தமிழின் பாட லியம்பிய வைய ரப்போ
துண்ணெகிழ்ந் துளமெய்ஞ் ஞான வாசக முவந்து சொன்னார்.

---

* 'பாண்டிநா டென்றபின்னர்ப்பரிவுடன் செறிவுகூறி' னமை தமக்குத் திருவடிதீக்ஷை செய்யப்பெற்ற திவ்விய திருப்பதியென்னுங் கருத்தாலென்க, தேசாபிமானம்பற்றியன்று, என்னை? ஞானிகட் கஃதில்லையாகலான்.

அங்கவ ருரைத்த தெல்லா மம்பலத் தாடு மையர்
செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப்
பொங்கிய வருளினரும் புகன்றிட ரகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டு மென்றார். (கக)

மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற
முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடிந்த பின்னர்ப்
பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித தங்கண்
மின்னென மறைந்தார் சொன்ன வித்தக ரயர்சசி கொண்டார். ()

எழுந்தன ரெங்கு மோடி நாடின ரிதென்கொ லென்று
அழிந்தனர் மன்று ளாடு மாதியென் றறிந்த பின்னர்ப்
பொழிந்தனர் கணணீ ரெங்கே போயினை யென்று மண்மேல்
விழுந்தனர் பரமானந்த வேலைவெள் ளத்து ளானார். (கரு)

செந்தமிழ்க் கன்பு மிக்கார் சென்றுதம் மன்றி லெய்தி
அந்தரத் தவரை மாலை யயனைநன் முகத்து நாடி
நந்தமக் கடிமை பூண்டு நயந்தவ னொருவன்சொன்ன
இந்தநற் பாடல் கேணமி னென்றவர்க் கருளிசசெய்தார். (கச)

மெய்த்தவ வாத வூரன் விளம்பிட வெழுது மிந்தப்
புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று
முத்தியை யுதவும் கோவை* முடிவிடத தெழுதிப் பின்னாச
சித்திர மலர்க்கை யாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார். (கரு)

வெண்பிறை முடித்த வேணி வித்தக ருலகுக் கெல்லாம்
நண்புடை வாத வூரர் நற்றவ முணர்த்த வெணணி
எண்பெறு முனிவர் விண்ணோ ரிறைஞ்சுமம் பலத்து வாயில்
வண்படி மீதே யுண்மை வாசக முறையை வைத்தார். கசு)

---

* இதன் உள்ளுறை ஏனைக் கோவைகள் போலப் புத்தியின் பாலதன்றென்பார் முத்தியையுதவுங் கோவை என்றார்.

வைத்தபின் பூசை செய்யு மந்தணன் வந்து கண்டிப்
புத்தக மிஙகு நண்ணும் புதுமை தைவிகமா மென்று
சித்தமங் குருகி நின்று தில்லையுள் ளார்கட் கெல்லாம்
இத்திறங கூறல் வேண்டு மென்றுமன் றகன்று போந்து. (கஎ)

செந்திரு மருவுந் தொல்லைத் தில்லைநன் னகரி லுள்ளா
தந்திரு முன்பு சென்று சாற்றினு னிந்த நீர்மை
அந்தணன் மொழிந்த பின்ன ரதிசய மிதுவென் றோடி
வந்தவர் படிமே லண்ணல் வைத்தபுத தகஙகண டார்கள். (கஅ)

யாவருந் தம்முணுடி யெம்மிறை யுறையு மன்றள்
தேவரும் புகுத லொண்ணு தெய்விக மிதுவென் றெணணி
மேவுமன் பதனு லண்ணல் விளம்பிய சைவ நூலோ
தாவுசெந் தமிழோவென்று பார்ப்பது தக்க தென்றூர். (கசு)

தேக்கிய வருளு மன்புஞ் சிறந்தவ ரெல்லாஞ் சொல்லும்
வாக்கினி லொருவன் சென்று மலர்கொடு வணக்கஞ் செய்து
பூக்கமழ் சடையோன் வைதத புத்தகந் தன்னைச சேமம்
நீக்கின னோதி னுன்முன் னீதிகொ ளகவ னுன்கும். (உ0)

வேறு.

திருசசதக முதலாகச சிறந்ததமி ழறநூறும்
விரித்தவகப் பொருட்கோவை விளஙகவொரு நானூறும்
உரைத்தனன்பின் முடிந்தவிடத் தியர்வாத வூரன்மொழி
தரித்தெழுது மம்பலவ னெழுத்தென்று சாற்றினுன். (உக)

கேட்டவர்க ளெல்லோரும் கிளர்புளகங குறவேர்வு
காட்டிடவொண் கணணீருங கசிந்துருகு சிந்தையுமாய்
ஈட்டியமெய்த் தவமுடையோ னியம்பியவித் தமிழன்றி
வீட்டுநெறிக் கினிச்சிவநூல் வேறுளதோ வென்றூர்கள். (உஉ)

பூணரவன் றிருநாமம் புகழுமருந் தவர்சொல்ல
யாணரிதன் பொருடன்னை யின்றுணர்வோ மென்றெண்ணி
மாணுடைமன் றகன்றேகி மறைவல்லார போதிகிழல்
வீணருடன் பெருவாது வென்றவர்முன் சென்றார்கள். (உ௩)

சென்றவர்தந் திருமுன்பு திருமுறைவைத தண்டர்பிரான்
இன்றுசெயுஞ் செயலதுவென் றியம்பினர்கின் றெல்லோரும்
ஒன்றியவென் புன்பாட லுவந்தருளப் புலிமீதில்
அன்றுசெயுந் தவமறியே னென்றழுதா ரன்பாளர். (உ௪)

புண்ணியரிங் கிவ்வாறு புலம்பியபின் புலியூரில்
எண்ணருமன் புடையார்க ளிதமுடனஞ் சலிசெ
பண்ணுலவுஞ் சிவஞானப் பாடல்கொளும் படி
நணுமரன் செய்ததென்னீர் நவிலுமெனச ( கள். (உரு)

அல்லலெனும் பிறவி *யிலா ரண்ணல்செயுஞ் செயலயாவும்
சொல்லினர்பின் புலியூரர் தொழுதுமனங களிகூர்ந்து
தில்லையிலெம் பெருமானைச் செப்பியவித் தமிழ்மாலை
நல்லவரும் பொருள்கூற வேண்டுமென நவின்றார்கள் (உசு)

ஓங்குபுகழ்த் திருவாத வூருறையெம் பெருமானும்
தேங்கியமெய்ச் சிவஞானச் சிந்தையுடன் களிகூர்ந்து
பூங்கனகப் பொதுவெதிரே போய்ப்புகல்வே னெனப்போக
ஆங்கவர்முன் சென்றாரு மன்பொடுபின் சென்றார்கள். (உஎ)

நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பலமெய்தி
ஒன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவரென் றுரைசெய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனரங் கவர்காண. (உஅ)

* அல்லலெனும்பிறவி காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது.

செய்காட்டுங் கழுகடவித் தில்லையுளார் பொருளென்று*
கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினார். (உகூ)

வேறு.

ஈனமிகுந் துளதோலு மென்புநரம் புஞ்சீயும்
ஆனவுடல் சிவரூப மாமிதனைத் தெளியாமல்
ஊனுடலுக் கிரைதேடி யுழன்றுலகிற் றடுமாறி
மாநரகிற் புகுவாரே †மாயைவலைப் படுவார்கள். (௩o)

வேறு.

அண்டனை யண்டர் கோனை யன்பின ரடையு மாறு
கண்டனர் புளக மெய்திக் கம்பித மாகி நின்று
விண்டனர் கசிந்து கண்ணீர் வேர்த்தனர் மேனியெங்கும்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் தில்லை யுள்ளார். ()

வேறு.

பூத நடங்க டொடங்கின போத மகிழ்ந்தனு குங்கண
நாதர் புகழ்ந்தனர் தும்புரு நாரத ரங்கிசை கொண்டனர்
வேதமொ டந்தர துந்துபி மீது முழங்கி யெழுந்தது
மாதவ ரிந்திர ரைந்தரு மாமலர் சிந்தி வணங்கினர். (௩உ)

ஞான நடம்பயில் சங்கர னும மிருந்துள நெஞ்சினர்
மோன சுகந்த முடன்சிவ பூசை முயன்று நயந்தவர்
ஊனமி லன்பொடு தென்புலி யூரி லுறைந்து சிறந்தவா
வானக மும்பர வுந்திரு வாசக வின்ப நுகர்ந்தனர். (௩௩)

* பொருள்கேட்க என்றும் பாடம். † புகுதுமதோ என்றும் பாடம்.

வாதவூ ரந்தணர் தந்திரு வாய்மை விளங்கு திருக்கதை
ஓதின ரன்புட னென்செவி யூடு முகந்தது கேட்டவர்
போதமெய்ஞ் ஞான முறுஞ்சுக போக முடன்புகழ் பெறுவார்கள்
தீதில் பவங்க டொலைந்துபின் சேர்குவர் வணசிவ லோகமே. ()

வேறு.

பூதல மாதும் வாழ்க பொன்மழை பொழிந்து வாழ்க
வேதவா கமமும் வாழ்க வேந்தர்செங் கோலும் வாழ்க
தீதிலைந் தெழுத்து நீறுஞ் சிவனடி யாரும் வாழ்க
வாதவூ ரிறை புராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க * (௩௫)

திருவடிபெற்றசருக்கம் முற்றிற்று

ஆக திருவித்தம் - ௫௪௬.

---

# திருவாதவூரடிகள் புராணம்

முற்றுப்பெற்றது

---

* படித்திடக்கேட்டோர்வாழ்க என்றும் பாடம்; இப்பாடத்திற்கு, கேட்டோர் வாழ்க எனவே படித்தோர் வாழ்க என்பதுந் தானே அமையும் என்னுங் கருத்தால் வேறு கூறாதொழிந்தார எனப்பொருள் கொள்க.

திருச்சிற்றம்பலம்.

# அருட்பாவைந்தின்றிரட்டு.

## தேவாரம்

### பெரியதிருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கு மலந்தார்க்கு மருள்செய் வானை
யாரூரும் புகுவானை யறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே (க)

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்.

## திருவெம்பாவை.

ஈைவியந்தது.

திருவண்ணா ாயிலருளிசசெய்யப்பட்டது

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ஙன்
ஏதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (க)

பாசம்பரஞ்சோதிகென்பாயிராப்பகனும்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளும்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். (உ)

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய் (௩)

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ளம்
உண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய் (௪)

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். (௫)

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணாமே
போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்

தானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவாய்
ஊனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். (சு)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பாய்
என்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னேதுயிலின்பரிசேலோரெம்பாவாய். (எ)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவியம்பும்வெண்சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
வூழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய் (அ)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
உன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோம்
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோம்
இன்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். (கூ)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலும்
ஓதவுலவாவொருதோழன்றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூரேதவன்பேராருற்றாராரயலா
ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (௧௦)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
ஐயாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குல்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
ஐயாநீயாட்கொண்டருளும்விளையாட்டின்
உய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய் (௧௧)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய் (௧௨)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தால்
தங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த

பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பசிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கங)

காதார்குழை டப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம் லம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோ ரெம்பாவாய். (கச)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகணபனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூணமுலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கரு)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவம்
என்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கும்
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். (கசு)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௭)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். ()

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தால்
எங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
எங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
இங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். (௧௯)

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்

போற்றியெல்லாவுயிர்க்குமீ றாமிணையடிகள்
போற்றிமாலுன் முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன் மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். (உ0)

திருச்சிற்றம்பலம்

---

# திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின் றிரணமணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே (க)

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன் றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே. (உ)

அற்புதத்தெய்வமிதனின் மற்றுண்டே
யன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமன்றாறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையும்
கற்பகப்பொழிலுமுழுதுமாநகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௩)

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு.

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரணமேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (க)
பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
காலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (உ)

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதிய [illegible] தாடுவான்
மலர்சிலம்படிவா [illegible] ணங்குவாம் (க)

தண்ணளிவெண்குடைவேந்த [illegible] யல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்த [illegible] ானவர்பூமழைபொழிந்தார்
அண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான். (உ)

ஆலமேயமுதமாகவுண்டுவானவர்க்களித்துக்
காலனைமார்க்கண்டற்காக்காய்ந்தனையடியேற்கின்று
ஞாலநின்புகழேயாகவேண்டுநான்மறைகளேத்தும்
சீலமேயாலவாயிற்சிவபெருமானேயென்றார் (ங)

திருச்சிற்றம்பலம்.

அருட்பாவைந்தின்திரட்டு
முற்றுப்பெற்றது

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 26 | ஓடுவெகுமானும் | ஓடுவெகுமானும் |
| 15 | 29 | ரசேன் | சேரன் |
| 16 | 6 | சிறக்கும் | ிறக்கும் |
| ,, | 15 | செல்லாா | செல்வார் |
| 19 | 26 | உயர்க்சி | உயர்சசி |
| 21 | 19 | பிறாநுாக | பிறர்நுகர |
| 27 | 24 | ிலங்குஞ்சம் | சிலக்குஞ்சம் |
| 31 | 12 | வாலமலாந் | வாய்மலர்ந் |
| 32 | 26 | பொய்மெலா | பொய்யெலா |
| 33 | 8 | ஏன்றுபின் | என்றுபின் |
| 37 | 21 | னமைக்சரி | னமைசசரி |
| 43 | 15 | தடமபுரிசைச | கடம்புரிசை |
| 45 | 20 | முடிததன | முடித்தலை |
| 48 | 22 | தருககிமருத | தருக்கிமருத் |
| 49 | 22 | றஙகுகரங்காற் | றங்குகருங்காற் |
| 55 | 26 | முனைவனூற் | முன்னைவனூர் |
| 56 | 23 | திரைஞ்ச | திறைஞ்ச |
| 57 | 18 | பரித்திர | * பரித்திர |
| ,, | ,, | * பாமபுக | † பாம்புக |
| 63 | 4 | பட்டபோதில | பட்டபோதில், |
| , | 11 | பாதச | பாதச, |
| ,, | 30 | சிந்திக்சற்பலன | சிந்திக்கற்பாலன |
| 73 | 5 | பொய்யரோ | பொய்யனோ |
| ,, | 9 | தீதறச | தீதறச |
| ,, | 22 | திருமுன | திருமுன் |
| 71 | 28 | *(ஒரு சறறகலா தமர் நீரிவ என்றும் பாடம்) | இதை 73-ம் பக்கத்தின் கீழ் லை[illegible] வாசிக்க |
| ,, | ,, | முன்புதமக்க, | [illegible] |
| 76 | 23 | *(கபிலையாண-கருதல்) | [illegible] பக்கத்தின் கீழ் [illegible]வாசி[illegible] |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 79 | 26 | *(சிவஞானமத்தமிழ் என்றும் பாடம்) | இதை 78 ம் பக்கத்தின் கீழ் வைத்து வாசிக்க |
| 80 | 16 | மென்ஞேமிது | மென்ஞேவிது |
| ,, | 23 | *(புலியூரி ...உணாக) | இதை 19-ம் பக்கத்தின் கீழ் வாசிக்க |
| 83 | 12 | சழநாடு | ஈழநாடு |
| ,, | 14 | ரிடங்தொறுங | ரிடங்தொறும் |
| 85 | 2 | மனைத்தினுக்கும் | மனைத்தினுக்கும், |
| ,, | 16 | தீமனமும் | தீமனமும். |
| 88 | 26 | (உரு) | (ருஉ) |
| 90 | 24 | தங்..வரு | தங்கவன் |
| 93 | 19 | ஞாவில | ஞாலில |
| 94 | 13 | (கச) | (கூ) |
| 97 | 8 | நிற்குநிலே | னிற்குநிலே |
| 106 | 3 | ஞெண்செவி | ஞெணசெவி |

பிழை திருத்தம் முற்றிற்ற